24 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com 416-282-4978



RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்



Jey Ahamparam P.F.P

Insurance Advisor

RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்

(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

Call: 416.301.1733



FREE

Real Estate Classes start every week

Call:416.321.6969



நதி 24 | பாலம் 18 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | SEPTEMBER 15, 2014


# ஒன்ராரியோ உள்ளூராட்சிமன்ற தேர்தல் தமிழ் வேட்பாளர்கள்







ஒக்ரோபர் 27, 2014 இல் ஒன்ராரியோ மாகாணத்தில் உள்ள 444 உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களையும் (Councillors) உள்ளூராட்சிமன்ற தலைவர் களையும் (Mayors), மற்றும் பாடசாலை சபை உறுப்பினர்களையும் (School Board Trustees) ஒன்ராரியோ வாக்காளர் தெரிவு செய்யவுள்ளனர்.

தமிழர் பலர் இதுவரை உள்ளூராட்சிமன்ற தேர்தல்களில் போட்டியிட்ட போதும், லோகன் கணபதியை தவிர வேறு ஒருவரும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினராக இதுவரை தெரிவு செய்யப்படவில்லை. லோகன் கணபதி அவர்கள் மார்க்கம் நகரசபை உறுப்பினராக பதவி வகிக்கிறார். இம்முறை நடைபெற உள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ரொறொன்ரோ மாநகரசபை உறுப்பினர் பதவிக்கு 9 பேரும், மார்க்கம் நகரசபை உறுப்பினர்பதவிக்கு 6 பேரும், Whitchurch - Stouffville பட்டண சபைக்கு 2 பேரும், பிரம்ரன் நகரசபைக்கு ஒருவரும், அஜக்ஸ் பட்டணசபைக்கு ஒருவருமாக 19 தமிழர் போட்டியிடு கின்றனர்.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை வரும் ஒக்ரோபர் மாதத்தின் நாலாவது திங்கட்கிழமை நடைபெற வேண்டும் என ஒன்ராரியோ மாகாண அரசின் சட்ட மூலம் வரையறுத்துள்ளது. இம்முறை இத்தேர்தலில் 2800 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களையும் 700 பாடசாலை சபை உறுப்பினர் களையும் ஒன்ராரியோ மக்கள் தெரிவு செய்ய வுள்ளனர். கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூ ராட்சி மன்ற தேர்தலில் 8000 இற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். 2014 இல் நடைபெற உள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் மற்றும் சமர்ப்பித்த நியமனப்பத்திரத்தை திரும்பப் பெறும் இறுதி நாள் செப்ரெம்பர் 12, 2014.

## ரொறொன்ரோ மாநகர-சபை

ரொறொன்ரோ மாநகரசபைக்கு மாநகர-சபை தலைவரும் 44 மாநகரசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ள னர். ரொறொன்ரோ மாநகரசபைக்கு உறுப்பினர்களாக வர நியமனப் பத்திரம் தாக்கல் செய்துள்ள தமிழ் வேட்பாளர்கள் விபரம்

### வட்டாரம் 37 - ஸ்காபரோ மத்தி

**நிரஞ்சன் பாலச்சந்திரன்**

இந்த வட்டாரத்தில் இவருடன் சேர்ந்து தற்போதைய மாநகரசபை உறுப்பினர் Michael Thompson உட்பட மூவர்


தொடர்ச்சி 12ஆம் பக்கம்


# றொப் போர்ட் பதவி விலகல்

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ள ரொறொன்ரோ நகரசபைத் தேர்தலில் நகர பிதாவிற்கான போட்டியில் இருந்து சுகயீனம் காரணமாக விலகுவதாக ரொறொன்ரோவின் நகரபிதா றொப் போர்ட் அறிவித்துள்ளார். மேலும் இத்தேர்தலில் எற்ரோபிக்கோ தொகுதி 2இல் நகரசபை உறுப்பினருக்கான தேர்தலில் தான் போட்டியிடப் போவதாக கூறியுள்ளார். இதேவேளை நகரபிதாவிற்கான போட்டியில்



றொப் போர்ட்டின் சகோதரரான டக் போர்ட் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார்.





LEXUS OF RICHMOND HILL

LEXUS

I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.

குமார் ஜெகசோதி



Kumar Jegasothy

Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...

ரவி பரமு

Real Estate Broker



Cell: 416-262-4176

Bus: 416-298-3200

HomeLife/Today Realty Ltd.,

Brokerage*

31 Progress Ave. Suite 210, Toronto

*Independently owned and operated

MORTGAGE

Best Rates wih Major Banks/Companies



Pasky Kanagasabapathy

Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098

Fax: 416-291 3601

pkanagasabapathy@orianafinancial.com

- Residential/Commercial needs
- Purchase/Refinancing/Renewal/Switch
- Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
- Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident

Oriana Financial Group of Canada Ltd.

Company#10214

இப்பொழுது 2 இடங்களில்

DENTAL OFFICE

Dr. Iru Vijayanathan,

BDS, FAGD, MFDS RCPS (Glasg)

DENTAL SURGEON

- அவசரகால பல் வைத்திய சேவைகள்
- பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
- பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
- பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
- முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
- சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்

3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232

3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

THE TRUSTED MORTGAGE SPECIALISTS

"I Work for you Not for the Bank"

BonaFide

Some Terms & Conditions May Apply



•I will arrange your 1st Mortgage with 5% down.
•Need a 2nd Mortgage??? "When banks says no We says yes" @ interest rate starting from 6.99%+.

Thayalan Goblakrishnan

(M12001612)

தயாளன் கோபாலகிருஷ்ணன்

Contact: 416.575.3211

E-Mail: thaya.gobal@gmail.com










# 25 ஆவது ஆண்டில் விளம்பரம் நடத்தும் உலகளாவிய போட்டி

ரொறொன்ரோவில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் விளம்பரம் பத்திரிகை 25வது வருடத்தை (1991 - 2015) முன்னிட்டு நடத்தும் தமிழ் சமூக-இலக்கிய-வரலாற்றுப் போட்டி. போட்டிக்கான படைப்புக்கள் பின்வரும் முகவரிக்கு ஜனவரி முதலாம் திகதி 2015க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். அஞ்சல் உறையில் அல்லது மின்னஞ்சல் பொருள் பகுதியில் '25வது ஆண்டு விளம்பரப் போட்டி' என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி
Vlambaram Publication Inc.
GTA Square,
5215 Finch Ave. East, #201
Toronto ON, M1S 0C2
மின்னஞ்சல் முகவரி:vlambaram@sympatico.ca

போட்டியில் வெற்றிபெற்ற மூன்று படைப்புக்களை தவிர ஏனையவற்றிற்கு எவ்வித பணமும் வழங்கப்பட மாட்டாது. ஆனால் சிறந்ததென நடுவர்களால் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் விளம்பரம் பத்திரிகையிலும் விளம்பரம் மற்றும் தமிழ்வணக்கம் இணையத்தளங்களிலும் பிரசுரிக்கப்படலாம்.

படைப்புக்கள் முன்னர் பத்திரிகைகள், இணையங்கள் உட்பட்ட மற்றைய ஊடகங்கள் எதிலும் பிரசுரமாகியிருக்கக் கூடாது. இதனை எழுத்தாளர் படைப்பின் முகப்பகுதியில் உறுதிப்படுத்த வேண்டும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் விளம்பரம் பத்திரிகையில் வெளியிடப்படும்.

போட்டி 1
குறுநாவல் போட்டி

9,000-12,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

போட்டி 2
திரைப்படக் கதைப் போட்டி
(Script Writing)
1500-2000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

போட்டி 3
கவிதைப் போட்டி

60-100 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

போட்டி 4
கட்டுரைப் போட்டி

பின்வரும் தலைப்புக்களில் ஒன்றில் கட்டுரையை எழுதி அனுப்பலாம்.

1. புகலிட பொருளாதாரத்தில் தமிழரின் பங்கு

2. தமிழரின் கலையும் பண்பாடும்

3. தகவல் தொழில்நுட்பத்தில் தமிழரின் பங்கு

4. மருத்துவமும் தமிழரும்

1,500 - 2,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

நன்கொடை: போட்டி 1இன் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 1,000, 500, 300 வழங்கப்படும்.

நன்கொடை: தனித்தனியே போட்டி 2, 3, மற்றும் 4இற்கும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 500, 300, 200 என வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 8.5"-11" (A4) தாளில் 11pt எழுத்துரு அளவில் தமிழ் unicode font இல் தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சல் மூலம் அனுப்புபவர்கள் word ல் ஆக்கத்தை பதிவு செய்து இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சலின் முகப்பில் ஆக்கத்தை பதிவு செய்ய வேண்டாம். படைப்பாளியின் முழுப்பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம் உறுதிப்படுத்தலும் படைப்பின் முன் பகுதியில் தனித்தாளில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். போட்டி உலகில் வாழும் தமிழர்கள் அனைவருக்குமானது. விளம்பரம் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களோ விளம்பரத்தின் எழுத்தாளர்களோ இப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது.

# சம்பந்தனின் கோரிக்கையும் அரசின் நிராகரிப்பும்


AABS DON VALLEY PEST CONTROL INC.
Please Call @ 647-931-7124 OR 1-800-816-6406
ABDV PEST CONTROL
The Name You Can Trust

Licensed Graduate Exterminator, Insured and 10 years Experience Free Inspection, Free Estimates & Guaranteed services in GTA and out of GTA We control Cockroaches, Bedbugs, Mice, Flea, Wasps/Bees, Earwigs ,Carpenter ants and other ants, Fruit Flies, Drain flies, Silver fish, Centipedes, Spiders etc. We provide pest control services for Residential, Commercial, Industrial, Food Warehouses, Food Processing and Packaging industries.


தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுக்களுக்கு ஒரு கால வரையறை வேண்டும் எனவும், அப்பேச்சுக்களுக்கு ஒரு சர்வதேச நடுநிலையாளர்- பார்வையாளர் அவசியம் எனவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் 15வது தேசிய மாநாடு மூன்று நாட்கள் வவுனியாவில் நடைபெற்ற போது அதன் நிறைவு நாளன்று சம்பந்தன் ஆற்றிய உரையில் இதனை அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவிலேயே பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டும், அதில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு கலந்து கொள்ள வேண்டும், கூட்டமைப்பினர் அதில் கலந்து கொள்ளாமலிருப்பதே தமிழர்களின் பிரச்சினை தீர்விற்கு தடையாக இருக்கின்றது என இலங்கை அரசு தொடர்ந்து கூறி வருகின்றது. அரசுடன் இணைந்து செயற்படும் சில தமிழ் கட்சிகளும் இதனை ஆமோதித்து வருகின்றன. இந்நிலையில், இரா. சம்பந்தன் மேற்படி கருத்தை தெரிவித் திருக்கின்றார். அவர் தெரிவுக் குழுவில் கலந்து கொள்வது குறித்து வெளிப்படையாக கருத்து வெளியிடாவிட்டாலும், தெரிவுக் குழுவில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு கலந்து கொள்வதானால் மேற்படி விடயங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று கூறியதாகவே கருத முடிகின்றது.

பேச்சுக்கள் ஆறு வாரத்திற்குள் நிறைவு செய்யப்பட வேண்டும், சர்வதேச பார்வையாளர் வேண்டும் என்பதே குறிப்பாக அவர் தெரிவித்துள்ள விடயமாகும். இதனை யாரும் தவறு என்றோ, கடும் நிபந்தனை என்றோ கருத முடியாது. ஆனால், அரசாங்கம் இதனை உடனடியாக நிரா-கரித்துள்ளது. அரசாங்கத்தை எவரும் பயமுறுத்தி அடி பணிய வைக்க முடியாது, இனப்பிரச்சினைக்கு நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் மூலமாகவே பேச்சுக்கள் நடத்தப்படும், தனியே தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேச்சுக்கள் நடத்தப்பட மாட்டாது என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற தெரிவுக்குழு என்று வரும் போது அதில் தனியே தமிழ் தேசியக்கூட்டமைப்பு மட்டும் கலந்துகொள்வதென்பது இல்லை. ஆனால், தமிழர்களின் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கான பிரதான அமைப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்புத்தான் என்பதை எவரும் மறுக்க முடியாது. இதனை இலங்கை அரசாங்கம் புரிந்துகொண்டதனால் தான் கூட்டமைப்பை பேச்சுக்கு வருமாறு அழைத்து கொண்டிருக்கின்றது. இல்லாவிட்டால் அரசுடன் இணைந்து செயற்படும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்டே பேச்சுக்களை நடத்திவிட்டு ஒரு தீர்வை அறிவிக்கலாம்.

ஆனாலும், விதண்டாவாத கருத்துக்களை அரச தரப்பினர் தெரிவித்து வருகின்றமையைத்தான் அமைச்சரின் மேற்படி கருத்தும் வெளிப்படுத்துகின்றது. மற்றுமொரு அமைச்சரான பேராசிரியர் திஸ்ஸ விதாரண, இரா.சம்பந்தனின் கருத்திற்கு கடுமையான விமர்சனத்தை வெளியிட்டிருக்கின்றார். திஸ்ஸ விதாரண நீண்ட கால இடதுசாரி பாரம்பரியத்தைக் கொண்டவர். தமிழர்களின் பிரச்சினை நியாயமான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என முன்னர் கூறி வந்தவர். இனப்பிரச்சினை தீர்விற்காகவென முன்னர் அமைக்கப்பட்டு நடைமுறைச் சாத்தியமற்றுப் போன சர்வகட்சிக் குழுவின் தலைவராக இருந்தவர். அவர், சம்பந்தனால் விடுக்கப் பட்ட நிபந்தனைகளுடன் இணங்க முடியாது எனவும், நிபந்தனைகள் இன்றி கலந்துரையாடல்களை நடத்துவது என்றால், அது சிறந்ததாக அமையும் என்றும், நாட்டின் அரசாங்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அல்ல என்பதனை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித் துள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பே நாட்டின் அரசாங்கம். சிறுபான்மை என்ற விதத்தில், பெரும் பான்மையினருக்கு, அவர்களினால் நிபந்தனைகளை விடுக்க முடியாது. நிபந்தனைகள் இன்றி கலந்துரையாடல்களை அவர்கள் நடத்த முன்வர வேண்டும் எனவும் அவர் கூறுகின்றார்.



கால வரையறை குறித்து அவர்களுக்கு நிபந்தனைகளை விடுக்க முடியாது. கலந்துரையாடல்களின் போது எழுகின்ற பிரச்சினைகள் என்னவென்பது குறித்து அவர்கள் பார்க்க வேண்டும். அவை குறித்து கலந்துரையாடல்களை நடத்த வேண்டும். சர்வதேச தலையீடுகள் குறித்த முடிவுகளை நாட்டின் அரசாங்கமே எடுக்க முடியும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார். அதேவேளையில், உதவிகளை வழங்குமாறு தென்னாபிரிக்காவிற்கு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார் என்பதையும் அவர் சுட்டிக் காட்டுகின்றார். சம்பந்தனின் கோரிக்கைகளில் இன்னார் தான் நடுநிலையாள ராக வரவேண்டும் என்கின்ற நிபந்தனைகள் எதுவும் இல்லை. அரசாங்கத்தினால் தொடர்பு கொள்ளப்பட்டு அல்லது அழைப்பு விடுக்கப்பட்ட தென்னாபி ரிக்க நடுநிலையாளரை நியமித்தால் கூட, அதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பு தெரிவிக்கப் போவதில்லை.

ஏனெனில், தென்னாபிரிக்க உப ஜனாதிபதி ரமபோஸ அவர்கள் தென்னாபிரிக்க ஜனாதிபதியினால் இலங்கை விவகாரங்களுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கு முன்னதாக இலங்கை அரசாங்கம் தென்னாபிரிக்க சென்று பேச்சுக்களை நடத்தியுள்ளது. பின்னர் தமிழ் தேசியக்கூட்டமைப்பை தென்னாபிரிக்கா அழைத்து பேசியது. அதன் பின்னர் ரமபோஸ இலங்கைக்கு வருகை தந்து அரச-தரப்பினரையும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினரையும் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார். அவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுடனும் கலந்துரையாடல்களை நடத்தினார். ரமபோஸ தென்னாபிரிக்கா திரும்பிய பின்னர் மேற்படி இவ்விடயம் குறித்து பெரியளவில் தகவல்கள் வெளியிடப்படவில்லை. அவரது தொடர்ச்சியான பங்களிப்பு குறித்தும் எவ்வித முன்னேற்றமும் நிகழ்ந்ததாக இல்லை.

இலங்கை அரசாங்கமே தென்னாபிரிக்காவின் உதவியை முதலில் நாடியது. தென்னாபிரிக்க அனுசரணையை தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் ஆதரித்தனர். இவ்வாறிருக்க, பேச்சுவார்த்தைகளில் வெளியாரின் தலையீடுகளை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அரசாங்கத் தரப்பினர் அடிக்கடி அழுத்தமான தொனியில் கூறி வருகின்றனர். சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ இந்திய ஊடகமான த ஹிந்துவிற்கு அளித்த செவ்வியிலும் வெளியாரின் தலையீடுகளை முற்றாக தாங்கள் நிராகரிப்பதாக தெரிவித்திருக்கின்றார். அவ்வாறெனில் எதற்காக தென்னாபிரிக்க உதவியை அரசாங்கம் நாடியது என்பதற்கு அரச தரப்பினர் தான் பதில் கூற வேண்டும். இலங்கையின் பல அரசாங்கங்களுடனும் 60 வருடங்களாகப் பேசியிருக்கின்றோம். இனிமேல் பேசுவதற்குப் புதிதாக ஒன்றுமில்லை. பேசப்பட்டவையெல்லாம் எழுத்தில் இருக்கின்றன. நீண்ட காலம் பேச்சுக்களை நடத்தவேண்டிய அவசியமில்லை. சுருக்கமாகப் பேசி பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று சம்பந்தன் தெரிவிக்கின்றார். பேச்சுக்கள் நடத்துகின்றோம் என்று உலகத்திற்குக் காட்டுவதற்காக நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் எமக்கு அவசியமில்லை என்றும், ஒரு காலவரையறை பேச்சுக்களுக்கு அவசியம் எனவும் அவர் தெரிவிக்கின்றார். பத்து வருடங்களாகப் பதவியில் இருக்கின்ற ஜனாதிபதி, அனைத்துக் கட்சிகளையும் கூட்டிப் பேசி, நிபுணர்களையும் அழைத்துப் பேசியிருக்கின்றார், அப்போது அவர் முற்போக்கான கருத்துக்களைக் கூட வெளியிட்டிருந்தார் என்றும் சம்பந்தன் குறிப்பிடுகின்றார்.

இன்று ஐ.நாவின் சர்வதேச நிபுணர் குழுவை நிராகரித்துள்ள அரசாங்கம், வேறு ஒரு சர்வதேச குழுவை அழைத்து காணாமல் போனவர்கள் தொடர்பிலான பிரச்சினைக்கு ஆலோசனை வழங்க நியமித்துள்ளது. இதனைப்போல், அசாங்கமே தொடர்பு கொண்ட, அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தென்னாபிரிக்க பிரதிநிதியையே இரு தரப்பு பேச்சுக்களுக்கு நடுநிலையாளராக ஏன் நியமிக்கக் கூடாது? அவ்வாறு நியமித்தால் அதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பும் மறுக்கப் போவதில்லை. ஆனால், மனமிருந்தால்தானே எதுவும் நடக்கும்.

**- விகிர்தன் -**


APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6


# நல்ல மரணம் ஏற்பட என்ன செய்ய வேண்டும்

கேள்வி: என் தாயார் இறக்கும் தருவாயில் இருக்கிறார். அவரை இறப்பிற்கு தயார்படுத்த சிறந்த வழி என்ன?

சத்குரு: உலகமெங்கும், மக்கள் அமைதியாக இறப்பதைப் பற்றிப் பேசுகிறார்கள். அவர்கள் அமைதியாகப் போய்விட நினைக்கிறார்கள். இப்படி ஒரு மனிதர் இறப்பை நெருங்கிக் கொண்டிருக்கும் தருணத்தில், அவர் அருகில் நீங்கள் ஒரு விளக்கேற்றி வைக்கலாம். அதில் நெய் இருந்தால் நல்லது அல்லது வெண்ணையைக் கூட பயன்படுத்தலாம். அந்த விளக்கை தொடர்ந்து 24 மணி நேரமும் அந்த நபருக்குப் பக்கத்தில் எரிய வைக்கலாம். இது அவரைச் சுற்றி ஒரு சக்தி வளையத்தை உருவாக்கி, மரணத்தின் கொந்தளிப்பை ஓரளவுக்கு கட்டுப்படுத்தும். இன்னொரு விடயமும் செய்யலாம். அந்த நபர் விரும்பினால், நீங்கள் ஒரு மந்திர உட்சாடனையை CD இல் மிகக் குறைவான ஒலியில் ஒலிக்கச் செய்யலாம். இதைப் போன்ற பிரதிஷ்டை செய்யப்பட்ட ஒரு ஒலி பின்னணியில் ஒலித்தால், கொந்தளிப்பான தன்மையை விலக்கிக்கொள்ள முடியும்.

ஒரு மனிதர் இறந்தால், உடலில் உள்ள அவரது முடிகளும், நகங்களும் 11 நாட்கள் வரை வளரும்.

இந்த ஏற்பாடுகளை ஒருவர் இறந்துவிட்டார் என்று அறிவிக்கப்பட்ட பிறகு 14 நாட்கள் வரை செய்ய வேண்டும், ஏனென்றால் அவர் மருத்துவரீதியாக இறந்திருந்தாலும், இந்தப் பிரபஞ்சத்தைப் பொறுத்தவரை அவர் இறக்கவில்லை. அவர் முழுமையாக இறக்கவில்லை. மரணம் மெதுவாகத்தான் நிகழும். ஒரு மனிதர் இறந்தால், உடலில் உள்ள அவரது முடிகளும், நகங்களும் 11 நாட்கள் வரை வளரும் பெரும்பாலும் 14 நாட்கள் வளரும் என்று முன்னரே நீங்கள் அறிந்திருக்கலாம். இது ஏனென்றால் மரணம் மெதுவாகத்தான் நடக்கிறது. அது முழுமையடையவில்லை. உடலில் இருந்து உயிர் பிரியும் இந்த செயல்முறை படிப்படியாக நடக்கிறது. நுரையீரல், இதயம், மூளை ஆகியவற்றின் செயல்பாடுகள் நின்று விட்டதால், மருத்துவரீதியாக அவர்கள் இறந்தவர்களாக அறிவிக்கப்படுகிறார்கள், ஆனால் அப்படி இல்லை. அந்த மனிதரின் உடல் எரிக்கப்பட்டாலும், அவர் இன்னும் இறக்கவில்லை, ஏனென்றால், அவர் இன்னும் அடுத்த பயணத்தைத் துவங்கவில்லை.



அதனால்தான் ஒருவர் இறந்து 14 நாட்கள் வரை இந்தியாவில் பல்வேறு சடங்குகள் நடக்கின்றன. துரதிருஷ்டவசமாக, இவற்றின் பின்னணியிலிருக்கும், புத்திக்கூர்மையும் சக்தியும் பெரும்பாலும் தொலைந்துவிட்டன. வெகு சிலர்தான் இவற்றின் முக்கியத்துவத்தைப் புரிந்திருக்கிறார்கள். எனவே ஒருவர் மரணமடைந்த பிறகு செய்யும் முதல் வேலை, அவர்கள் உடலுடன் மிக நெருக்கமாக இருந்தவற்றை, உதாரணத்துக்கு உள்ளாடைகளை எரித்து விடுவார்கள். நகைகள், மற்ற துணிகள், மற்றவை எல்லாம் முதல் மூன்று நாட்களுக்குள் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் - யாரோ ஒருவருக்கு மட்டும் அல்லாமல் பலருக்கு வினியோகிக்கப்பட்டு விடும். யாராவது ஒருவருக்கு இறந்தவருடைய பொருட்களை மூட்டையாகக் கட்டிக் கொடுத்தால், அவர்கள் அங்குதான் செல்வார்கள். ஏனென்றால், அவர்கள் அந்தத் துணிகளில் இருக்கும் தங்கள் சொந்த உடலின் சக்தியின் மீது பற்று கொண்டிருப்பார்கள்.

'உங்கள் எதிரி இறந்து கொண்டிருந்தால் கூட, நீங்கள் அவருக்காக கொஞ்சம் அமைதியான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். தவறான செயல்களை செய்யக்கூடாது'.

இவையெல்லாம் மரணமடைந்தவர்களை திருப்திப்படுத்துவதற்காக மட்டுமல்லாமல், அவரது குடும்பத்தையும், உறவினர்களையும் சமாதானப்படுத்துவதற்காகவே செய்யப்பட்டது. இதனால் அவர்கள், எல்லாம் முடிந்து விட்டது என்று புரிந்து கொள்வார்கள். நீங்கள் அவருடன் எத்தனை நெருக்கமாக, பற்றுதலோடு இருந்தீர்கள் என்பது முக்கியமில்லை. ஆனால் அது நிகழ்ந்து விட்டால், அவ்வளவுதான் விளையாட்டு முடிந்துவிட்டது என்பது உங்களுக்கு புரிந்துவிடும்.



சத்குரு வாசுதேவ்

பொதுவாக, உலகெங்கிலும், கலாச்சார வித்தியாசமில்லாமல், 'உங்கள் எதிரி இறந்து கொண்டிருந்தால் கூட, நீங்கள் அவருக்காக கொஞ்சம் அமைதியான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். தவறான செயல்களை செய்யக்கூடாது' என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த விழிப்புணர்வு எல்லா கலாச்சாரங்களிலும் இருக்கிறது, இல்லையா? ஒருவர் இறந்துவிட்டார், விளையாட்டும் முடிந்து விட்டது. இப்போது பந்தை உதைப்பதில் பயனில்லை.

இதனால்தான், இறந்தவர்களை மரியாதையுடன் நடத்தாதபோது, உங்களுக்குள் இருக்கும் ஏதோ ஒன்று வருத்தப்படுகிறது. அவர் எப்படி வாழ்ந்தார் என்பது முக்கியமில்லை இறப்பாவது நிச்சயமாக நன்றாக நடக்க வேண்டும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:**
www.innerengineering.org

## வாசகர் எண்ணம்

பிரதம ஆசிரியர் விளம்பரம்,

திரு. அ. சுரேஸ் (அகணி) அவர்களால் கடந்த 52 வாரங்களாக கணினி பற்றி தங்கள் பத்திரிகையில் எழுதி வந்த கட்டுரை சென்ற வாரத்துடன் முடிவுக்கு வந்துள்ளது. கலைச் சொற்களுடன் கூடிய இக்கட்டுரையை பலர் படித்து பயன் பெற்றிருந்தாலும், நாம் அவர்களை விட ஒருபடி மேலே பயன் பெற்றிருக்கின்றோம். எவ்வாறெனில், குறித்த கட்டுரையில் சொல்லப்பட்ட விடயங்கள் யாவற்றையும், மூத்தோர் மேம்பாட்டு கழக அங்கத்தவர்களாகிய எங்களுக்கு செயல் முறை மூலமும், விளக்க உரைகள் மூலமும் தன்னார்வ தொண்டனாக கற்றுத் தந்துள்ளார்.

முன்னர் கணினி பற்றி எதுவுமே அறிந்திராத நாங்கள் இன்று வலையமைப்பு (Internet), மின்னஞ்சல் (E-Mail,) தமிழ் ஆங்கில தட்டச்சு, முகநூல் (Face Book) போன்ற துறைகளுடன், Photography, calendars, greeting cards, business cards போன்ற வேலைகளை கணினியில் செய்வதற்கும் கற்றுத் தந்துள்ளார். இவற்றில் நாம் பயிற்சி பெற்று பயன் அடைகின்றோம் என்றால், அந்தப் பெருமை, குறித்த கட்டுரையை எழுதியதோடு, எங்களுக்கு செயல் மூலம் கற்றுத்தந்த திரு.சுரேஸ் அவர்களுக்கும், அக்கட்டுரையை பிரசுரித்த தங்கள் பத்திரிகையுமே சாரும். திரு. சுரேஸ் அவர்களுக்கும், தங்கள் பத்திரிகைக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி
அன்புடன்

மார்க்கம் சந்திரன் - 416.844.7453 E-Mail: chandranvela07@gmail.com
பவானி சந்திரன் - bavany13@gmail.com - markham



# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

"மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது!



**YES We can !**

லைன் ஒப் கிரெடிட் எடுக்க, குறைந்த வீதத்தில் மோட்கேஜ் பெற்றுக்கொள்ள, ரீபைனான்ஸ் செய்ய, 2வது, 3வது மோட்கேஜ் எடுக்க, பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ் எடுக்க, பவர் ஒப் சேல் நிலைமை தவிர்க்க, வீட்டினை வாடகைக்கு விட, கடன்களை ஒன்றுபடுத்த

அழையுங்கள்

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for appointment)

**வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00**

5 Yrs Fixed Rate : 2.79 % *OAC

5 Yrs Variable : Prime - .70% (2.3 %)

அத்துடன் உங்கள் வீடு விற்பனைக் கொமிசனை நீங்களே தீர்மானியுங்கள். எமது மிகக் குறைந்த விற்பனைக் கொமிசன் $1000* மட்டுமே!

WIN UP TO $100,000*

Everyone Who Funds A Mortgage With US Ask How !

*See contest rules at www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER=RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate Office :
2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-356-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE

#1 Brokerage in Toronto*

Corporate Office :
112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1W3
Office Phone : 416-391-3232



எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
Cell : 647-861-8240

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843

# தாயக மடல்

## அரசியலாக்கப்பட்டுள்ள மீனவர் பிரச்சினைக்கு தீர்வு என்ன?

இந்தியா, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண உதவுமா என கேட்டார் நண்பர் ஒருவர். பூகோள யதார்த்தத்தின் படி இலங்கை பிரச்சினையை கையாள அயல் நாடான இந்தியாவிற்கே அதிக உரிமையும் வாய்ப்பும் இருக்கிறது. அமெரிக்காவாக இருந்தால் கூட அது இந்தியாவை மீறி இலங்கை விவகாரத்தில் முடிவெடுக்காது என்று எனக்குத் தெரிந்த அரசியல் அறிவைக்கொண்டு நான் அவரிடம் கூறினேன்.

இந்தியாவால் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியுமா? அவர் மீண்டும் பழைய கேள்வியையே கேட்டார். பெரிதாக எதுவும் செய்ய முடியாவிட்டாலும், 13 ஆவது திருத்த சட்டத்தை அமல்படுத்தும்படியாவது இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா அழுத்தம் கொடுக்கலாம். அதற்கு இந்தியாவிற்கு அதிகாரம் உள்ளது. ஏனெனில், அது இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட ஒன்று என்றேன் நான்.

## அது இந்தியாவினால் முடியுமா? மீண்டும் அவர் கேட்டார்.

என்ன இது கீறல் விழுந்த இசைத்தட்டு போல் ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் கேட்கிறார் இவர் என்று மனதிற்குள் நான் நினைக்கும் போது இந்த மீனவர் பிரச்சினையையே சரியாக கையாண்டு தீர்க்க முடியாமல் இருக்கும் போது 60 ஆண்டு கால தமிழரின் அரசியல் பிரச்சினைக்கு எவ்வாறு இந்தியாவால் இலங்கையுடன் பேசி தீர்வு காண முடியும்? என்றார் நண்பர். அப்போது தான் எனக்குப் புரிந்தது அவர் ஏன் அந்த கேள்வியை மீண்டும் மீண்டும் கேட்டார் என்பது. அவரது கேள்வி யதார்த்தமானது என்பதையும் ஆழமானது என்பதையும் என்னால் விளங்கிக்கொள்ள முடிந்தது. இரு நாடுகளுக்குமிடையில் உள்ள ஒரு நிர்வாக பிரச்சினையாகவே இந்த மீனவர் பிரச்சினையை பார்க்க முடியும் ஆனால், இன்று இது ஒரு பாரிய அரசியல் பிரச்சினையாக மாறியிருக்கின்றது.

கடந்த இந்திய நாடாளுமன்ற தேர்தலிலும் மீனவர் பிரச்சினை என்பது பிரதான தேர்தல் கோஷமாக பயன்படுத்தப்பட்டது. காங்கிரஸ் அரசினால் தீர்க்க முடியாத இப்பிரச்சினை பா.ஜ.க ஆட்சியமைத்தால் தீரக்கப்படும் என வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. இப்போது பா.ஜ.க ஆட்சியேற்ற பின்னரும், விரைவில் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று அக்கட்சியினரால் கூறப்பட்டு வருகின்றது. ஆனால், அதற்கான தீர்வு அருகில் இருப்பதாகத் தெரியவில்லை. இன்றும் இந்த மீனவர் பிரச்சினையானது தமிழகத்தின் அரசியல் பிரச்சினையாகவும், இந்தியாவின் அரசியல் பிரச்சினையாகவும், இலங்கை - இந்திய அரசியல் பிரச்சினையாகவும் வளர்ந்து கொண்டே செல்கின்றது. உண்மையில் இது மக்களின் வாழ்வாதார பிரச்சினை என்பதை அரசியல்வாதிகள் புரிந்து கொண்டும் புரியாதது போலிருப்பது தான் வேதனையானது. தாங்கள் இலங்கை கடற்படையால் நாளாந்தம் கைது செய்யப்படுவதாகவும், அவர்களால் கைப்பற்றப்பட்ட தங்களின் படகுகளைத் தருமாறும் கோரியும் உண்ணாவிரதம், பணிப்பகிஷ்கரிப்பு என பல்வேறு போராட்டங்களை தமிழக மீனவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். தொழிலுக்கு செல்லாமல் இவ்வாறு போராட்டங்களை நடத்துவதால் அவர்களின் குடும்பங்கள் பட்டினி கிடக்க வேண்டிய துயர நிலை ஏற்படுகின்றது.

அரசியல்வாதிகளோ ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டிக்கொண்டு அதில் அரசியல் நடத்த முண்டியடிக்கின்றனர். தொடரும் மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக மீனவர்கள் மட்டத்திலும் அதிகாரிகள் மட்டத்திலும் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன. இலங்கையிலும், இந்தியாவிலும் என, இவை நடைபெற்று வருகின்றன. பேச்சுக்கள் நடைபெறுகின்ற போதே இந்திய மீனவர்களின் அத்துமீறலும் அவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவதுமான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. ஒருபுறத்தில் நல்லெண்ண நடவடிக்கை என்று மீனவர்கள் விடுவிக்கப்படுவதும், அடுத்த நாளே மேலும் மீனவர்கள் கைது செய்யப்படுவதுமாக சம்பவங்கள் இடம் பெறுகின்றன. கடந்த தினங்களிலும் ஒரு தொகை தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 78 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், 64 படகுகள் இன்னும் விடுவிக்கவில்லை என்றும் குறிப்பிட்டு தமிழக முதல்வர் இந்தியப் பிரமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.



தமிழக முதல்வர் தொடர்ச்சியாக இந்தியப் பிரதமருக்கு கடிதங்களை எழுதிக் கொண்டிருக்கின்றாரே தவிர, ஆக்கபூர்வமாக எதுவும் செய்கிறார் இல்லை என்று எதிர்கட்சிகள் குற்றம் கூறிக்கொண்டிருக்கின்றன. இது ஒரு அரசியல் பிரச்சினையல்ல, இலங்கை - இந்திய மீனவர்கள் சந்தித்துப் பேசி தீர்வு காணும் பிரச்சினையுமல்ல. இரு நாட்டு அரசுகளும் அவற்றின் அதிகாரிகளும் பேசி முடிவெடுக்க வேண்டிய பிரச்சினை. அந்தந்த நாட்டு அரசுகளும் தங்கள் தங்கள் நாட்டு மீனவர்களிடம் பேச்சு நடத்தி பின்னர் இரு நாட்டு அதிகாரிகள் மட்டத்தில் பேசி தீர்க்கமானதொரு முடிவினை எட்டுவதே சரியான வழிமுறையாகும். இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை மீறி மீன்பிடிக்க வருவதால் அதிகம் பாதிக்கப்படுகின்றவர்கள் வட பகுதி தமிழ் மீனவர்களே. இந்திய மீனவர்கள் யாழ்ப்பாணம், மன்னார் கடற்பரப்பிற்குள்ளேயே அடிக்கடி அத்துமீறி வருகின்றார்கள். சில காலத்திற்கு இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் நடவடிக்கை எதுவும் எடுக்காமல் விடுகின்றார்கள் என்று ஒரு பேச்சிற்கு வைத்துக் கொள்வோம். என்ன நடக்கும்? வட பகுதி தமிழ் மீனவர்களும் தமிழக மீனவர்களும் மோதிக்கொள்ளும் நிலைதான் எற்படும். இதனால் இலங்கைத் தமிழர்களுக்கும் தமிழகத்தினருக்குமிடையே கசப்புணர்வுகள் வளரவும் வழிவகுக்கும்.

இந்திய மீனவர்கள் பாரிய படகுகளில் வந்து தங்களது பகுதிகளில் மீன்பிடிப்பது மட்டுமல்லாமல் தங்களது வலைகளையும் தொழில் உபகரணங்களையும் சேதப்படுத்துகின்றார்கள் என்று வட பகுதி மீனவர்கள் முறையிடுகின்றார்கள். வட மாகாணசபை நிர்வாகத்திடமும் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வட மாகாண முதலமைச்சர் இவ்விடயத்தை இலங்கையின் மீன்பிடித்துறை அமைச்சரிடம் முறையிட்டு தடுக்கும் படி கூறுவதைத் தவிர வேறு வழியில்லை. தமிழர் பிரச்சினைக்கு தீர்வு இல்லை, வட மகாணசபைக்கு அதிகாரம் இல்லை, 13ஆம் திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்த இலங்கைக்கு அழுத்தம் கொடுங்கள் என்றெல்லாம் இந்தியாவிடம் கேட்டுக்கொண்டு, இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்க இலங்கையிடம் கேட்க வேண்டிய குழப்பமான நிலை தமிழர்களுக்கும் வட மாகாண அரசிற்கும் ஏற்பட்டுள்ளது. இதனை இந்திய அரசும், குறிப்பாக தமிழகமும் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் வந்து மீன்பிடிப்பதும். அதனால் அவர்கள் கைது செய்யப்படுவதும் உண்மையில் இலங்கைக்கும் இந்தியாவிற்குமான பிரச்சினையல்ல. வடக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் மீனவர்களினதும், சரியான நடைமுறையைப் பேணுவது தொடர்பாக வழிகாட்டப்படாத இந்திய மீனவர்களதும் பிரச்சினையாகும். இதனை மேலும் மேலும் வளரவிட்டு, அரசியலாக்காமல் ஒரு மனிதாபிமான பிரச்சினையாக கையாண்டு தீர்வு காண முற்பட வேண்டும். இதனை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு தமிழகத்திடமே அதிகம் உள்ளது.

**- ஆதித்தன் -**


விளம்பரம் VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com*



விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் ப்பளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.





**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

**Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480**
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



**SPACE AVAIL. FOR DENTAL OFFICE**

1000 - 1800 Sq.ft available for dental office in GTA Square mall - **Middlefield & Finch.**
Dedicated underground parking & locker included.
**Pl. call: 416.315.9397**

# தரமற்ற Credit Score உள்ளவர்கள் அடமானக்கடன் பெறுவது கடினமாகலாம்!

## GOOD CREDIT SCORE

சமுதாயத்தில் 'நல்ல மனிதன்' எனப் பெயர் பெறுதல் பெற்றவர்களிற்கு செய்யும் சிறந்த கைமாறு. எமக்கு நாம் செய்யும் பல சிறந்த கைமாறுகளில் ஒன்றுதான், எமது கடன்பெறும் தகைமையை சிறப்பாக வைத்திருத்தல். எமது கடன் பெறும் தகைமையை சிறப்பாக வைத்திருந்தால், அடமானக்கடனோ அல்லது மற்றக் கடன்களோ இலகுவாகப் பெறக்கூடியதாயிருக்கும். அது மட்டுமல்லாமல், கடனிற்கான வட்டிவீதத்தினை குறைத்து பெறுவதற்கான சந்தர்ப்பங்களும் அதிகமாகலாம். இதனால் நாம் அடமானக் கடன் பெறும் 25வருட காலத்தில் மேலதிக பணத்தை சேமிக்க கூடியதாக இருக்கலாம்.

இதற்கு மறுதலையாக, எமது Credit score குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் முன்நிலை நிதி நிறுவனங்கள் கடன் தருவதனை தவிர்க்கும். இதனால் இரண்டாம் நிலை நிதி நிறுவனங்களிடம் அல்லது தனியார் (Private) கடன் கொடுப்பவர்களிடம் அடமானக்கடன் பெறச் செல்ல வேண்டும். அல்லது Gurantor, Co - signer இன் உதவி தேவைப்படலாம்.

பொதுவான சந்தர்ப்பத்தில் எமது Credit score 300 இலிருந்து 900 வரையான பெறுமதிகளில் காணப்படும். எவ்வளவிற்கு எவ்வளவு பெரிய எண்ணாக உள்ளதோ, அவ்வளவு Credit சிறந்தது எனக் கொள்ளலாம். பொதுவான சந்தர்ப்பத்தில் 600 இற்கு குறைவான Score உள்ளபோது அடமானக்கடன் கொடுக்கும் நிறுவனம் கடன் கொடுப்பதனை தவிர்க்கவே பார்க்கலாம்.




எமது Credit score பல விடயங்களில் தங்கியுள்ளது என்பதனை ஞாபகத்தில் கொள்க.

1. குறிப்பிட்ட தொகையை காலம் தாழ்த்தி செலுத்துவது. சில சந்தப்பங்களில் கடனை மொத்தமாகவே செலுத்துவதனை தவிர்ப்பது. இது தவறு. குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாக கொடுப்பவு செய்வதே சிறந்தது.

2. எமது கடன் தொகையில் முழுத்தொகையையும் பாவிப்பது அல்லது கடன்தொகைக்கு அதிகமாக பாவித்தாலும் எமது Credit score குறையும் சந்தர்ப்பம் உண்டு.

முழுத்தொகையும் செலுத்திய பின் Credit card இல் மொத்த பணமும் இருப்பதால் Credit valu அதிகரிக்கும்.

கடன் பெற்று அதனைக் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பு திருப்பி கொடுக்கும் முறையை ஒழுங்காக தொடர்ந்து செய்வது சிறந்தது.

பல நிறுவனங்களிற்கு சென்று கடன் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் போது வெவ்வேறு நிறுவனங்கள் எமது credit ஐ பார்ப்பது நல்லதல்ல. இதுவும் score ஐ குறையச் செய்யும். பொது வீட்டுக்கடன், வாகனக்கடன் சிறந்ததாக கொள்ளப்படும்.

Credit card கடனை இலகுவானதாக கொள்ள முடியாது. முதலில் Credit card கடனை கட்டி முடிப்பது நல்லதாகும். அத்துடன் இதற்கு வட்டி வீதம் அதிகம். பிந்திப்பிந்தி செய்வதால் பாதிப்பே அதிகமாகும்.

அனுபவத்தில் நான் கண்ட உண்மை.

### நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

### தொடர் - 423

சிலரிற்கு சராசரிக்கு மேலான சம்பளம் இருந்தும் ஸிராடதை இன் நிலைமை தரம் குறைந்து இருப்பதால் கடன் பெறுவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றது.

எமது கடன்பெறும் நிலையை Equifax, Transunion என இருநிறுவனங்கள் மேற்கொள்கின்றன. அவற்றின் சேவையை பெற Equifax (1 800 465 7166) மற்றும் Transunion (1 800 663 9980) ஐ தொடர்பு கொள்ளலாம்.


# HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



Raja Mahendran, P.Eng.
Broker / Owner

5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

**HOUSE FOR SALE**
**Brimley & Sheppard**



- Brand new (never 2 lived)
- 5 bedrooms house for sale.
- 5 washrooms.
- Custom built on 70' frontage over 3500 sq.ft.
- Stylish kitchen.
- Asking $1.5 Million.

**LAND FOR SALE WITH BUNGALOW HOUSE**

- 2 Houses can be built
- Ready to built
- Scarborough

**COMMERCIAL UNITS FOR SALE**

Main Floor. Retail commercial. Units for quick sale in a reputable Indoor mall. Tenented. Vacant position Possible. Price included one parking. Heart of Scarborough. Close to all amenities. Only a few units available for your business. Only $148,888. (Don't miss)

SOLD

**CONDO. FOR RENT**

**HWY 427 & Dundas**
Brand new TRIDEL Condo.
2 Bedrooms, 2 Washrooms.
swimming pool, Rec. room,
24 hrs. security, Vacant
**Asking $1400.00**

**HOTEL FOR SALE**

* 78 Renovated rooms
* Brand Name
* Location: GTA
* Revenue: Over $1.5 Million
• Asking $6.5Million

SOLD

**HOTEL FOR SALE**

* Brand Name Hotel
* 1 ½ hour from Mississauga
* 60 Rooms
* Resonable Rate
* Income over $1Million Income

*Asking price*
**$1.5 Million**

**DENTAL OFFICE**

1000 - 1800 Sq.ft available for dental office space available in GTA Square mall - ***(Middlefield & Finch)***.
Dedicated underground parking & locker included.
***ONLY FOR DENTAL OFFICE***

**BRAND NEW CONDO. FOR SALE**

- 1Bedroom Condo for sale.
- 1 Washroom
- Available January 2018.
- 2 Years rental Guranteed.
- ***No interim closing***

# போர்ட் சகோதரர்களின் அரசியல் அவலம்

ரொப் போர்ட் திடீரென ரொறொன்ரோ மேயர் போட்டியிலிருந்து புரட்டாதி 12 விலகினார் என்ற செய்தியை அனைத்து ஊடகங்களும் வெளியிட்டன. வார இறுதி வெள்ளியன்று விடுமுறை நாட்களுக்கான ரொறொன்ரோ மற்றும் உலக மக்களுக்கான சிறப்புச் செய்தியாக இது வெளியிடப்பட்டது.

மாநகர தேர்தல்கள் மத்திய மாநில தேர்தல்களை விட பத்து மாதங்களுக்கு முன்னரே ஆரம்பமாகிவிட்டது. பல முன்னணி தலைகள் ரொறொன்ரோ மாநகரை குறி வைத்து போட்டியிட பிரச்சாரங்களை தொடங்கினர். கடந்த தேர்தலில் ஒன்ராறியோ மாநில துணை முதலமைச்சர் போட்டியிட்டு போர்ட்டிடம் தோல்வி கண்டார். இத்தேர்தலில் முன்னாள் ஒன்ராரியோ கொன்சவேற்றிக் கட்சி தலைவரும் ரொஜேர்ஸ் நிறுவன முன்னாள் தலைவரும், 1010 வானொலி ஆய்வாளருமான ஜோன் ரொரி போட்டி யிடுகின்றார். இவர் 2002ல் இதே ரொறொன்ரோ மாநகர மேயர் பதவிக்கு போட்டி யிட்டு டேவிட் மில்லரிடம் தோல்விகண்டவர். டேவிட் மில்லர் என்.டி.பிக் கட்சி ஆதரவாளர் என்பது குறிப்பிடத்தக்கது. என்.டி.பிக் கட்சியின் முன்னாள் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவரும் கடந்த தேர்தலில் என்.டி.பிக் கட்சி 100க்கு மேற்பட்ட ஆசனங்கள் பெற காரணமாகவிருந்தவருமான அமரர் ஜக் லேற்றனின் மனைவி ஒலிவா சோவும் ரொறொன்ரோ மாநகர முதல்வர் களத்தில் குதித்துள்ளார். இவர் இதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டார். இவர் முன்னர் ரொறொன்ரோ மாநகர கவுன்சிலராகவும் இருந்துள்ளார். இவர்கள் இருவரும் கனடிய அரசியலில் மிகுந்த செல்வாக்கும் பலமும்



உடையவர்கள். ரொறொன்ரோ மாநகரம் வட அமெரிக்காவின் மிகப் பெரிய ஐந்து நகரங்களுள் ஒன்று. கனடாவின் மிகப் பெரிய நகரம். கனடாவின் வர்த்தக தலைநகரமு மாகும். ரொறொன்ரோ மேயர் பதவி என்பது மிகுந்த செல்வாக்கு கொண்ட ஒரு பதவியாகும். மாநில முதல்வரை விட அதிகளவு ஊடகங்களில் கவனிக்கப்படு பவராவார். இதனால் இப்பதவிக்கு பல முக்கியஸ்தர்கள் போட்டியிடுகின்றார்கள். இவர்களுடன் ரொறொன்ரோ முதல்வர் ரொப் போர்ட் உம் புரட்டாதி 12 மதியம் வரை போட்டியிலிருந்தார்.

**- வினோதன் -**

ரொப் போர்ட் 2000ம் ஆண்டு மாநகர தேர்தலில் எற்றோபிக்கோ வடக்கு வட்டாரத்தில் போட்டியிட்டு கவுன்சிலராக தேர்வு செய்யப்பட்டார். 2010ல் இவர் மாநகர தேர்தலுக்கு போட்டியிட இவரது அண்ணனார் டக் போர்ட் இதே வட்டாரத்தில் போட்டியிட்டு கவுன்சிலரானார். ரொப் போர்ட் 1969ம் ஆண்டு மே 28ம் நாள் ரொறொன்ரோவில் செல்வந்த பெற்றோரின் கடைக் குட்டியாக பிறந்தார். கார்ல்ற்றன் பல்கலைக் கழகத்தில் உயர் கல்விகற்கச் சென்றார். எனினும் இவர் தனது பட்டப்படிப்பை முடிக்கவில்லை. பின்னர் டெக்கோ லேபல் நிறுவனத்தில் வியாபாரப் பிரிவில் வேலை பார்த்தார். பின்னர் டெக்கோ லேபல் நிறுவனம் போர்ட் குடும்பத்தின் குடும்ப நிறுவனமாகியது. இவரது தாய், சகோதரர்கள் இந்நிறுவனத் தின் முகவர்களாக உள்ளனர். ரொப் போர்ட் அமெரிக்க புட்போலில் செலுத்திய கவனத்தினை வேறெதிலும் செலுத்தவில்லை. இவர் புட்போல் பயிற்சியாளராவும் கடமையாற்றிவந்தார்.

இவர் மேயராக பதவியேற்ற பின்னர் இவருக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் ஊடகங்களால் முன்வைக்கப்பட்டன. 2008ல் இவர் மனைவியை துன்புறுத்தியதாக குற்றஞ் சாட்டப்பட்டார். இவர் முதல்வரான பின்னர் இருதடவைகள் 2012ல் மனைவியை

தொடர்ச்சி 18ஆம் பக்கம்




A new spirit of living in
Islington Village
(BLOOR & ISLINGTON)
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/GTA Realty Inc. Brokerage*
COMING SOON
416.321.6969
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203
Toronto, ON. M1S OC2
Tel: 416-321-6969
Fax: 416-321-6963
*Independently Owned and Operated
TRIDEL
BUILT FOR LIFE

# SPECIAL DEAL FOR BUYERS & SELLERS

என் மூலம் வீடு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை அல்லது இந்தியா சென்று வர இலவச விமானச்சீட்டுகள் எந்தவொரு குலுக்கலும் இன்றி வழங்கப்படும். அல்லது வேண்டுமானால் அதற்கு சமமான பணம் வழங்கப்படும்.

| Purchase Price | Number of free tickets |
|---|---|
| 400,000 - 674,999 | 1 |
| 675,000 - 849,999 | 2 |
| 850,000 - 999,000 | 3 |
| 1,000,000+ | 4 |

**Also Free Moving**

## March Special For Sellers

My listing Commission is Flate Rate of - $2,999 + HST
My listing Commission For Condo. is Flate Rate of - $999 + HST

**Services Offered:**

- Open Houses
- Professional Photography
- Flyer Distribution for Your Property
- Home Staging
- Free Moving

## Get More $$$ For Your House By Calling Me!

என்னை அழைப்பதன் மூலம் உங்கள் கட்டணங்களை எவ்வாறு குறைப்பது உங்களின் வருமானத்துக்கு ஏற்ப வீடுகளை எவ்வாறு தெரிவு செய்வது போன்ற பல்வேறு விடயங்களுக்கான ஆலோசனைகளை வழங்கி உங்கள் முதலீட்டுக்கான உச்ச பயனை அடைய என்னை அழையுங்கள்.

**(This Deal Start From March 01st to November 30th)**



## Lourdson Antonipillai

(Sales Representative)

**Dir: 416.738.8824**

**Offi: 905.201.9977**

HomeLife / Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, #205, Markham ON, L3S 4N8

*Independently Owned & Operated

# அன்புடைமை - 2

திருவள்ளுவரின் 72வது குறளில் இருந்தே இந்த இதழின் தொடர் கட்டுரையை ஆரம்பிப்போம்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியார் பிறர்க்கு

இந்தக் குறளிற்குப் பரிமேலழகர் அன்பிலாதார் பிறர்க்குப் பயன்படாமையின் எல்லாப் பொருளானும் தமக்கே உரியர் என்றும், அன்புடையார் அவற்றானேயன்றித் தம் உடம்பானும் பிறர்க்கு உரியர் என்றும் பொருள் உரைத்துள்ளார். இதனை மேலும் தெளிவாக்கி அன்பு இல்லாதவர், எல்லாப் பொருட்களையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வார். அன்பு உடையவர் தமது உடமையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்பவர் என்று மு.வ பொருள் உரைத்துள்ளார். இந்தக் குறள் மூலம் தன்னலமற்ற முறையில் அன்பு செலுத்தும் பண்பைக் கொண்டிருந்தால் அன்புடைமை கொண்டவராகக் கருத முடியும். அதாவது அன்பு என்னும் உடைமையை அல்லது சொத்தைக் கொண்டிருத்தலையே அன்புடைமை என்று கூறலாம். நாங்கள் மற்றவர்களில் செலுத்தும் அன்பு உள்ளத்தில் இருந்து அதாவது அகத்தில் இருந்து வருவதாக இருக்க வேண்டும். அன்பு இல்லாதவர்கள் சுயநலம் கொண்டவர்களாக இருப்பார் என்ற கருத்தும் இந்தக் குறளில் தொக்கி நிற்கின்றது.

அன்பு என்ற சொல்லுக்குரிய ஆங்கிலச் சொல்லாக Love, affection, kindness, fondness, lore, devotion, compassion, grace, tenderness, friendship, piety, benevolence, regard, attachment, respect, favour, complacency ஆகிய பல சொற்களைத் தமிழ்-ஆங்கில அகராதிகளில்



காணலாம். இவற்றில் பல சொற்கள் அன்பின் ஏனைய வடிவங்களுக்கு மிகவும் பொருத்தமாகக் காணப்பட்டாலும் Love என்ற சொல்லே அன்பு என்ற சொல்லிற்கு மிகவும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லாக இருக்கும் என்பது எனது கருத்து. அன்பின் இரகசியம் என்னவென்றால் அன்பின் தரம் (Quality) எவ்வாறு உள்ளது என்பதேயன்றி எவ்வளவு அன்பு (Quantity of Love) செலுத்துகின்றோம் என்பதில் அல்ல என்று கூறப்படுகின்றது. உண்மையான அல்லது தூய அன்பு ஆகத் தரத்தில் உயர்ந்த அன்பைக் கருதுகின்றோம். இத்தகைய தூய அன்பு மகிழ்ச்சியைத் தரும். எங்களால் ஒரு சிலர் மீது மட்டுமே உண்மையான அன்பைச் செலுத்த முடியும் என்று தோன்றினாலும் இதற்கு எல்லை கிடையாது. அதிகம் பேர் மீது அன்பைச் செலுத்துவதாலும், தூய அன்பைச் செலுத்துவதாலும் அதிக மகிழ்ச்சி கிடைக்கும். ஆன்மீகத்தில் அன்பு (Love) என்பதற்கும், பிணைப்பு (Attachment) என்பதற்கும் உள்ள வேறுபாட்டை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்று கருதப்படுகின்றது. பற்று, காமம், இச்சை போன்ற பதங்களும் பிணைப்பு என்ற பதத்தைப் போன்று attachment என்ற சொல்லுக்குரிய தமிழ்ச் சொற்களாகக் கருதப்படுகின்றன. அன்பு என்பது மகிழ்ச்சியை உனக்குத் தருகின்றேன் என்று சொல்லுகையில் பிணைப்பு என்பது என்னை நீ மகிழ்ச்சிப் படுத்து என்று சொல்வதாகக் கருதப்படுகின்றது. பிணைப்பு மற்றவர்களிடம் இருந்து எதிர்பார்ப்பை ஏற்படுத்துகின்றது. பிணைப்பு (Attachment) ஒருவருக்கொருவர் எதைக் கொடுக்கின்றோம், எதை வாங்கிக் கொள்கின்றோம் என்று கணக்கு வைக்கும் தன்மை கொண்டது. ஆனால் அன்பு கொடுப்பதிலும், மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதிலும் நிறைவு காணும் தன்மை கொண்டது. நாங்கள் செலுத்தும் அன்பில் பிணைப்பு நச்சுப்படுத்தினால் அந்நியர்களைவிட அதிகமான கோபம் அன்புக்குரியவர்களிடம் ஏற்படுகின்றது. பூரணமான மனிதர்கள் கிடையாது. ஆனால் பூரணமான அன்பு உண்டு. இத்தகைய பூரணமான அன்பு நமது இதயத்தில் இருக்க வேண்டும் என்று ஆன்மீகவாதிகள் கூறுகின்றார்கள். இது சாதாரணமாக உடனடியாக ஏற்பட முடியாது. ஆனால் படிப்படியாக எமது அன்பின் தரத்தை உயர்த்தும் பொழுது இது சாத்தியமாகும்.

மற்றவர்களிடம் எதிர்பார்ப்பற்ற விதத்தில் அன்பு செலுத்துவதை ஒரு நற்பழக்கமாகக் கருதி வளர்த்துக் கொள்ள வேண்டும். எம்மிடம் உள்ள நேர்மறையான விடயங்களை எண்ணித் திருப்தி கொண்டு நம்மீதும் அன்பு செலுத்த வேண்டும். சுய வெறுப்பைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று ஒரு பழமொழி உண்டு. அன்புடைமை என்ற அற்புதமான சொத்து நம்மிடம் செறிந்து காணப்படும் பொழுது நாம் அகத்தின் அழகில் உயர்ந்தவர்களாகி விடுவோம். இது முகத்திலும் ஒரு பூரிப்பைக் காட்டத்தான் செய்யும். அன்பு ஒன்றே அனைத்தையும் அரவணைக்கும் என்ற முதுமொழி அன்பின் வலிமையை நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

அன்புடைமை பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.

நன்றி.

வணக்கம்.

தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com



# ஒன்ராரியோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

போட்டியிடுகின்றனர். Michael கடந்த தேர்தலில் 83% வாக்குகளை பெற்று ரொறொன்ரோ மாநகரசபைக்கு இவ்வட்டாரத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டார்.

### வட்டாரம் 38 - ஸ்காபரோ மத்தி

**டேவிட் தோமஸ்**

இவ்வட்டாரத்தில் இவருடன் சேர்ந்து தற்போதைய மாநகரசபை உறுப்பினர் Glenn De Baeremaeker உட்பட பதினொரு பேர் போட்டியிடுகின்றனர். Glenn கடந்த தேர்தலில் 62% வாக்குகளை பெற்று ரொறொன்ரோ மாநகரசபைக்கு இவ்வட்டாரத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டார்.

### வட்டாரம் 41 - ஸ்காபரோ றூஜ்றிவர்

**சிவவதனி பிரபாகரன்**

இவ்வட்டாரத்தில் இவருடன் சேர்ந்து தற்போதைய மாநகரசபை உறுப்பினர் Chin Lee உட்பட ஐவர் போட்டியிடுகின்றனர். Chin கடந்த தேர்தலில் 70% வாக்குகளை பெற்று ரொறொன்ரோ மாநகரசபைக்கு இவ்வட்டாரத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டார்.

### வட்டாரம் 42 - ஸ்காபரோ றூஜ்றிவர்

**கணேஸ் குலசேகரம்பிள்ளை**
**வேந்தன் ரமணா**
**நீதன் சபாரட்ணம்**
**நீதன் ஷான்**

இவ்வட்டாரத்தில் இந்த நால்வருடன் சேர்ந்து தற்போதைய மாநகரசபை உறுப்பினர் Raymond Cho உட்பட பதினொருபேர் போட்டியிடுகின்றனர். Raymond கடந்த தேர்தலில் 53% வாக்குகளைப் பெற்று ரொறொன்ரோ மாநகரசபைக்கு இவ்வட்டாரத்தில் இருந்து தெரிவுசெய்யப் பட்டார். நீதன் ஷான் இத்தேர்தலில் 34% வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்திற்கு வந்தவர்.

### வட்டாரம் 44 - ஸ்காபரோ கிழக்கு

**நீத்திரா விபுலானந்தன்**
**ரகு தனபாலசிங்கம்**

இவ்வட்டாரத்தில் இவர்கள் இருவருடன் சேர்ந்து பதினைந்து பேர் போட்டியிடுகின்றனர். இவ்வட்டாரத்தின் தற்போதைய மாநகரசபை உறுப்பினர் இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை.

## மாக்கம் நகரசபை

மாக்கம் நகரசபைக்கு, நகரசபை தலைவரும் 8 நகரசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர். மாக்கம் நகர-சபைக்கு உறுப்பினர்களாக வர நியமனப் பத்திரம் தாக்கல் செய்துள்ள தமிழ் வேட்பாளர்கள் விபரம்

### வட்டாரம் 5

**சிவா சிவஞானம்**
**ராஜ் சுப்பிரமணியம்**

இவ்வட்டாரத்தில் இவர்கள் இருவருடன் சேர்ந்து தற்போதைய நகரசபை உறுப்பினர் Colin Campbell உட்பட ஐவர் போட்டியிடுகின்றனர்.

### வட்டாரம் 7

**லோகன் கணபதி**
**சோதி செல்லா**
**வாசு முருகேசு**

இவ்வட்டாரத்தில் இந்த மூன்று பேருடன் சேர்ந்து ஐவர் போட்டியிடுகின்றனர். இங்கு லோகன் கணபதி தற்போதைய நகரசபை உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

### வட்டாரம் 8

**ஜோசப் மோகன் ரெமிசியார்**

இவ்வட்டாரத்தில் இவருடன் சேர்ந்து தற்போதைய மாநகரசபை உறுப்பினர் Alex Chiu உட்பட ஐவர் போட்டியிடுகின்றனர்.

## *Whitchurch - Stouffville* பட்டணசபை

Whitchurch - Stouffville பட்டணசபைக்கு, பட்டணசபை தலைவரும் ஆறு பட்டணசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர். Whitchurch - Stouffville பட்டண சபை உறுப்பினராக வர நியமனப்பத்திரம் தாக்கல் செய்துள்ள தமிழ் வேட்பாளர்கள் விபரம்

### வட்டாரம் 6

**சுசி நடராஜா**
**செந்தூரன் பரமசாமி**

இவ்வட்டாரத்தில் இவர்கள் இருவருடன் சேர்ந்து ஆறுபேர் போட்டியிடுகின்றனர்.

## பிரம்ரன் நகரசபை

பிரம்ரன் நகரசபைக்கு, நகரசபை தலைவரும் ஐந்து நகரசபை உறுப்பினர் களும் தெரிவு செய்யப்படவுள்ளனர். பிரம்ரன் நகரசபை உறுப்பினராக வர நியமனப் பத்திரம் தாக்கல் செய்துள்ள தமிழ் வேட்பாளர் விபரம்

### வட்டாரம் 2 & 6

**கேசியன் ஜோசப்**

இவ்வட்டாரத்தில் இவருடன் சேர்ந்து பன்னிரண்டு பேர் போட்டியிடுகின்றனர். இவ்வட்டாரத்தின் தற்போதைய நகரசபை உறுப்பினர் இம்முறை பிராந்திய சபை உறுப்பினர் பதவிக்கு போட்டியிடுவதால் நகரசபை உறுப்பினர் பதவிக்கு போட்டியிடவில்லை.

## அஜக்ஸ் பட்டணசபை

அஜக்ஸ் பட்டணசபைக்கு, பட்டணசபை தலைவரும் நான்கு பட்டணசபை உறுப்பினர் களும் தெரிவு செய்யப்படவுள்ளனர். அஜக்ஸ் பட்டணசபை தலைவராக வர நியமனப்பத்திரம் தாக்கல் செய்துள்ள தமிழ் வேட்பாளர் விபரம்

### பட்டணசபை தலைவர்

**வரன் வைத்திலிங்கம்**

இப்பட்டணசபை தலைவர் பதவிக்கு இவருடன் சேர்ந்து தற்போதைய அஜக்ஸ் பட்டணசபை தலைவர் Steve Parish உட்பட மூன்று பேர் போட்டியிடுகின்றனர்.

## பாடசாலைசபை உறுப்பினர்கள் *(School Board Trustees)* தெரிவு

தமிழர் பலர் இதுவரை பாடசாலை சபை உறுப்பினர்களுக்காக போட்டியிட்ட போதும் ஜுனிதா நாதன் மற்றும் நீதன் ஷான் ஆகியோரை தவிர எவரும் இதுவரை பாட-சாலை சபை உறுப்பினராக வரவில்லை. இதில் ஜுனிதா நாதன் தற்போதும் யோர்க் பிராந்திய பாடசாலை சபையின் ஆங்கில பொது பாடசாலைசபைக்கான உறுப்பினராக உள்ளார். இம்முறை நடைபெற உள்ள பாடசாலை சபை உறுப்பினர்களுக்கான பதவிக்கு ரொறொன்ரோ மாநகர ஆங்கில பொதுப்பாடசாலை சபை உறுப்பினர்களாக வர 8 பேரும், யோர்க் பிராந்திய ஆங்கில பொது பாடசாலைசபை உறுப்பினராக வர 2 பேருமாக 10 தமிழர் போட்டியிடுகின்றனர்.

## ரொறொன்ரோ மாநகர-சபை

மாநகரசபை உறுப்பினர்களை தெரிவு செய்யும் வட்டாரங்கள் 44 உண்டு. ஆனால் பாடசாலை உறுப்பினர்களை தெரிவு செய்யும் வட்டாரங்கள் 22. இதனால் பெரும்பாலும் மாநகரசபை உறுப்பினர்களை தெரிவு செய்யும் 2 வட்டாரங்கள் பாடசாலை உறுப்பினரை தெரிவு செய்யும் ஒரு வட்டாரத்தினுள் வரும். ரொறொன்ரோ மாநகரத்திற்கான பாடசாலை சபைக்கு 22 உறுப்பினர்கள் ஆங்கில பொது பாடசாலை சபைக்கும் 9 உறுப்பினர்கள் ஆங்கில கத்தோலிக்க பாடசாலை சபைக்கும் தெரிவு செய்யப்படவுள்ளனர். ரொறொன்ரோ மாநகரத்தின் ஆங்கில பொது பாடசாலை சபைக்கு உறுப்பினர்களாக வர நியமனப் பத்திரம் தாக்கல் செய்துள்ள தமிழ் வேட்பாளர்கள் விபரம்.

### வட்டாரம் 1- எற்றோபிக்கோ வடக்கு

**எலி சிவலிங்கம்**

இந்த வட்டாரத்தில் இவருடன் சேர்ந்து தற்போதைய ஆங்கில பொதுபாடசாலை சபை உறுப்பினர் John Hastings உட்பட எட்டுப்பேர் போட்டியிடுகின்றனர்.

### வட்டாரம் 13 - டொன் வலி மேற்கு

**புஸ்பா மதனலிங்கம்**

இந்த வட்டாரத்தில் மூவருடன் சேர்த்து தற்போதைய ஆங்கில பொதுப்பாடசாலை சபை உறுப்பினர் Gerri Gershon உட்பட இருவர் போட்டியிடுகின்றனர்.

### வட்டாரம் 18 - ஸ்காபரோ

தொடர்ச்சி 13ஆம் பக்கம்


**AUM WELLNESS CLINIC IN**

Healing Massage, Suffering From Pain?

**Get Relief From:**

| | | |
|---|---|---|
| முதுகுவலி | கழுத்துவலி | தோள்பட்டைவலி |
| முழங்கால் வலிகள் | தீராததலைவலி | நரம்புப்பிடிப்பு |
| நீரிழிவு | தூக்கமின்மை | கொலஸ்ரோல் |
| உடல் எடை குறைத்தல் | இரத்த ஓட்டத்தை | சீராக்குதல் |

**போன்றவற்றிற்கு இவரை நாடுங்கள்**

Dr. Lata

Based on Appointment



**Cell: 416.890.9217 Office: 647.304.6046**
**5215 Finch Ave. E. #220, Toronto, ON**

# ஒன்ராரியோ...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

**தென்மேற்கு**

**ஹென்றி கிருபைராஜா**
**பார்த்தி கந்தவேள்**

இந்த வட்டாரத்தில் இவர்கள் இருவருடன் சேர்த்து தற்போதைய ஆங்கில பொதுப்பாடசாலை சபை உறுப்பினர் Elizabeth Moyer பத்துப்பேர் எண்மர் போட்டியிடுகின்றனர்.

**வட்டாரம் 20 - ஸ்காபரோ அஜின்கோட்**

**சோபனா பன்னீர்செல்வன்**

இந்த வட்டாரத்தில் இவருடன் சேர்த்து நால்வர் போட்டியிடுகின்றனர். தற்போதைய ஆங்கில பொதுபாடசாலை சபை உறுப்பினர் இவ்வட்டாரத்தில் மீண்டும் போட்டியிடவில்லை

**வட்டாரம் 21 - ஸ்காபரோ றூஜ்றிவர்**

**பிரவீணா சத்தியநாதம்**
**ஜீவிதா டெபோரா லிபமென்**
**கிரிஷாந்தி சரோஜ்குமரன்**

இந்த வட்டாரத்தில் இவர்கள் மூவருடன் சேர்த்து தற்போதைய ஆங்கில பொதுப்பாடசாலை சபை உறுப்பினர் Shaun Chen உட்பட அறுவர் போட்டியிடுகின்றனர்.

## யோர்க் பிராந்திய சபை

யோர்க் பிராந்திய சபை என்பது மாக்கம் நகரசபை, Whitchurch - Stouffville பட்டணசபை உட்பட ஒன்பது உள்ளூராட்சி மன்றங்களை சேர்த்து உருவாக்கிய ஒரு பிராந்திய சபை ஆகும். இந்த ஒன்பது உள்ளூராட்சிமன்றங்கள் தனித்தனியே தமக்கு உள்ளூராட்சிமன்ற தலைவரையும், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களையும் கொண்டு இயங்குகின்றன. ஆனால் இவை ஒன்பதும் சேர்ந்தும் ஒரு பிராந்திய சபையாகவும் இயங்குகின்றது.

உதாரணமாக பாடசாலை சபையானது தனித்தனியாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு இல்லாமல் இந்த சேர்ந்து இயங்கும் யோர்க் பிராந்திய சபையால் தான் வழிநடத்தப்படுகிறது.

இந்த யோர்க் பிராந்திய பாடசாலை சபைக்கு 12 உறுப்பினர்கள் ஆங்கில பொது பாடசாலை சபைக்கும் 11 உறுப்பினர்கள் ஆங்கில கத்தோலிக்க பாடசாலை சபைக்கும் தெரிவு செய்யப்படவுள்ளனர். யோர்க் பிராந்திய ஆங்கில பொது பாடசாலை சபைக்கு உறுப்பினராக வர நியமனப்பத்திரம் தாக்கல் செய்துள்ள தமிழ் வேட்பாளர்கள் விபரம்

**மாக்கம் வட்டாரம் 4 & 5**

**ருக்ஷன் பரா**

இவ்வட்டாரத்தில் இவருடன் சேர்ந்து மூவர் போட்டியிடுகின்றனர்.

**மாக்கம் வட்டாரம் 7 & 8**

**ஜுனிதா நாதன்**

இவ்வட்டாரத்தில் இவருடன் சேர்ந்து மூவர் போட்டியிடுகின்றனர். இவ்வட்டாரத்தின் தற்போதைய ஆங்கில பொதுபாடசாலைக்கான உறுப்பினர் ஜுனிதா நாதன் என்பது குறிப்பிடத்தக்கது.

வேறு தமிழரும் இந்த ஒன்ராரியோ மாகாண தேர்தலில் உள்ளூராட்சி மன்ற தலைவராக வோ, உள்ளூராட்சிமன்ற உறுப்பினராகவோ அல்லது பாடசாலை சபை உறுப்பினராக வோ வர போட்டியிடக்கூடும். ஆனால் மேற்குறிப்பிட்ட 29 வேட்பாளர்களுடைய தகவலே விளம்பரத்திற்கு இதுவரை கிடைத்துள்ளது. வேட்பு மனுத்தாக்கல் செய்யும் மற்றும் தாக்கல் செய்த வேட்பு மனுவை திரும்பப்பெறும் இறுதி நாள் செப்ரெம்பர் 12 ஆகவும் உள்ளபடியால் புதியவர் எவரும் இறுதிநேரத்தில் தங்களது வேட்பு மனுவை தாக்கல் செய்திருந்தாலோ அல்லது மீளப்பெற்றிருந்தாலோ அந்த விபரம் இங்கு பதியப்படவில்லை.

### மாணவர்களுக்கான போட்டி-2014

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா தரம் 2 இலிருந்து 11 வரையான மாணவர்களுக்கு செப்தெம்பர் மாதம் 27ம் திகதி சனிக்கிழமை (Saturday, September 27th, 2014) Sai Center, 5321 Finch Avenue East, Scarborough இலும் செப்தெம்பர் மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (Sunday, September 28th, 2014) இலும் பின்வரும் பாடப்பிரிவுகளில் பரீட்சை நடாத்தவுள்ளது.

(1) கணிதம்
(2) பொது அறிவு.
(3) தமிழ்

மாணவர்கள் ஒன்றோ அதற்கு மேற்பட்ட பாடங்களுக்கோ பங்குபற்ற முடியும்.

மேலதிக விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தையும் யாழ் இந்து கனடா இணையத்தளத்தில் (http://jhcacanada.com ) பெற்றுக் கொள்ளலாம். **விண்ணப்ப முடிவுத் திகதி செப்தெம்பர் 21, 2014** (September 21, 2014).

மிகத் திறமையாகச் செய்யும் மாணவர்களுக்கு ஒக்தோபர் 4 (October 4th, 2014) இல் நடைபெறும் கலையரசி விழாவில் பரிசில்கள் வழங்கப்படும். ஏனைய மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தொடர்பு:
ரொறன்ரோ: 647-347-9217 (சிவகுமாரன்) 416 930 9119 (கிருஷ்) 416 856 6900 (கதிர்)
ஒட்டாவா: 613 825 9917 (ஜீவா) 613 761 2708 (பார்த்திபன்) 613 222 4296 (ஜெகா)


Computek College
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY
Registered as a private career college under the Private Career Colleges Act, 2005

Enroll in a Diploma Course and receive a FREE Laptop
(Offer valid until Dec 31, 2014)



NOW ACCEPTING INTERNATIONAL STUDENTS!



Computek College is approved as a Designated Learning Institution (DLI) by Citizenship and Immigration Canada (CIC)

LAID OFF? UNEMPLOYED?



NEW SKILLS! NEW CONFIDENCE!! NEW CAREER!!!
SECOND CAREER & OTHER FUNDING, OPTIONS AVAILABLE CALL FOR DETAILS

DIPLOMA COURSES

| | |
|---|---|
| Enterprise Network Engineering | 50 wks |
| Community Services Worker | 50 wks |
| Int. Application Development | 50 wks |
| Early Childcare Assistant | 38 wks |
| Personal Support Worker | 32 wks |
| Accounting & Payroll Admin | 35 wks |
| Medical Office Admin | 28 wks |
| Network Engineering | 28 wks |
| Computerized Accounting | 26 wks |
| Business Administration | 26 wks |

PART-TIME COURSES ( WEEKEND /EVENING)
Bank Teller, MS Office
Food Handler, Food Service Worker
AccPac, Simply Accounting, Quick books
Exam Prep: A+, MCSA, MCSE
ICDN 1, ICDN 2, Canadian Securities Course
C/C++, C#, Java, VB.net, HTML, SQL
Medical Coding & Billing
CPR & First Aid

WWW.COMPUTEK.EDU
Financial assistance may be available for those who qualify

Toronto Campus 301-2347, Kennedy Rd. (Kennedy/Sheppard) 416-321-9911
Markham Campus 202 - 7 Eastvale Drive. (Markham / Steeles) 905-471-3344
Scarborough Campus 248-2390 Eglinton Ave E Kennedy/Eglinton) 416-285-9941

20வது ஆண்டு நிறைவை முன்னிட்டு உங்கள் சாமி அன் சன்ஸ்

SALE!!! SALE!! SALE! SALE!!! SALE!! SALE! SALE!!! SALE!! SALE! SALE!!! SALE!! SALE!

S&S SINCE 1994

SAMY & SONS
Wholesalers & Retailers

☑ வரவேற்பு
☑ விலை
☑ தரம்

Textiles, Jewellery, Gift Items & Fancy Goods,
Express Money Transfer,
Pawn Broker, Chairs Rental Etc.

☑ தெரிவு
☑ நம்பிக்கை
☑ நாணயம்

இதோ நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த
அதிரடி மலிவு விற்பனை

ஆகஸ்ட் 27ம் திகதி தொடக்கம் செப்ரம்பர் 27ம் திகதி வரை

எமது வாடிக்கையாளர்கட்கு! இதோ ஓர் அரிய சந்தர்ப்பம் இதோ!!!

புதிய வரவுகள்
- சுத்தமான பட்டுச் சேலைகள்
- பான்சி சாறிகள்
- சுரிதார்
- தாவணி
- மணப்பெண்ணிற்கான உடுப்புகள்
- பார்டி உடுப்புகள்
- ஸ்கேட்ஸ்
- குருத்தா மேலங்கிகள்
- குருத்தா சூட்ஸ்



3 FOR $10.00
பிளவுஸ் / பிறா
ஸ்கேட்ஸ் / நைற்றிஸ்
தைத்த சாறங்கள்
பெனியன் / உள்ளாடைகள்

EACH $10.00
பால் குக்கர்
அப்பச்சட்டி
புட்டுக்குடம்
ஸ்ரீமர், தோசைச்சட்டி
ஹொட் பொட்
சார்லி, மல்லிகை
வாசனைத்திரவியங்கள்
டெனிம் or டிரெஸ் பான்ஸ்
மந்திர பெட்டி, றிவேஸ் ஹோரன்

10 Cup $20.00


Roti Maker $38.00


Preethi Mix. $150.00



OPEN
7 Days
10:00 am -
9:00 pm

Tel: 416-298-1598
Tel: 647-875-5002 Cell: 647-239-SAMY (7269)
1884 B Kennedy Road (at Ellesmere)
Scarborough, Ontario M1P 2L8
www.samyandsons.com E-mail: samyandsons@gmail.com

அன்றும், இன்றும் என்றும் ஒரே குடையின் கீழ் சாமி அன்ட் சன்ஸ்

# ஹரி ஆனந்தசங்கரி அவர்களுடன் ஒரு சந்திப்பு

**புதிதாக உருவாக்கப்பட்டு, எதிர்வரும் தேர்தலில் நீங்கள் நாடாளுமன்ற பிரதிநிதியாக போட்டியிடவுள்ள 'ஸ்காபரோ - ரூஜ் பார்க்' (Rouge park) தொகுதி பற்றி விபரமாக குறிப்பிட முடியுமா?**

கனடாவின் அரசியல் அமைப்பு சட்டத்தின் 'தேர்தல் தொகுதி எல்லைகளின் மறு சீரமைப்பு சட்டம்' (Electoral Boundaries Readjustment Act) பிரிவின் அடிப்படையில் மாறுபடும் கனடிய குடித்தொகையின் பரவலாக்கத்திற்கு ஏற்றமாதிரி பத்து வருடத்திற்கு ஒருமுறை தேர்தல் தொகுதிகள் தேவையேற்பட்டால் மாற்றி யமைக்கப்படுவது வழமையாகும். இங்கு தொகுதி மாற்றியமைக்கப்படும் போது அதன் எல்லைகளும் மாறலாம், பெயரும் மாறலாம்.

'மத்திய அரசின் ஒன்ராறியோ மாகாணத்திற்குரிய எல்லைகளை உருவாக்கும் சபை' (Federal Electoral Boundaries Commission for Ontario) என்னும் கனடிய அரசின் கட்டுப்பாட்டினுள் இயங்கும் அதிகாரசபை ஒன்று ஏற்படும் தேவைகளின் அடிப்படையில் ஆய்வு செய்து எல்லைகளையும், தேர்தல் தொகுதிகளின் பெயர்களையும் மாற்றியமைக்கின்றது. இந்த அதிகார சபையின் தீர்மானங்களும், அறிக்கைகளும் கனடாவின் தலைமை தேர்தல் அதிகாரிக்கு (Chief Electoral officer of Canada) சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து கனடிய மத்திய அரசின் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்படுகின்றது.

இந்த அடிப்படையில் எதிர்வரும் ஒக்ரோபர் 2015 இல் நடைபெறபோகும் கனடிய மத்திய அரசின் 42வது பொதுத் தேர்தலுக்கான தேர்தல் தொகுதிகள் யாவும் கடந்த பெப்ரவரி 2012 இல் மறுசீரமைக்கப்பட்டு நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் வழங்கப் பட்டபோது 'ஸ்காபரோ ரூஜ் பார்க்' (Scarborough Rouge Park) ஆகிய மூன்று தொகுதிகளிலிருந்தும் என்னும் புதிய தொகுதி ஒன்றும் உருவாக்கப்பட்டது.

இப்புதிய தொகுதி ஏற்கனவே ராதிகா சிற்சபைசன் நாடாளுமன்ற பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்ட 'ஸ்காபரோ ரூஜ் ரிவர்' (Scarborough Rouge River) தொகுதி மற்றும் 'ஸ்காபரோ ஹில் வூட்' (Scarborough Guild Wood) 'பிக்கரிங் & ஸ்காபரோ கிழக்கு' (Pickering & Scarborughe East) ஆகிய மூன்று தொகுதிகளிலிருந்தும் சிறு பிரதேசங்களை பிரித்து எடுத்து 'ஸ்காபரோ ரூஜ் பார்க்' (Scarborough Rouge Park) என்னும் பெயரில் புதிய ஒரு தொகுதியாக உருவாக்கப்பட்டது. கனடிய தமிழ் மக்களிடையேயிருந்து முதன் முதலாக நாடாளுமன்ற பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்ட ராதிகா சிற்சபைசனின் தொகுதி தற்போது ஸ்காபரோ வடக்கு (Scarbourgh North) என பெயர் மாற்றமும் செய்யப்பட்டுள்ளது.

லிபரல் கட்சி சார்பில் 2015 ஒக்ரோபரில் நான் வேட்பாளராக போட்டியிடப்போகும் 'ஸ்காபரோ ரூஜ் பார்க்' (Scaroburgh Rouge Park) என்னும் தொகுதியின் வடக்கு எல்லையாக 'ஸ்ரீல் ரோட், கிழக்கு எல்லையாக 'பிக்கரிங்', தெற்கு எல்லையாக ஒன்ராறியோ நீரேரியும், மேற்கு எல்லையாக 'நீல்சன் ரோட்' வீதியோரமாக 401 நெடுஞ்சாலை வரை வந்து அதன் தொடர்ச்சி 'மோர்னிங்சையிடில்' வீதியோர மாக கீழ்நோக்கி செல்கிறது. ஒன்ராறியோ மாகாணத்தில் மட்டும் பதினைந்து புதிய தொகுதிகள் இம்முறை உருவாக்கப் பட்டுள்ளன. இதேபோல் ஏனைய சில மகாணங்களிலும் 15 புதிய தொகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மொத்தமாக முன்னர் 308 தேர்தல் தொகுதிகள் இருந்த நிலமை மாறி கனடா முழுவதும் தற்போது மொத்தமாக338 தொகுதிகளாக உருவாக்கப் பட்டு அடுத்த தேர்தல் நடைபெறவுள்ளது.

'ரூஜ் பார்க்' என்பது கனடாவின் பூகோள அடிப்படையில் ஒரு முக்கியமான இடமாக உள்ளது. ஸ்காபரோவின் கிழக்கு பகுதியில் பிக்கரிங் நகர எல்லையோரமாக தெற்கே ஒன்ராறியோ நீரேரி பகுதியிலிருந்து வடக்கே மார்க்கம் நகரம் வரை கனடாவின் தேசிய மயமாக்கப்பட்ட அழகிய வனவள சோலை (Urban National Park) சுமார் 16 கி.மீ வரை நீளமாக செல்கின்றது. சுமார் 47 சதுர கிலோ மீற்றர் பரப்பளவினை கொண்ட இவ் வனவள சோலை பகுதியில் பல நூற்றுக்கணக்கான இயற்கையான மூலிகை மரங்கள் (Diffrent species of plants), பறவைகள், ஊரும் பிராணிகள் உள்ளன. கோடை காலத்தில் இப்பிரதேச மக்களுக்கு ஆரோக்கியமான சூழல், சுற்றாடல்கள் அமைந்த இந்த பகுதி ஓர் இனிமையான வசந்தத்தினை நுகரும் பகுதியாகவே உள்ளது. கோடை கால உல்லாச கொண்டாட்டங்களை கொண்டாடி மகிழ்ந்திருக்கும் இவ் அழகிய வனவள சோலையினூடாக சுமார் 16 கி.மீற்றருக்கு என உருவாக்கப்பட்ட நடை பாதைகள் (Hiking Trails), சயிக்கிள் ஓடும் பாதைகள் யாவும் நன்றாக உருவாக்கப்பட்டுள்ளன. அத்துடன் இவ் வனவள சோலையின் தெற்கு எல்லையாக ஒன்ராறியோ நீரேரி உள்ளது. அந்த நீரேரி ஓரமாக அமைக்கப்பட்டுள்ள பூங்காக்கள், நடை பாதைகள், உடல் பயிற்சிக்காக சையிக்கிள் ஓடும் பாதைகள் (உதாரணமாக Port Union Watershed Park) யாவும் கடுமையாக உழைக்கும் தொகுதி மக்களுக்கு ஆரோக்கியம் தரும் சுற்றாடல் ஆகும். கடந்த மே 25, 2012 இல் கனடிய மத்திய அரசு சுமார் 150 மில்லியன் டொலர்களை 'ரூஜ் பார்க்' வனவள சோலையின் பராமரிப்புக்காக ஒதுக்கியிருந்தது என்ற செய்தி வெளியாகியிருந்தது. எதிர்வரும் தேர்தலில் நான் போட்டியிடப் போகும் தொகுதியினுள் கனடா மத்திய அரசின் கட்டுப்பாட்டினுள் இருக்கும் இவ் வனவள சோலை அமைந்திருப்பதால் இந்த தொகுதிக்கு 'ரூஜ் பார்க்' தொகுதி என பெயரிடப்பட்டுள்ளது. 'ரூஜ் ரிவர்' (Rough River) என குறிப்பிடப்படும் சிறு நீரோடை ஒன்று இப்பிரதேசத்தின் பள்ளத்தாக்குகள் வழியாக சென்று ஒன்ராறியோ நீரேரியில் விழுகின்றது.



நேர்காணல் சிவ பஞ்சலிங்கம்

ரொறொன்ரோ மிருகக்காட்சிசாலை, ஒன்ராரியோ மாகாண வீதிப்பரீட்சை நிலையம், மோர்னிங்சையிட் நகர பூங்காவின் ஒரு பகுதி, ரொறொன்ரோ பல்கலைக்கழக வளாகம், அதன் அருகே சென்ரானியல் கல்லூரி, ஏனைய நகரங்களைத்தொடுக்கும் புகையிரத சேவை நிலையம் (GO Transit Railway Station) யாவும் இத்தொகுதியில் உள்ளன.

'ஸ்காபரோ ரூஜ் பார்க்' (Scarborough Rouge Park) தொகுதி மக்கள் யாவரும் கடுமையான உழைப்பாளிகள் என்பதற்கு ஆதாரமாக அவர்களின் வாழ்வு முறைக-ளையும், குடியிருப்பு மனைகளையும் வைத்தே கணிப்பிட்டு விடலாம். புதிதாக நிர்மாணிக்கப்படும் பிரதேசங்களின் விலை உயர்ந்த வீடுகள், அதனை சுற்றிய அமைதியான சூழல் சுற்றாடல்களை நம்மவர்களே உருவாக்குபவர்களாக உள்ளனர். தமிழர் பலரின் வர்த்தகங்கள், தொழில் துறைகள் இதேதொகுதியில் பல இடங்களில் சிறப்பாக இயங்குகின்றது. 'ரூஜ் பார்க்' தொகுதியில் சில இடங்களில் அடர்த்தியான மரங்கள் நிறைந்த பெரிய காணிக்குள் உருவாக்கிய மனைகளில் பல வருடங்களாக கனடியர்கள் வாழ்வது கடுமையான அவர்களின் உழைப்பு களுக்குரிய சான்றுகளாகும்.

கனடாவில் கடின உழைப்பாளிகளுக்கு கைகொடுத்து அரவணைத்து வரும் லிபரல் கட்சியின் பிரதிநிதியாக, உழைப்பாளிகள் நிறைந்த இத்தொகுதியில் போட்டியிட இருப்பதனை பெருமையாக கொள்கிறேன். இதே தொகுதியிலிருந்து நான் தெரிவு செய்யப்பட்டு இனிமேல் வரும் காலங்களில் கனடா வாழ் தமிழ் மக்களுக்கும் கனடிய மத்திய அரசுக்கும் இடையில் ஒரு பாலமாக இருப்பேன் எனத்தெரிவிக்கின்றேன்.

**ஆகஸ்ட் 20, 2014 இல் நடந்த**

தொடர்ச்சி 17ஆம் பக்கம்



# மூட்டுவலி: நிவாரணங்கள்-முத்திரை-சிகிச்சைகள்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

### மூட்டுவலிகள் ஏன் உருவாகின்றன

நாற்பது வயதைத்தாண்டிய பலருக்கும் பெரும் பிரச்சினையாக அமைவது மூட்டு வலிகளே. அதிலும் குறிப்பாக பெண்களுக்கு இந்த நோயின் தீவிரத்தன்மை அதிகமாக உள்ளது. இந்த மூட்டுவலி பெரும்பாலும் மூட்டுகளில் ஏற்படும் தேய்மானத்தினா லேயே உருவாகின்றன. சிலருக்கு வாத



கோளாறும் (Rheumatism) இருக்கலாம். கால் முட்டிகளில் தேய்மானம் ஏற்பட பல காரணங்கள் இருந்தாலும் முக்கிய காரணங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிடலாம்.

1. அதிக உடல் எடை ஒரு முக்கிய பிரச்சினையாகும். நமது உடலின் எடையைத் தாங்குவதில் கால் முட் களுக் கும், குதிக்கால் எலும்புகளுக்கும் மிக முக்கிய பங்குண்டு. எடை அதிகமாக அதிகமாக கால் முட்டி எலும்புகளிலும் குதிக்கால் எலும்புகளிலும் அழுத்தம் அதிகமாவதால் தேய்மானமும் அதிகமாகின்றது.

2. நடக்கும் முறையைப் பொறுத்தும்



கால்முட்டியில் தேய்மானம் அதிகமாகலாம். உடல் எடை இரண்டு கால்களிலும் சமமாக பரவுமாறு நேராக நடப்பதே சரியான முறையாகும் கூர்ந்து கவனித்தால் பலரும் ஒரு பக்கவாட்டிற்கு சற்று சாய்ந்தே நடக்கின்றனர். இதனால் உடல் எடை ஒரு பக்கத்து கால் பகுதியை அதிகமாக தாக்குவதால் நாளடைவில் அந்த கால் முட்டி எலும்புகள் தேயத் தொடங்கிவிடுகின் றது. வலியும் ஆரம்பமாகி விடுகின்றது.

3. ஊட்டச்சத்து குறைபாடு முக்கியமாக கல்சியம் சத்தின் குறைபாட்டாலும் மூட்டு வலிகளில் தேய்மானம் அதிகமாகும். மாதவிடாய் நின்று போன பெண்களுக்கு இயக்க நீர் மாறுதலால் (Hormone changes) கல்சியத்தின் அளவு எலும்புகளில் குறைந்து எலும்பு மெலிதல் நோய்



(Osteoporosis) ஏற்படக்கூடும் மூட்டு வலிகளுக்கு இது முக்கிய காரணம்.

4. இப்போது 40 மேல் மட்டுமல்ல இளம் பெண்களும் கூட மூட்டுவலியினால் அவதிப் படுகின்றனர். ஊட்டச்சத்து குறைபாடு, குதி உயர்ந்த காலணிகளை (Hi heels) அணிவது போன்றவையே இளம் பெண்களுக்கு மூட்டுவலி உருவாகக் காரணங்களாகும்.

மூட்டுவலி ஆரம்பமானால் உங்கள் குடும்ப மருத்துவரை அணுகி ஆலோசனைகளையும் பொருத்தமான பரிசோதனைகளை செய்ய வேண்டும். முடக்குவாதம் (Rheumatoid Arthritis) போன்ற நோய்கள் இருக்கும் பட்சத்தில் அதை குணப்படுத்தும் வழிமுறை களை மேற்கொள்ள வேண்டும்.

### மூட்டுவலி உள்ளவர்களுக்கான அறிவுரைகள்

1. உடல் எடை அதிகமாக இருந்தால் அதை குறைக்கும் முயற்சியை உடனே தொடங்குங்கள். உடல் எடை குறையாத வரையில் நீங்கள் என்னதான் மருந்துகளை உபயோகித்தாலும் மீண்டும் மீண்டும் கால் முட்டி வலி வந்தே தீரும்.
2. தினசரி 12 ரம்ளர்கள் நீர் அருந்துவது அவசியம்.
3. வாயுவை உருவாக்கும் கிழங்கு வகைகள், பருப்பு வகைகள் அதிகம் சேர்க்க வேண்டாம்.
4. பதட்டம், மனஅழுத்தம், கவலை, உடல் சோம்பல் என்பனவும் உடல் வலிகளை உருவாக்கி மூட்டுக்களில் தீராத வலிகளை ஏற்படுத்தும்.

### மூட்டுவலிக்கு முடிவுகட்டும் யோகா

நமது உடலில் 44 மூட்டுக்கள் அமைந்துள் ளன. இவற்றுள் வயதானவர்களை ஆட்டிப்படைப்பது முழங்கால் மற்றும் தோள்மூட்டு வலிகளே. யோகாசனங்களில் எந்த நிலைகளை எடுத்துக் கொண்டாலும் மூட்டுக்களை மையப்படுத்தியே பெரும்பாலும் இருக்கின்றன. உதாரணமாக முதலில் சூரிய நமஸ்காரம் (Sun Salutations) என்ற பயிற்சியை எடுத்துக் கொண்டால் உடலிலுள்ள முக்கியமான அனைத்து மூட்டுக்களும் சம்பந்தப்பட்டுள் ளன. Use it or loose it என்ற ஆங்கில சொற்றொடருக்கமைய உடலிலுள்ள மூட்டுகளை இயங்கும் நிலையில் வைத்திருக்க வேண்டும் அல்லது அவற்றை செயற்படாதபடி இழந்துவிட வேண்டியிருக்கும். எனவேதான் மூட்டு வலிக்குரிய சில ஆசனங்களையாவது தேர்ந்தெடுத்து ஒரு சிறந்த யோகாசன




ஆசிரியரின் உதவியுடன் பழகி வந்தால் உடல் எடையைக் குறைப்பதுடன் மூட்டுகளில் எந்த வலியும் ஏற்படாது மிகுதி வாழ்நாளை மகிழ்ச்சியுடன் கழிக்க முடியும்.

### முக்கியமான ஆசனங்கள்

1. விபரீதஹரணி 2. ஜானு சீராசனம்
3. திரிகோணாசனம் 4. கோ முகாசனம்
5. பஸ்ஸி மொத்தாசனம் 6. நாடி சுத்தி
7. இலக்கு நோக்கு வில்லாசனம்

### மூட்டு தேய்மானத்திற்குரிய முத்திரை சிகிச்சை - *Joint mudra*

இந்த மூட்டு முத்திரைப் பயிற்சியைச் செய்து வரும்போது அனைத்துவிதமான மூட்டுவலிகளும் குறையும். பெரும்பாலான மூட்டு வலிகள் ஒரு நாளில் உருவானவை அல்ல. அவை வருடக் கணக்காக எலும்பு தேய்ந்து மூட்டு வலியாக உருவாகியவை. இவ்வாறு பல வருடங்களாக உருவாகிய வலிகள் ஒரு நாளில் மறைந்து விடாது. மீண்டும் சிறிது சிறிதாக எலும்புகள் வளர வேண்டும். அதற்கு பல மாதங்களாகலாம். எனவே தொடர்ந்து மூட்டு முத்திரையைச் செய்து வருவது அவசியம். சிலர் விரைவாக நிவாரணம் அடையக் கூடும். ஆனால் முழுமையான பலன் கிடைக்க சில மாதங்கள் ஆகலாம்.

கைவிரல்களின் அசைவில் உடலிலுள்ள பஞ்ச பூத சக்தியைச் சமன்படுத்தி அதன் சக்தியூட்டல் பாதைகளைச் சீர்செய்து நரம்பு மண்டலங்களை உறுதியாக்கி எலும்புகளுக்கு வலிமையைக் கொடுக்கும் இந்த மூட்டு முத்திரையின் செய்முறையை அறிய வேண்டுமாயின் எனது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.




ஆரோக்கிய வாழ்வு
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721



MOHAN
HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC
mhc
• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்
போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்
WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:
• STRESS • SKIN PROBLEM • RESPIRATORY PROBLEMS • DIGESTIVE PROBLEMS • VARICOSE VEINS • BACK PROBLEM /NECK PROBLEM • TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP • ALLERGIES • SEXUAL PROBLEMS • SEXUAL PROBLEMS • CHOLESTEROL • TUMOR • FOOT PROBLEM





Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.
HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING
Cough, Flu, Depression, Anxiety, Asthma
Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea
Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer
Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis
Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# ஹரி ஆனந்தசங்கரி...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

**தங்களின் வேட்பாளர் நியமன தேர்தல் கனடாவின் ஏனைய எந்த கட்சி களினாலும் தமிழர்கள் மத்தியில் நடக்காத ஒரு நிகழ்வாக நடந்தேறியுள்ளது. இந்த நிகழ்வைப் பற்றி எமது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வீர்களா?**

லிபரல் கட்சியின் அங்கத்தவர்களுக்கு இடையே நடக்கும் வேட்பாளர் தெரிவு போட்டி என்பது இவ்வளவு தூரம் மக்கள், ஊடகவியலாளர்கள், தொண்டர்கள் படை என சூழ்ந்திருக்க நடப்பது என்பது மிக அருமையான விடயம்தான்.

ஆனால் இங்கு போட்டி என்பது ஒரு மாறுபட்ட கோணத்தில் பரபரப்புடன் நடந்து முடிந்தது. இது உலகம் வாழ் தமிழர்கள் யாவரும் அறிந்த ஒரு விடயம். வெற்றி பெறுவதற்காக என்னோடு சேர்ந்து சுமார் 600 தொண்டர்கள் தீவிரமாக உழைத்திருந் தார்கள். இங்கு போட்டியிடுவதற்காக களத்தில் இறங்கிய இரு வேட்பாளர்கள் இறுதி நேரத்தில் போட்டியிலிருந்து விலகி எனக்கு ஆதரவாக இருந்தார்கள். எனக்கு இங்கு போட்டி என்பது ஒரே ஒருவருடன் மட்டுமே இறுதிவரை இருந்தது. அவரே திரு. அஸ்வானி பாரட்வாஜ் (Mr. Ashwani Bhardwaj). அவர் மிகவும் வலிமையும், திறமைகள், செல்வாக்கும் நிரம்பப் பெற்றவர். அவர் லிபரல் கட்சியின் நீண்ட கால உறுப்பினர். ஏற்கனவே கட்சி தேர்தல் களில் தொண்டனாக பணியாற்றியவர். ஆங்கில இலக்கியத்திலும் எம். ஏ. பட்டம் பெற்றவர். ஒரு வக்கீலாக பணிபுரிபவர். அவர் சார்ந்த வட இந்திய சமூகம் அவருக்கு உறுதுணையாக இருந்தது.



அவரும் நானும் மிகப்பெரிய தொண்டர்கள் குழு மற்றும் வாக்காளர்கள் குழுவினரை உருவாக்கிக் கொண்டு எடுத்துக் கொண்ட குறிக்கோளில் வெற்றி பெற அயராது உழைத்தோம். எங்கள் இருவருக்கும் ஒரே உயர்ந்த இலட்சியம் மட்டுமே இருந்தது. இறுதியில் நான் வெற்றி பெற்றேன். அவர் பெருந்தன்மையாக, கனடிய அரசியலில் உள்ள மனித நேயங்களுடன் எனது வெற்றிக்கு மேடையில் வைத்து பகிரங்க வாழ்த்து தெரிவித்தார்.

ஆனால் பொதுவாக உயர்ந்த இலட்சியத்தினை அடைய அவரவர் கடினமாக உழைப்பார்கள், முயல்வார்கள் என்பது வழமையான இயல்பு முறையாகும். ஆனால் இந்நிலைமை மாறி என்னை தோற்கடிக்க ஒரு சில நபர்களை கொண்ட கூட்டம் அதிதீவிரமாக தங்கள் நேரம் மற்றும் பணத்தை செலவழித்திருந்தார்கள். இது தமிழ் மக்களுக்கு தெரியவர எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். துண்டுப் பிரசுரங்களை தயாரித்து அங்கத்தவர்கள் வீடுகளுக்கு விநியோகித்தார்கள். இறுதியாக மிரட்டல் பிரசுரங்களும் விநியோகித்து பார்த்தார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் இறுதியில் நான் வெற்றி பெற்றதற்கு அவர்களுக்கும் ஒரு வகையில் நன்றி தெரிவிக்க வேண்டும். ஏனெனில் இந்த தேர்தலினை பரப்புதற்கு நெய் ஊற்றி தீச்சுவாலையினை வளர்த்து விட்டவர்கள் என்ற வகையில் நன்றிக் குரியவர்கள். பரபரப்பு எதுவுமில்லாது சுமார் மூன்று மணித்தியாலத்திற்குள் ஒரு தொகுதியின் கட்சி அங்கத்தவர்களிடையே சாதாரணமாக நடந்து முடியும் தேர்தல், பரபரப்பானதும் தொண்டர்கள் தீவிரமானர் கள். கட்சியின் அங்கத்தவர்கள் சுறுசுறுப்பு அடைந்தார்கள். தமிழ் தொலைக்காட்சிகள், வானொலிகள் களத்தில் நின்று நேரடி செய்திகளை வழங்கிக் கொண்டே இதனை கனடா தமிழர்களிடையே பரபரப்பான செய்தியாக்கினார்கள்.

இது தவிர கனடா முழுவதும் உள்ள தேர்தல் தொகுதிகளில் லிபரல் கட்சி அங்கத்தவர்களை மிக அதிகமாக கொண்ட தொகுதிகள் ஒருசிலவற்றில் இந்தத் தொகுதியும் ஒன்றாகும். ஒரு பக்கத்தில் போட்டியாளருடன் சமர் செய்வது அதே நேரம் பின்பக்கமாக நின்று கற்கள் வீசுபவர் களுக்கும் மத்தியில் அதிதீவீரமாக எமது தொண்டர்கள் இயங்கினார்கள். நீங்கள் கேட்டமாதிரி தமிழர் மத்தியில் கட்சி அபேட்சகர்கள் போட்டியில் கனடாவில் எந்த இடத்திலும் நடக்காத ஒரு நிகழ்வாக இது நடந்து. இறுதியில் தீவிரமாக உழைத்தவர் கள் சகலரையும் உற்சாகத்தின் உச்சத்திற்கு கொண்டு போன வெற்றியாக அமைந்து விட்டது.

இதற்காக உழைத்த அனைவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் பொதுத்தேர்தலில் உங்களது ஒத்துழைப்பையும் ஆதரவையும் எனக்கு தந்து ஸ்காபரோ றூஜ் பாக் இன் கனடிய நாடாளுமன்ற பிரதிநிதியாக அனுப்புமாறு 'விளம்பரம்' பத்திரிகை யினூடாக கேட்டுக்கொள்கிறேன். எனது நியமன வெற்றிக்கு பின்னர் மக்களுடன் தொடர்புகொள்ள ஒருசந்தர்ப்பத்தை தந்த விளம்பரம் பத்திரிகைக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன



# போர்ட் சகோதரர்களின்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

துன்புறுத்தியதாகவும் மனைவியின் விருப்பத்துக்கு மாறாக பிள்ளைகளை புளோரிடாவிற்கு கொண்டு செல்ல விருப்பியதாகவும் கூறி 911 அழைக்கப்பட்டது. இவர் மேயராக பதவியேற்ற பின்னர் மேற்கூறியதை விட வேறு பல குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டன. இவருடன் பெரும்பாலான கவுன்சிலர்கள் ஒத்துழைக்க மறுத்துவிட்டனர். இவரது அதிகாரங்கள் அகற்றப்பட்டு ஒரு பொம்மை போல் மாற்றப்பட்டார். உலகள வில் ஊடகங்கள் இவரை ஒரு நகைச் சுவையாளராக மாற்றியன. இவரது நடவடிக்கைகளுக்கு வக்காளத்து வாங்குபவ ராக இவரது தமையானார் டக் போர்ட் செயல்பட்டார். இவரை மேயர் பதவி யிலிருந்து அகற்ற ஊடகங்கள் முனைந்தன. இவருக்கு எதிராக திறமையான போட்டியாளர் ஒருவரை தேர்தலில் நிற்கவைக்க ஊடகங்கள் முனைந்தன. அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டவரே ஜோன் ரொறி.

புரட்டாதி 12 வெள்ளியன்று வரை கருத்துக் கணிப்புக்கள் ஜோன் ரொறிக்கு 42 வீதமும், ரொப் போர்ட்டுக்கு 28 வீதமும் 26 வீதம் ஒலிவா சோவுக்குமாக இருந்தன. போர்ட் தோல்வியைத் தழுவுவது உறுதியான நிலையில் போர்ட் கடந்த வாரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். டக் போர்ட் இம் முறை 2ம் வட்டாரத்தில் தான் போட்டியிடப் போவதில்லை எனவும் தம்பியாருக்கு தேர்தலில் உதவவுள்ளேன் என ஏற்கனவே அறிவித்திருந்தார். 2ம் வட்டாரத்தில் போர்ட் சகோரர்களின் மருமகன் மைக்கல் போர்ட் போட்டியிட்டார். இவை அனைத்தும் புரட்டாதி 12 நண்பகல் வரையினதாகவிருந்தது. ரொப் போர்ட்டுக்கு புற்று நோயிருக்கலாம் என வைத்தியர் சந்தேகப்படுவதனால் நிலைமை மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. புரட்டாதி 12 2மணிக்கு முன்னராக வேட்பாளர்கள் தாங்களாகவே போட்டியிலிருந்து விலகலாம். போட்டியிடுபவர்களும் வேட்பு மனுக்களை 2மணிக்கு முன்னராக சமர்ப்பிக்க வேண்டும். நண்பகல் 11 மணியளவில் ரொப் போர்ட் மேயர் பதவியிலிருந்து விலகி 2ம் வட்டார கவுன்சிலராக போட்டியிடுகின்றார். இவரது மருமகன் மைக்கல் பாடசாலை தர்மகத்தாவுக்காக போட்டியிடுகின்றார். மைக் போர்ட் மேயராக போட்டியிடுகின்றார். தம்பி விட்ட விடயங்களை அண்ணன் முடித்து விடுவார் என்ற ஒரு துயரங்கலந்த கடினமான கடிதத்துடன் இவர்களது இந்த தேர்தல் நாடகம் முடிவுக்கு வருகின்றது.



ஊடகங்கள் நினைத்தது போல் ரொப் போர்ட் அடுத்த முதல்வர் இல்லை. ரொப் போர்ட் தேர்தலில் போட்டியிட முடியாமல் போகலாம் என ஏற்கனவே போர்ட் சகோதரர்களுக்குத் தெரியும். ரொப் போர்ட்டுக் எதிரான வழக்குகள் தீர்ப்பு வழங்கப்பட்டால் போர்ட் போட்டியிலிருந்து விலக்கப்படுவார். இதனால் திட்டமிட்டே மைக் போர்ட் 2ம் வட்டாரத்தில் போட்டியிடாமல் ஒதுங்கியிருப்பது போல நடித்தார். 2ம் வட்டாரம் இவர்களது குடும்பச் சொத்தாக மாறிவிட்டது. அதில் மைக்கல் நிறுத்தப்பட்டார். ரொறொன்ரோ மாநகரையும் போர்ட் நகரமாக மாற்றுவதே இவர்களது திட்டம். ரொப் போர்ட் தனது பதவிக்காலத்தில வீதி ஒன்றிற்கு நெல்சன் மண்டலோ வீதி என பெயர் வைப்பதையே எதிர்த்து வாக்களித்திருந்தார்.

மைக் போர்ட் வெகு அண்மையில் ரொறொன்ரோ பொலிஸ் தலைமை அதிகாரியைப் பற்றி உண்மைக்கு புறம்பான செய்தியைக் கூறியமைக்காக பகிங்கர மன்னிப்புக் கேட்டார். இவர் இருந்த வீட்டில் பணம் காணமல் போனமைக்காக குடும்ப உறுப்பினர்களை (மனைவி, பிள்ளைகள்) ஒரு தனியார் புலன் நிறுவனத்தின் மூலம் விசாரணைக்கு உற்படுத்தியவர். விசேட குழந்தைகளின் செயற்பாடுகளை ஏளனம் செய்தவர் கனடாவின் பிரதான எழுத்தாளர் மார்க்கிரட் அற்வூட்டை யாரென்றே எனக்கு தெரியாது என ஏளனம் செய்தவர். ரொப் போட்டின் மனைவியார் போலாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவரைப் பற்றி 1010 வானொலியில் கேலி செய்தவர் போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் மைக்கின் முன்னால் முன்வைக்கப்படுகின்றது. இவர் ரொப் போர்ட்டை விட மோசமானவர். மக்களின் பிரச்சினைகள் எதுவுமே தெரியாதவர். அவர்கள் வலிகளை அறியாதவர்.

தங்களை ரொறொன்ரோ கென்னடி சகோதரர்கள் எனக் கூறும் போர்ட் சகோதரர்கள் மக்களை முட்டாள்களாக்க முற்படுகின்றார்கள். கடந்த தேர்தலில் பல வாக்குறுதிகளை வழங்கி பதவி பெற்ற ரொப் போர்ட்டால் எதனையும் செய்ய முடியவில்லை. பெரும்பாலான நேரங்களில் இவரது தனிப்பட்ட வாழ்வின் அவலங்களே ஊடகங்களில் அடிபட்டன. ரொறொன்ரோ வாழ்மக்களின் அத்தியாவசிய தேவையான போக்குவரத்து மிகவும் மோசமான நிலையை சென்றடைந்துள்ளது. அதனை நிவர்த்தி செய்ய போர்ட் எதுவுமே செய்ய முடியாதவராகிவிட்டார். கடந்த நான்கு வருடங்களில் போர்ட் சகோதரர்கள் செய்த சாதனை மக்களை முட்டாள்களாக்கியது.



உங்களை
நேசிக்கிறேன் என்ற
குரலின் சத்தம் கேட்கின்றதா??

நம்பினவர்களுக்கு சுகத்தையும்,
ஆசீர்வாதத்தையும்,
சமாதானத்தையும் கொடுத்த
தேவன் உங்களுக்கும்
செய்யாரல்லவா?





Now she walks



Milk Allergy gone



Psoriasis all over body



2 Yrs Psoriasis healed



A boy after 5 yrs







Sophia's cancer healed



Asthma healed



Praying For healing

## Do You Hear The Voice that Calls " I LOVE YOU ? "

**Since they believed, He gave peace, victory and healing. Will he not do the same thing to you?**

Dr.Ananda Stira, raised as an orphan was desperately looking for someone with a mother's passion to call him " my son. ".No one in this world was able to satisfy his thirst even for money. One day the Lord Jesus Christ heard his cry and called him " My Son" with the same true passion that he was desiring to be heard for many years. His life was transformed totally and since then God is doing remarkable miracles through his prayers to heal those who were affected like him.

நன் றுமிகளை வளர்ப்பு அனாதை விடுதியில் பல துன்பங்களின் மத்தியில் வாழ்ந்த இவர் தன்னை மகனே என்று அழைக்க யாரேனும் இருக்கிறார்களா என்று வாழ்க்கையில் விரக்தியடைந்து முழ்கையைவில் விழிப்பில் நின்றபோது இயேசு இவரைக் கம்பமாய் மகனே என்று அழைத்த பொழுது இவர் வாழ்க்கை முற்றிலுமாக மாறியது. பாடுகள் நன்மைகள் வேண்டுதல்களுக்கோர் வசனமாய் தெரிந்து வருகிறார். தேவன் அற்புதங்களைச் செய்கிறார்.

In the past, God touched those who believed and healed them. God is still alive and able to perform divine miracles to those who cry out to him. If anyone trusts that Jesus Christ died for their sins and accept God's forgiveness, He will accept them as His children and .......... ?

தேவன் இன்றும் அற்புதங்கள் செய்கிறார். சிலுவையில் இயேசு பாவங்களுக்காக மரித்தார் என்று நிதானித்து அவர் என் பாவங்களுக்காகவும் மரித்தார் என்று ஏற்றுக் கொள்ளும் போது அவர் மன்னித்து தன் பிள்ளையாக ஏற்றுக் கொள்ள ஏற்றுக் கொண்டார் .......... ?









# EVA.DR.ANANDA STIRA

## பல வருடங்களாக கனடாவிற்கு வருகைதரும் இவருக்கூடாக தேவன் இயேசு செய்த அற்புதங்களுக்கு அளவில்லை.



கனடாவில் வாழும் இவன் சரீரம் முழுவதையும் பார்த்த டாக்டர்கள் அழுதார்கள், பாடசாலையில் ஆசிரியர்கள் இவனைப் பார்க்க விரும்பவில்லை ஆனால் இயேசுவோ மனதுருகிக் குணமாக்கினார். மருந்து இல்லைதான் ஆனால் பரமவைத்தியர் இயேசு இரங்குவார்



கனடாவில் வாழும் இவள் பலவருடங்கள் பிள்ளை தங்காமல் மனமுடைந்து வாழ்ந்தாள். பரமவைத்தியர் இயேசு ஆனந்த ஸ்திராவின் உருக்கமான ஜெபத்தினால் குழந்தைப் பாக்கியத்தைப் பெற்று இன்னுமோர் பெண் குழந்தையையும் பெற்றாள்.

**Scarborough - Crusade Meeting**

SEP 11th Thursday @ 7.00 pm – Tamil
SEP 12th Friday @ 7.00 pm – Tamil
SEP 13th Saturday @ 7.00 pm – Tamil
SEP 14th Sunday @ 7.00 pm – Tamil

SEP 19th Sunday @ 7.00 pm – English
SEP 20th Monday @ 7.00 pm – English
SEP 21st Tuesday @ 7.00 pm – English

# MIRACLE FAMILY TEMPLE

**1100 Bellamy Road, Scarborough**
**416-439-7000, 7001**

வாழ்வை மாற்றும்
தொலைபேசிக் கூடான செய்தி

# 416-438-4380

# Parkway Mall Mobilicity !!!

$50 OFF COUPON

# $25/mo

Life Time Deal, No Contract.

Back-To-School Final Promo

## UNLIMITED Talk & Text

UNLIMITED Local Calling, & Ontario Long Distance

UNLIMITED Text messaging

UNLIMITED Internet & Mobile-Hotspot (+$10)

FREE Caller ID, Voice Mail, Call Waiting and more



| Nokia 3555 | Samsung T469 | Huawei Y301 | Samsung Galaxy S4G | LG G2x | Samsung Galaxy S4 |
|---|---|---|---|---|---|
| ~~$79.99~~ | ~~$99.99~~ | ~~$169.99~~ | ~~$199.99~~ | ~~$199.99~~ | ~~$649.99~~ |
| $0 | $0 | $69.99 | $79.99 | $79.99 | $369.99 |

No Contract !! No Credit Check !!

PHONES $50 OFF

You can bring in your own phone

ONLY at

Mobilicity @ Parkway Mall (Kiosk beside Metro Supermarket)
Parkway Mall (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough (தமிழ்/English/Chinese)
M1R4B8, 416-999-9229

mobilicity
Now that's smart.™





# தமிழன் வழிகாட்டி செந்தியின் ஏற்பாட்டில் நடைபெற்ற உள்ளூராட்சி மற்றும் கல்விச்சபை வேட்பாளர்கள், ஊடகவியலாளர்கள் கருத்திரங்கம்

கனடிய அரசியல் வரலாற்றில் புலம் பெயர்ந்து வாழும் தாயகத் தமிழர்களுக்கு உள்ளூராட்சி, கல்விச்சபை மற்றும் மத்திய அரசு நாடாளுமன்ற உறுப்பினர் போன்ற அந்தஸ்த்தை பெற்றுள்ள நமது உறவுகளின் சமூக சேவைகளும், அரசியல் பங்களிப்பும் பெரும் பாராட்டுதலுக்குரியதாகும். நமக்கு என்று ஒரு நாடு இல்லாத நிலையில், வந்தாரை வரவேற்று வேற்றுமையில் ஒற்றுமை காணும் பல்கலாச்சார நாடான கனடாவை இரண்டாவது தாய்நாடாகப் போற்றுவோம். ஒற்றுமையுணர்வுடன் நமது கலை கல்வி கலை இலக்கிய கலாச்சார மரபுகள் அத்தனையும் வருங்கால சந்ததியினர் முன்னெடுத்துச் செல்வர். அதற்கேற்ப எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 27ம் திகதியன்று உள்ளூராட்சி மற்றும் கல்விச்சபை தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, போட்டியிடவுள்ள 27 தமிழ் வேட்பாளர்களுக்கான ஊடகவியலாளர் சந்திப்புடன் கூடிய சிறப்பு கருத்தரங்கினை தமிழன் வழிகாட்டி செந்தி ஏற்பாடு செய்திருந்தார். இந்நிகழ்வு 7.9.2014 அன்று மாலை ஸ்காபரோ ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலய கலாச்சார



மண்டபத்தில் நடைபெற்றது. வரவேற்புப் பகுதியில் பெயர்களை பதிவு செய்து அவர்களுக்கான அடையாள செந்தியின் துணைவியார் வருகை புரிந்திருந்த அனைவரையும் வரவேற்று தேர்தல் வேட்பாளர்களின்

தொடர்ச்சி 21ஆம் பக்கம்




# மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

## MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA

வழங்கும்

# வெள்ளி விழா

## 1989 - 2014

# SILVER JUBILEE

| SUN | SAT |
|---|---|
| OCT 5TH 2014 @ 5:00 PM | OCT 11TH 2014 @ 5:00 PM |

**Chinese Cultural Centre**
5183 Sheppard Ave E, Toronto, ON M1B 5Z5
Markham & Sheppard

### 05.10.2014 ஞாயிற்றுக்கிழமை (முதலாம் நாள்)

- ★ **மகாஜனன் பாட்டுப் போட்டி**
  (இறுதிப் போட்டி)
- ★ மேனகா தக்கர் டான்ஸ் கொம்பனி வழங்கும்
  **"நடனம்"**
  நடன அமைப்பு : ம. மேனகா தக்கர்
- ★ நா. சாந்திநாதன் நெறியாள்கையில்
  **"தீராத கோடுகள்"**
  பிரதியாக்கம்: ஜெ.சுஜன்
- ★ அரவிந்தனின் மெகா ரியூனேஸ் வழங்கும்
  **"இசை கானம்"**
- ★ கீதா ஸ்ரீஸ்கந்தா தயாரிப்பில்
  மகாஜனாவின் வழித்தோன்றல்கள் வழங்கும்
  **"திரையிசை நடனம்"**
  பொலிவூட் நடன அமைப்பாளர்: நாயக்

### 11.10.2014 சனிக்கிழமை (இரண்டாம் நாள்)

- ★ **மகாஜனன் விருது வழங்கல்**
  தமிழ், கணித, பொதுஅறிவுப்போட்டி-2014
- ★ யசோதா அரவிந்தன் வழங்கும்
  **"விரலோடு பேசும் வீணை"**
- ★ ஆடலரசி செந்தில்செல்வி சுரேஸ்வரன் வழங்கும்
  **"மயக்கமும் கலையும்"**
  ஸ்ரீ அபிராமி நாட்டியாலய மாணவிகள்
- ★ கோவியின் நெறியாள்கையில்
  **"சுகமான சுமைகள்"**
- ★ க. சிவதாசன் நெறியாள்கையில்
  **"இலட்சிய வேட்கை"**
  கதை, வசனம்: குரும்பசிட்டி மு.திருநாவுக்கரசு
- ★ **"திரையிசை நடனம்"**
- ★ மகாஜனன்கள் வழங்கும்
  **"மெல்லிசை கானம்"**
  பின்னணி இசை: பவதாரணியின் பாரதி கலைக்கோவில்

தொடர்புகளுக்கு

**416-705-1493 | 416-451-8427 | 647-346-4913 | 647-547-7096**

**www.mahajanan.org**

# ஐம்பூத வெண்பா

## கடந்த இதழ் தொடர்ச்சி

## வளி

புவியை வளிவலயம் போர்த்திருத்தல் எங்கள்
தவமென்றே கொள்ளல் தகும் - பவனம்
அளவாக இல்லையேல் ஆருயிர்கள் வாழ
வழிவேறும் உண்டோ மதி. (25)

(பவனம் - வளி.)

அசையும் வளியதுவே காற்றாம் அதுவும்
திசையெங்கும் வீசித் திரியும் - இசைவான
தென்றல் கடுங்காற்றுத் தீங்கு தரும்புயல்கள்
என்று பலவாய் எழும். (26)

மழைபொழிய வைத்தல் மணலைக் குவித்தல்
அழலைப் பரப்பி அளவில் - அழிவாக்கல்
என்பவற்றைச் செய்வதுடன் ஏற்ற இனப்பெருக்க
மன்பணியும் செய்யும் வளி. (27)

(அழல் - நெருப்பு. மன்பணி - நிலையான தொண்டு.)

மாறுபடும் வெப்ப நிலையால் வளியமுக்கம்
வேறுட்டுத் தோன்றும் விதிமுறையை - மீறாது



வீசிவரும் காற்று வியனுலகம் எங்கணுமே
ஆசறுக்கும் நன்மை அளித்து. (28)

(ஆசறுக்கும் - ஆசு அறுக்கும் - குற்றங்களை நீக்கும்.)

வித்தகர்கள் வீசிவரும் காற்றினது வேகத்தை
பத்திரமாய்க் கட்டுப் படுத்தியதன் - சத்தியினை
கைத்தொழிற்கும் வேறு கருமங்கள் ஆற்றுதற்கும்
வைத்துப் பயன்படுத்து வார். (29)

(வைத்து - (சத்தியினைச்) சேமித்து.)

காற்றை வயப்படுத்தும் மூச்சுக் கலைதன்னில்
ஆற்றல் படைத்தவருக்(கு) ஆயுள்நன்(கு) - ஏற்றம்
பெறுமென்றும் கட்டிளமை பேசுமென்றும் சித்தர்
அறுதியிட்டுச் சொன்னார் அறி. (30)

ஆற்றல் மனிதர் அபிவிருத்தி என்றாய்ந்து
போற்றிப் புரியும் புரட்சிகளால் - காற்றதனை
மாசு படுத்தி வருகின்றார் வாழ்கின்ற
ஆசை இலையோ அவர்க்கு? (31)

வாயு பகவானை வாழ்த்தி வணங்குபவர்
ஆய புதல்வனார் ஆஞ்சநேயர் - தூய
அருளாலே வேண்டுவன யாவையுமே பெற்றுத்
திருவாளர் ஆவார் சிறந்து. (32)

தொடரும்...

- தமிழ்வேள் விநாயகர் கந்தவனம் -




Train to be a ...
Community Service Worker With CO-OP



Other Diploma Programs:
Computerized Accounting
THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE
Network Engineering
Microsoft | IT Academy Program
Business Administration
Medical Office Assistant
EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome
Customized Corporate Training available for:
MS-Office 2003, 2007, 2010
Upgrade MS-Office 2003 to 2007 or 2010
Microsoft server 2003 and 2008 Subjects
A+ Certification / Cisco CCNA
OACC PROUD MEMBER
You may qualify for
SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179
citi COLLEGE
www.CitiCollege.ca
Call Now: (416) 840-9179
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005
Financial Assistance may be available to those who qualify

# தமிழன் வழிகாட்டி...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

அட்டையை வழங்கி உபசரித்தார்.

இந்நிகழ்வில் உள்ளூராட்சி வேட்பாளர்களாகப் போட்டியிடும் 14 வேட்பாளர்கள் சமூகமளித்திருந்தனர். அவ்வகையில் கீழ்கண்ட வேட்பாளர்களான: அஜக்ஸ் மேயர் பதவிக்கு போட்டியிடும் வரன் வைத்திலிங்கம், மார்க்கம் 7ம் வட்டார வேட்பாளர்களான லோகன் கணபதி மற்றும் சோதி செல்லா, பாலசந்திரன் நிரஞ்சன் (ஸ்காபரோ சென்ரர் 37ம் வட்டாரம்), டேவிட் தோமஸ் (38ம் வட்டாரம்), வேந்தன் ரமணா (ஸ்காபரோ ரூஜ்ரிவர் 42ம் வட்டாரம்), நீதன் ஷான் (ஸ்காபரோ ரூஜ்ரிவர் 42ம் வட்டாரம்) திருமதி சுசி நடராஜா (whitchurch-Stouffville), ஜோசப் ரெமிசியார் (மார்க்கம் 8ம் வட்டாரம்), (கேசியன் ஜோசப் (பிராம்டன் 2-6ம் வட்டாரம்) மற்றும் York Region School Trustee Candidates: ஜீவிதா டெபோரா (ஸ்காபரோ ரூஜ்ரிவர் - 21 வட்டாரம் - City ward 41& 42), ஜுனிதா நாதன் (மார்க்கம் 7-8ம் வட்டாரம்), ருக்ஷன் பரா (மார்க்கம் 4-5 வட்டாரம்), நீதன் சபா (மார்க்கம் 7-8ம் வட்டாரம்) ஆகியோர் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, தங்களது தேர்தல் அறிக்கையைப் பற்றி சுருக்கமாக உரையாற்றினார்கள்.

சிறப்பு விருந்தினராய் கலந்துகொண்ட ரொறன்ரோ மேயர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளரான Olivia Chow (Former NDP President and M.P late Jack Layton's spouse) சிறப்புரை ஆற்றி வேட்பாளர்களுக்கு வாழ்த்துக்கள் கூறியதோடு, எதிர்வரும் தேர்தல் மூலம் கனடிய அரசியல் வரலாற்றில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தி நமது கலாச்சார மரபுகளை பேணிக்காத்து அதன் மூலம் நமது சமூகத்தை அடையாளப்படுத்த வேண்டும் என்பதை தனது உரையில் வலியுறுத்தினார்.



ஊடகத்துறை சார்ந்தவர்கள் வீடியோ புகைப்படக் கலைஞர்கள் மற்றும் அரசியல் ஆர்வலர்கள், விமர்சனர்கள், எழுத்தாளர்கள் என நூற்றுக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மேடை நிகழ்ச்சித் தொகுப்பாளரும், வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளருமான ரமணன் அவர்கள் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தினார். நமது கலாச்சாரப் பண்பாட்டு மரபுகளுக்கேற்ப தமிழ்த்தாய் வாழ்த்து, கனடிய தேசிய கீதம், அமைதி வணக்கம் ஆகியவற்றைத் தொடர்ந்து நிகழ்ச்சி ஏற்பாட்டாளரான செந்தி அனைவரையும் வரவேற்று அன்றைய சிறப்பு கருத்தரங்கத்தைப் பற்றி முன்னுரை ஆற்றினார்.

தொடர்ந்து ஒவ்வொரு வேட்பாளர்களும் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களை முன் வைத்து, தங்களது இலட்சியங்களையும், நோக்கங்களையும் வெளிப்படுத்தி அனைவரும் அவசியம் வாக்களிக்க வேண்டியதின் கடமையை சுட்டிகாட்டி தங்களை வெற்றி

**- புதுவை ராமன் -**

பெறச்செய்ய வேண்டும் என நன்றி பாராட்டி உரையாற்றினார்கள். குறிப்பாக தாங்கள் இத்தேர்தலில் போட்டியிடுவதற்கான காரணங்கள், இதுவரை அவர்கள் போட்டியிடும் தொகுதியில் வெற்றி பெற்றவர்கள் நிறைவேற்றத் தவறிய தேர்தல் வாக்குறுதிகள், மாநகரசபை மக்கள் பணத்தை சிக்கனப்படுத்தி மேற்கொள்ள வேண்டிய அனைவரும் பயன்பெறக்கூடிய பல்வேறு சமூகப்பணிகளை மேற்கொள்ளாததையும், மில்லியன் கணக்கான தொகை அனாவசியமாய் செலவிடப்பட்டுள்ளதையும், போக்குவரத்து வசதி, பொழுதுபோக்கு அம்சங்கள், சுற்றுப்புற சுகாதாரசீர்கேடுகள் பராமரிப்பு, குறிப்பாக பாதுகாப்பு, தமிழர்களுக்கு என ஒரு சமுதாயக்கூடம் இல்லாததையும், வீட்டு வசதி, வரி குறைப்பு ஆகியவற்றிற்கும், மல்வேர்ன் பகுதியில் நிலவும் பாதுகாப்பற்ற அசம்பாவிதங்களான வன்முறைகள், போதைப்பொருட்கள் கட்டுப்பாடுகள் பற்றியும், புதிய தொழில் வளங்களை ஏற்படுத்தி வேலை வாய்ப்பு, மாணவர்களுக்கான கல்வி வசதி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நிறைவேற்றுவோம் என உறுதிபட தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர். மேலும் இது ஒரு ஜனநாயக நாடு. யாரும் தேர்தலில் போட்டியிடுவது என்பதே ஜனநாயக மரபு என்பதால் ஒரே தொகுதியில் இரு தமிழர்கள் போட்டியிடுவது என்பது அவரவருக்கு உள்ள தனித்துவமான அடையாளத்துடன் வெற்றிபெறுவது என்பது தவிர்க்க முடியாததாகும் என்பதையும் சுட்டிக் காட்டினார்கள். அதுபோன்றே அஜக்ஸ் பகுதியிலும் ஒரு புதிய மாற்றத்தையும், தொழில் வளத்தையும் ஏற்படுத்தி Organic Farming, Ajax car Pool, Town festivals, Solar Industries in partnership with Durham College போன்ற அனைவரும் பயன்பெறக் கூடிய திட்டங்களுடன் ஒரு முன்மாதிரியாக விளங்க வைக்க முடியும் என்பதையும் மேயர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர் கூறியதும் வரவேற்கக்கூடியதாக இருந்தது.

அதுபோன்றே கல்விச்சபை உறுப்பினர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஏற்கனவே வெற்றி பெற்ற தங்களது அனுபவங்களையும், எதிர்காலத்தில் கூடுதலாக எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தி இளைய சந்ததியினரின் கல்வி அறிவு மேம்பாட்டிற்கு தங்களது சேவை அமையும் என்பதையும் விளங்கப்படுத்தினார்கள். இதில் சிறப்பு என்னவென்றால் இம்முறைதான் அதிக எண்ணிக்கையில் தமிழ் வேட்பாளர்கள் களம் இறங்கியுள்ளனர். இதற்கும் மேலாக நமது சமூகத்தினரிடையே பலருக்கு தாங்கள் எந்த வட்டாரத்தில் வாழ்கின்றோம், நடைபெற உள்ள தேர்தல் என்ன, வேட்பாளர் எந்த கட்சியை சேர்ந்தவர் என்ற ஐயங்கள் உண்டு. மாநகரசபை மற்றும் நாடாளுமன்ற தேர்தல் பற்றிய விழிப்புணர்வு இல்லாத நிலையையும் சுட்டிக்காட்டி, ஊடகத்துறைதான் இதற்கு உறுதுணையாய் நின்று மக்களிடையே அரசியல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய கடப்பாடையும் சுட்டிக்காட்டினர்.

வருடந்தோறும் நடத்தி வரும் RBC Canadian Immigrants Awards 25 போட்டியில் 2013ம் ஆண்டின் சிறந்த குடிமகனாகத் தெரிவு செய்யப்பட்ட செந்தி அவர்கள், தனக்கு அளிக்கப்பட்ட சன்மானத்தை வன்னித் தமிழ் கலாச்சார மையத்தின் அதிபர் திரு. யோகநாதனிடம் நன்கொடையாக வழங்கி வன்னியில் கல்வி கற்கும் மாணவர்கள் பயன்பெற வைத்த அவரது மனிதநேயமும் அனைவரின் பாராட்டுதல்களைப் பெற வைத்தது.



திரு. ரமணன் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறி, தேர்தலில் வெற்றி பெறுவது அல்லது தோற்பது என்பது சகஜம் என்பதோடு, இன்று வெற்றி பெறுபவர் நாளை தோல்வியடையலாம், அதுபோன்றே தோல்வியடைந்தவர்களும் நாளை வெற்றி பெறலாம். இதுதான் ஜனநாயகத்தின் தார்மீகம் என்பதைச் சுட்டிக்காட்டினார். மேலும் பல வேட்பாளர்கள் தங்களது உரை முடிந்தவுடன் வெளியேறிவிட்டதால், பார்வையாளர்களின் கேள்வி பதிலோ அல்லது கலந்துரையாடலோ இடம் பெறாமல் போனது ஒரு துர்ரதிஷ்டம் என்றுதான் கூற வேண்டும். இதனை பிற வேட்பாளர்களும் தங்களது உரையில் சுட்டிக்காட்டியதோடு, ஒரே தொகுதியில் இரு தமிழ் வேட்பாளர்கள் நிற்பது என்பது தங்களது ஒற்றுமையை குலைப்பதில்லை எனவும், ஒரு சிலர் மற்றொருவருக்காக விட்டுக்கொடுக்க முற்பட்டு, தங்களது விண்ணப்பத்தை வாபஸ் பெற்று, அவருக்கு ஆதரவளிக்க முயன்றும், விண்ணப்பத்தை திரும்பப் பெறும் கால அவகாசம் முடிவடைந்து விட்டதால் ஏதும் செய்ய இயலாமற் போனதையும் ரமணன் அவர்கள் தனது உரையில் கூறியது பாராட்டப்பட்டது.

வாக்குரிமை என்பது அனைவருக்கும் இன்றியமையாதது. எனவே அதனை ஒரு தார்மீகப் பொறுப்பாகவும், கடமையாகவும் கொண்டு அனைவரும் தவறாது எதிர்வரும் தேர்தலில் வாக்களித்து, தமிழரைத் வெற்றி பெறச் செய்து நமக்கு பெருமை சேர்ப்போம்.



# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

'எங்கடை அய்யான்ரை குரல் மாதிரி இருந்தது, சொன்னால் நம்ப மாட்டியள் அம்மான்,' என்றவன் மற்றவர்களையும் பார்த்தான். பூசாரியாரின் கண்கள் ஆர்வத்தால் இன்னமும் பெரியவை ஆகின. இரவின் நித்திரையின்மையால், நன்கு சிவந்து இரு கொள்ளிக் கட்டைகள் போன்று அவை தெரிந்தன.

கந்தசாமி தொடர்ந்தான் 'அங்கை அய்யா நிண்டு கொண்டிருந்தார்'

பூசாரியாரின் ஆர்வம் இன்னமும் அதிகமானது. காசியம்மானுக்கும் பூசாரி யாருக்கும் தெரியும், கந்தசாமியின் தகப்பனாரைத்தான் கந்தசாமி அய்யா என்று கூறுகிறான் என்று. அவர் இறந்து ஐந்து வருடங்கள் ஓடிவிட்டிருந்தன.

கந்தசாமி தொடந்தான்.

'அப்ப நான் அய்யாவைக் கண்டிட்டு. 'அய்யா' எண்டு கூப்பிட,. அவர் 'சத்தம் போடாமல் பிறத்தாலை வா' எண்டு கூப்பிட்டிட்டு முன்னாலை போனார். நானும் ஒண்டும் போசாமல் அவருக்குப் பிறத்தாலை நடந்து போனேன். எங்கை போறோமெண்டு நானும் கேக்கேலை அய்யாவும் சொல்லேலை.

எவ்வளவு நேரம் அவருக்குப் பிறத்தாலை போனேனெண்டு தெரியாது, கொஞ்சத்தாலை திரும்பிப் பாத்துச் சொன்னார் 'உன்னைப் பக்குவமான இடத்துக்கு கொண்டு வந்திட்டேன். உதிலை பிள்ளையாரப்பன்ரை குந்திலை படுத்திட்டு காலமை கோழி கூவினாப் போலை பிள்ளையாரப்பன்ரை கிணத்திலை குளிச்சிட்டுப் போ. உனக்கு ஒண்டும் வராது எண்டார். நானும் பாத்தால், பிள்ளையார் கோயிலடியிலை நிக்கிறேன். அய்யா சொல்லிட்டாரெண்டிட்டு கோயில் பக்கமாய் ஒரு இரண்டடி எடுத்து வைச்சிட்டுத் திரும்பி ஒருக்க அய்யா இன்னொருக்கா பாப்போமெண்டு திரும்பிப் பாத்தால், அங்கை அய்யா இல்லை'

கந்தசாமியின் முகம் ஆச்சரியத்தால் விரிந்திருந்தது.

'நான் சுணங்கேலை. ஓடிப்போய் கிணத்திலை தண்ணியள்ளிக் கை காலை அலம்பிப் போட்டு, கோயில் குந்திலை வந்து படுத்திட்டேன்.' பிறகு காத்தாலை கோழி கூவேக்கை எழும்பி, கிணத்திலை தண்ணி அள்ளி தலையிலை வாத்திட்டு, பிள்ளையார் அப்பனையும் கும்பிட்டுப் போட்டு, அப்பிடியே வீட்டை வந்திட்டேன்.' என்று கூறி முடித்தான் கந்தசாமி.

'எனக்கு உப்பிடி நடந்தாலும் நடக்கும் எண்டு தெரியும். அதாலை, இவையள் சுடலைக்குப் போகேக்கை காவல் பூசை செய்து விட்டனான். அதாலைதான் பொடியன்ரை தேப்பன் வந்து கூட்டியந்திருக்கிறார்' முத்துப் பூசாரியார் கூற,

'உங்கடை தைரியத்திலைதானே நான் கொஞ்சம் அப்பிடி இப்பிடி இருந்தனான். இல்லாட்டி நானும் பொடியனோடை கூடவெல்லோ.....' ஒரு மாதிரி விபரங்களை ஊகித்துக் கொண்ட முனியப்பர் கூறினார்.

இறுதியில் எல்லாம் நல்லபடியாக நடந்தது என்ற திருப்தியோடு அவரவர் இல்லங்களுக்கு போக,

காசியம்மான் மட்டும் கந்தசாமியின் வீட்டில் கந்தசாமியோடு நின்றார்.

சற்று நேரத்தில் முத்தம்மாவும் சிவாவும் செல்லாச்சி மாமியுடன் வந்து சேர்ந்தார்கள். மறுநாள்,

அதிகாலையிலேயே கந்தசாமி கண்விழித்து விட்டான். தலை விண் விண் என வலித்தது. தலைவலிதான் தன்னை எழுப்பியிருக்க வேண்டும் என நினைத்தவன், படுக்கையை விட்டு எழுந்த, பாயிலே இருந்தான். சிவா பக்கத்தில் இல்லை. தாயுடன் ஒண்டிக் கொண்டு உள்ளறையில் படுத்திருந்தான்.

இருள் முற்றாகக் கலையவில்லை. கதிரவன் வரப்போகிறான் என்பதற்கான ஆயத்தங்கள் தடபுடலாக நடந்து கொண்டிருந்தன. சேவல்களும், ஒருசில குருவிகளும் தத்தமது தொழில்களைச் செய்து கொண்டிருந்தன. எங்கேயோ ஒன்றிரண்டு காகங்களும் கரைவது கந்தசாமிக்குக் கேட்டது.

கண்களுக்கும் காதுகளுக்கும் இடையில், சற்று மேலாக நெற்றியிற்கு நேராக, முகத்தின் இருபக்கமும் விரல்களால் மெதுவாக அழுத்திக் கொண்டான். வலிக்குச் சற்று இதமாக இருந்தது.

நேற்றுப் பகல் முழுவதும் இயல்பாகத்தான் இருந்தான். இரவும் நல்ல நித்திரை வந்தது. ஏன் இப்ப இப்படி தலையிடிக்குது' தன்குள் கேட்டவன், ஒரு தேத்தண்ணி குடிச்சால் சரி வரும் என நினைத்து முத்தம்மாவை நித்தி ரையால் எழுப்பலாமோ என நினைத்தான்.

'இன்னும் பொழுது புலரேல்லை. கொஞ்ச நேரம் கிடந்திட்டு எழும்பு தம்பி.' குரல் கேட்டு திரும்பிப் பார்த்தான் கந்தசாமி. காசியம்மான் சற்றுத் தள்ளிப் படுத்திருந்து கொண்டு கூறினார்.

◊ கனி ◊

காசியம்மான் கந்தசாமிக்குத் துணையாக அன்று படுக்க வந்திருந்தார்.

'அம்மான், கன்னப் பக்கத்திலை நல்ல கபாலக் குத்தாய்க் கிடக்குது. அதுதான் ஒரு சுடுதண்ணி குடிக்கலாம் எண்டு நினைக்கிறேன்.'

'நீ வெள்ளனவே கிடந்திட்டாய். பெட்டை படுக்கப் போகேக்கை சாமம் கடந்திருக்கும். நல்லாய் அயந்திருப்பாள். கொஞ்ச நேரம் சமாளிச்சாயெண்டால்......, அப்பிடி ஏதேனும் அந்தரமெண்டால், வா மாமியை எழுப்பிச் சுடுதண்ணி வைப்பிப்போம்' காசியம்மான் கூறியது கந்தசாமிக்கு சம்மதமாக இருக்க வில்லை. ஆனாலும் முத்தம்மாவை நினைத்தவன், ஏன் அவளை நித்திரையால் எழுப்ப வேண்டும் என மனதுக்குள் நினைத்தவன், 'இல்லை அம்மான் கொஞ்சம் சமாளிச்சால் விடிஞ்சிடும் பேந்து பாப்போம்'

தொடர்ச்சி 28ஆம் பக்கம்

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்
Education Is A Life Long Journey

DIPLOMA PROGRAMS
Accounting & Payroll Admin.
35 Weeks
Business Administration
26 Weeks
Computerized Accounting
26 Weeks
Medical Office Admin.(MOA)
32 Weeks
Personal Support Worker(PSW)
26 Weeks (NACC Diploma)
FREE TRAINING
யார் தகுதி உடையவர்கள்?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றை இலவசமாகக் கற்கலாம்
Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000
அனைத்தும் இலவசம்
PART TIME COURSES
Enrol for one course and get another one for FREE
Windows, Word, Excel, Power Point, Access, Quick Books, Simply Accounting & Accpac
• 100% Instructor Led Training • Small Class Sizes
• Student Friendly Environment • Ample Free Parking
• Professional & Experienced Staff • TTC Accessible
• Career Planning & Counselling
416-291-5155 / 416-451-6680
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
[Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005]

# BASEMENT RENT

**NEILSON & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.856.3542**

**MARKHAM & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**647.779.6652 / 905.201.8153**

**WARDEN & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Internet free. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.433.1116**

**TAPSCOTT & MCLEVIN**
1 Bedroom bsmt fro rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.319.1148**

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school, bank. Avail. immediately
தொடர்புகளுக்கு: **416.523.1312**

**ALTONA & FINCH**
Brand new luxury 2 bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to mall, school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: **416.278.3993**

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.219.4491**

**NEILSON & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to TTC, school, mall. Avail. immediately. All inclusive. Rent $750.
தொடர்புகளுக்கு: **416.786.2463**

**BRIMLEY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, Scarborough Town Center. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.657.3639**

**WARDEN & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: **416.505.4449**

**WARDEN & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
**416.519.0505 / 416.886.8732**

**DONMILLS & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Very strictly No smoking, No drink & No pets. Rent $550.
தொடர்புகளுக்கு: **647.855.2148**

**MARKHAM & DENISON**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.829.3212 / 416.879.9603**

**MCCOWAN & 14TH AVE. MARKHAM & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.662.1193**

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. வயதானவர்கள் விரும்பத்தக்கது. Hospital வசதி, சாப்பாடு செய்து கொடுக்கப்படும். Avail. October 01, 2014.
**416.332.0623 / 647.618.0623**

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, Supermarket. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.763.9120**

**MCCOWAN & STEELES**
| 75.தாய்லாந்து | Thailand 10,000 (மொத்த மக்கள் தொகை 67,764,000) |
| 76.தான்சானியா | Tanazania 250 (மொத்த மக்கள் தொகை 43,739,000) |
| 77.துர்க்மெனிஸ்தான் | Turkmenistan 50 (மொத்த மக்கள் தொகை 5,110,000) |
| 78.துருக்கி | Turkey 500 (மொத்த மக்கள் தொகை 74,816,000) |
| 79.துனீசியா | Tunisia 100 (மொத்த மக்கள் தொகை 10,272,000) |
| 80.தென் ஆபிரிக்கா | South Africa 750,000 (மொத்த மக்கள் தொகை 50,110,000) |
| 81.தைவான் | Taiwan 100 (மொத்த மக்கள் தொகை 25,300,000) |
| 82.நமீபியா | Namibia 25 (மொத்த மக்கள் தொகை 2,171,000) |
| 83.நவுறு | Nauru 100 (மொத்த மக்கள் தொகை 10,000) |
| 84.நியுசிலாந்து | New Zealand 30,000 (மொத்த மக்கள் தொகை 4,266,000) |
| 85.நெதர்லாந்து | Netherlands 12,000 (மொத்த மக்கள் தொகை 16,592,000) |
| 86.நேபாளம் | Nepal 500 (மொத்த மக்கள் தொகை 29,331,000) |
| 87.நைஜர் | Niger 25 (மொத்த மக்கள் தொகை 15,290,000) |
| 88.நைஜீரியா | Nigeria 2,500 (மொத்த மக்கள் தொகை 154,729,000) |
| 89.நோர்வே | Norway 15,000 (மொத்த மக்கள் தொகை 4,812,000) |
| 90.பராகுவே | Paraguay 25 (மொத்த மக்கள் தொகை 6,349,000) |
| 91.பல்கேரியா | Bulgaria 200 (மொத்த மக்கள் தொகை 7,545,000) |
| 92.பனாமா | Panama 500 (மொத்த மக்கள் தொகை 3,454,000) |
| 93.பஹ்ரெயின் | Bahrain 7,000 (மொத்த மக்கள் தொகை 791,000) |
| 94.பஹாமாஸ் | Bahamas 200 (மொத்த மக்கள் தொகை 342,000) |
| 95.பாகிஸ்தான் | Pakistan 1,000 (மொத்த மக்கள் தொகை 180,808,000) |
| 96.பாபுவா-நியுகினீயா | Papua-New Guinea 500 (மொத்த மக்கள் தொகை 6,732,000) |
| 97.பார்படாஸ் | Barbados 1,000 (மொத்த மக்கள் தொகை 256,000) |
| 98.பாலஸ்தீனம் | Palestine 200 (மொத்த மக்கள் தொகை 3,336,000) |
| 99.பிரான்ஸ் | France 50,000 (மொத்த மக்கள் தொகை 62,343,000) |
| 100.பிரிட்டன் | United Kingdom 300,000 (மொத்த மக்கள் தொகை 61,565,000) |
| 101.பிரெஞ்சு கயானா | French Guyana 1,000 (மொத்த மக்கள் தொகை 170,000) |
| 102.பிரேசில் | Brazil 100 (மொத்த மக்கள் தொகை 193,734,000) |
| 103.பிலிப்பைன்ஸ | Philippines 200 (மொத்த மக்கள் தொகை 91,983,000) |
| 104.பின்லாந்து | Finland 3,000 (மொத்த மக்கள் தொகை 5,326,000) |
| 105.பிஜி | Fiji 125,000 (மொத்த மக்கள் தொகை 849,000) |
| 106.புர்கினோ பாசோ | Burkina Faso 100 (மொத்த மக்கள் தொகை 15,757,000) |
| 107.புறுணை | Brunei 1,500 (மொத்த மக்கள் தொகை 400,000) |
| 108.பூடான் | Bhutan 100 (மொத்த மக்கள் தொகை 697,000) |
| 109.பெர்முடா | Bermuda 100 (மொத்த மக்கள் தொகை 63,000) |
| 110.பெரு | Peru 100 (மொத்த மக்கள் தொகை 29,165,000) |
| 111.பெல்ஜியம் | Belgium 12,000 (மொத்த மக்கள் தொகை 10,647,000) |
| 112.பொலிவியா | Bolivia 1,000 (மொத்த மக்கள் தொகை 9,863,000) |
| 113.பொற்சுவானா | Botswana 1,000 (மொத்த மக்கள் தொகை 1,950,000) |
| 114.போர்த்துக்கல் | Portugal 500 (மொத்த மக்கள் தொகை 10,707,000) |
| 115.போலாந்து | Poland 500 (மொத்த மக்கள் தொகை 38,074,000) |
| 116.மசிடோனியா | Macedonia 100 (மொத்த மக்கள் தொகை 2,042,000) |
| 117.மலாவி | Malawi 500 (மொத்த மக்கள் தொகை 15,263,000) |
| 118.மலேசியா | Malaysia 2,250,000 (மொத்த மக்கள் தொகை 27,468,000) |
| 119.மால்ரா | Malta 100 (மொத்த மக்கள் தொகை 409,000) |
| 120.மாலி | Mali 250 (மொத்த மக்கள் தொகை 13,010,000) |
| 121.மாலை தீவு | Maldives 2,000 (மொத்த மக்கள் தொகை 309,000) |
| 122.மியான்மா | Myanmar 600,000 (மொத்த மக்கள் தொகை 50,020,000) |
| 123.மெக்சிகோ | Mexico 3,000 (மொத்த மக்கள் தொகை 109,610,000) |
| 124.மொல்டோவியா | Moldovia 25 (மொத்த மக்கள் தொகை 3,604,000) |
| 125.மொறிசியசு | Mauritius 126,000 (மொத்த மக்கள் தொகை 1,288,000) |
| 126.மொறித்தானியா | Mauritania 100 (மொத்த மக்கள் தொகை 3,291,000) |
| 127.மொறொக்கோ | Morocco 100 (மொத்த மக்கள் தொகை 31,993,000) |
| 128.மொனாகோ | Monaco 50 (மொத்த மக்கள் தொகை 33,000 ) |
| 129.யப்பான் | Japan 200 (மொத்த மக்கள் தொகை 127,156,000) |
| 130.யேமன் | Yemen 500 (மொத்த மக்கள் தொகை 23,580,000) |
| 131.ரஷ்யா | Russia 5,000 (மொத்த மக்கள் தொகை 140,874,000) |
| 132.ரினிடாட்-ரொபாகோ | Trinidad and Tobago 100,000 (மொத்த மக்கள் தொகை1,339,000) |
| 133.லக்செம்போர்க் | Luxembourg 1,000 (மொத்த மக்கள் தொகை 486,000) |
| 134.லற்வியா | Latvia 500 (மொத்த மக்கள் தொகை 2,249,000) |
| 135.லாவோஸ் | Lao 1,000 (மொத்த மக்கள் தொகை 6,320,000) |
| 136.லிதுவானியா | Lithuania 100 (மொத்த மக்கள் தொகை 3,287,000) |
| 137.லிபியா | Libya 500 (மொத்த மக்கள் தொகை 6,420,000) |
| 138.லெசொத்தோ | Lesotho 500 (மொத்த மக்கள் தொகை 2,067,000) |
| 139.லெபனன் | Lebanon 5,000 (மொத்த மக்கள் தொகை 4,224,000) |
| 140.லைபீரியா | Liberia 500 (மொத்த மக்கள் தொகை 3,955,000) |
| 141.வங்காள தேசம் | Bangladesh 1,000 (மொத்த மக்கள் தொகை 162,221,000) |
| 142.வத்திக்கான்-நகர் | Vatican City 20 (மொத்த மக்கள் தொகை 1,000) தொடர்ச்சி 33ஆம் பக்கம் |

# சைவம்

அண்மையில் வெளிவந்த படம் சைவம். படத்தின் தலைப்பில் காண்பது போல் இப்படத்தில் முக்கிய சம்பவம் ஒரு குடும்பம் சைவமாக மாறுவது ஆகும்.

தந்தை, தாய், மகள், தாத்தா, பாட்டி, வேலையாட்கள் என ஊரில் ஒரு கூட்டுக்குடும்பம் வாழ்கிறது. அவர்கள் மிக சந்தோசமாக இருக்கிறார்கள். மிருகங்களும் வளர்கிறார் கள். திருவிழாவிற்கு வெளியூரிலிருந்தும், வெளிநாட்டி லிருந்தும் சொந்தங்கள் வருகிறார்கள். கிராமத்து வாழ்க்கை மறந்து போன பலர் அதற்குள் இருக்கிறார்கள். இக்குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வேலைப் பிரச்சினை, குழந்தை இல்லை என பிரச்சினைகள் உண்டு. இவர்களுக்கு பொதுவாக தீய சம்பவங்கள் நடக்கின்றன.

இப்பிரச்சினைகளுக்கு என்ன காரணம் என்று யோசிக்கிறார்கள். கடைசியில் இது கடவுளுக்கு பலியிட வைத்திருந்த கோழியை இன்னும் பலி கொடுக்காமல் இருப்பதுதான் இதன் காரணம் என தீர்மானிக்கிறார்கள்.

திருவிழா நெருங்குகின்ற காலம் கோழியும் திடீரென காண-ாமல் போகிறது. அதைத்தேட குடும்பத்தினர் தொடங்குகிறார்கள். அது ஓடி போய்விட்டதா, யாரோ திருடி சமைத்து விட்டார்களோ தெரியவில்லை. கோழி எங்கே போய்விட்டது, அதைக்கண்டுபிடித்தார்களா என படத்தை பார்த்து அறியலாம். இனி இப்படத்தின் கருத்தைப் பார்ப்போம்.

முதல் கூறிய மாதிரி இப்படத்தில் சைவமாக மாறுதல் ஒரு முக்கிய கருத்தாகும். சிறுமியான தமிழ் தான் செல்லமாக



வளர்த்த சேவலை பலி கொடுக்கப்போகிறார்கள் என கேட்டவுடன் பயப்படுகிறாள். வளர்த்த மிருகத்தை எவ்வாறு பலி கொடுக்கலாம் என்று அவருக்கு விளங்கவில்லை. பலி கொடுத்திருந்தாலும் அவர்களுக்கு பயன் கிடைத்திருக்குமா? அவர்கள் அல்லது தாங்களாகவே பலி கொடுத்தால் பிரச்சினை போய்விடும் என நினைத்தார்களா? அவர்கள் சேவலை பலி கொடுக்காமல் அவர்களது பிரச்சினைக்கு தீர்வு வருகிறது. இது நடப்பதால் நாங்கள் மிருக பலி தேவை இல்லாத விடயம் என கூறலாம்.

எவ்வாறு இந்த மாற்றம் வருகிறது? பலி கொடுக்காமல் அவர்களது பிரச்சினைகள் நீங்குகின்றன. அவர்களது பிரச்சினைகளை தீர்க்க தங்கள் முயற்சியும், நினைப்பும் தான் தேவை என தெரிகிறது. குடும்பமாக சைவத்திற்கு மாறுவதால் உயிர்க்கொலை தவிர்க்கப்படுகிறது. ஆகையால் இப்படம் மிருகபலி தேவையில்லை என உணர்த்துகிறது.

இப்படத்தில் தமிழ் பாடும் 'அழகே அழகே எதுவும் அழகே' என்ற பாடல் மிக நல்ல கருத்துக்களை கூறுகிறது. அத்துடன் அவவின் (உத்தரா) குரலும் மிக இனிமையாக உள்ளது. உதாரணமாக "கவலை யாவும் மறந்தால் இந்த வாழ்க்கை முழுவதும் அழகு" என அறிவுரை வழங்குகிறது.



**ஞா. ஆரணி**
அகவை 16

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# இஸ்லாமியர்கள்...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

விரும்பவில்லை. அவரிடம் சென்று பேசினோம். அப்போது அவர் படங்கள் ஒப்புக்கொள்வதை குறைத்திருந்தார். ஆனால், 'நீங்கள் எனக்கு கதைசொன்ன விதத்திலேயே நான் மிகவும் கவரப்பட்டுவிட்டேன். தரமான ஒளிப்பதிவுக்கான எல்லா சாத்தியங்களும் நிறைந்த படமாக இப்படம் இருக்குமென்று நான் நம்புகிறேன். நிச்சயம் இணைந்து செய்வோம்' என்றார். இணைந்து பணியாற்றும்போது அவரும் நானும் ஈருடல் ஓருயிர் போலாகிவிட்டோம். அவர் நம்பிக்கை வீண் போகவில்லை. அவருக்கு இப்படம் விருது பெற்றுத் தந்துவிட்டது.

பின்னணி இசையமைப்பாளர் ஐசக் தாமஸ் பற்றி?

ஒரு படத்தில் இயக்குநர்தான் தெரியவேண்டும் இசையமைப்பாளரோ அல்லது வேறு ஒரு தொழில்நுட்பக் கலைஞரோ துருத்திக்கொண்டு தெரியக்கூடாது என்று சொல்வார்கள். ஆனால், அதற்காக மற்ற கலைஞர்கள் பணிகளில் மூக்கை நுழைக்க நான் விரும்பவில்லை. அப்படித்தான் இந்தப் படத்தை உருவாக்கினேன். மது அம்பாட் போலவே ஐசக் மேலும் எனக்கு நம்பிக்கை இருந்தது. அவருக்கு நான் முழு சுதந்திரம் கொடுத்திருந்தேன். எங்கே இசை தேவை, எங்கே வேண்டாம் என அவரே முடிவு செய்யட்டும் என விட்டுவிட்டேன். அந்த சுதந்திரம் படத்துக்கு வலு சேர்த்தது. ஐசக் தாமஸை தமிழ் ரசிகர்களுக்கு நன்கு தெரியும், பாலுமகேந்திரா'வின் 'கதை நேரம்' என்ற பல பிரபல எழுத்தாளர்களின் கதைகள் கொண்ட தொலைக்காட்சித் தொடருக்கான பின்னணி இசையை அளித்தவர் இவர்தான்.

திரைப்படத் துறை மீதான உங்கள் ஆர்வம் எங்கே தொடங்கியது?

எனது கலைத்துறை பயணம் எனது சொந்த ஊரில், எனது சிறு வயதிலிருந்தே தொடங்குகிறது. எனக்கு கேரள மாநிலம் கண்ணூர் மாவட்டம் மாத்தனூர்தான் சொந்த ஊர். பள்ளிப்படிப்பு அங்கேயே முடித்தேன். பிறகு கல்லூரியில் பி.காம். படித்தேன். சிறுவயதிலிருந்தே நாடகங்கள் போடுவது, மிமிக்ரி செய்வது என்று கலைத்துறை ஈடுபாடுகள் எனக்கு இருந்தன. இந்த



ஈடுபாடுகள் காரணமாக கல்லூரி படிப்பு முடித்ததும் திருச்சூர் நாடகப் பள்ளியில் 'மாஸ்டர் ஆ.'.ப் தியேட்டர் ஆர்ட்ஸ்' சேர்ந்து பட்டம் பெற்றேன். ஆயிரம் மேடைகள் ஏறியிருப்பேன். மலையாளத்தில் முன்னணி தொலைக்காட்சிகளில் ஒன்றான 'சூர்யா' தொலைக்காட்சி சேனலில் சிறிது காலம் பணியாற்றியுள்ளேன்.

உங்கள் இரண்டாவது படம் மம்முட்டி நடித்த 'குஞ்சனந்திண்டே கடா', ஆகஸ்ட் 2013இல் வெளியானது. மூன்றாவது படம்?

தற்போது அதற்கான திட்டமிடுதலில்தான் ஈடுபட்டிருக்கிறேன். படம் பெயர்: 'பத்தே மாரி'. துபாய் சென்று வாழும் கேரளாக்காரர்களின் பாடுகள் இங்கு பதிவு செய்யப்படாதது. 1967இல் முதன்முதலில் கேரளாவிலிருந்து துபாய்க்கு படகு மூலம் ஒருவர் சென்றார். அன்று தொடங்கிய அப்பயணம் பிறகு கேரளத்தின் மொத்தப் பண்பாடு ஆனது. இன்று துபாயிலிருந்து வரும் பணம்தான் ஏராளமான கேரளாக்காரர்களை வாழவைக்கிறது. கேரளத்தினரின் துபாய் வாழ்க்கையை மையமாகக் கொண்டுதான் 'பத்தே மாரி' படத்தின் கதை அமையும். இந்தப் படத்திலும் மது அம்பாட்தான் ஒளிப்பதிவாளர். மது அம்பாட்டும் நானும் 1967இல் முதன்முதலில் கேரளாவிலிருந்து துபாய்க்கு படகு மூலம் சென்றவரை சந்தித்துப் பேசினோம். அது வித்தியாசமான அனுபவம். அடுத்த ஆண்டு 'பத்தே மாரி' வெளியாகும்.

| | |
|---|---|
| 143.வியற்னாம் | Viet Nam 3,000 (மொத்த மக்கள் தொகை 88,069,000) |
| 144.ஜமைக்கா | Jamaica 30,000 (மொத்த மக்கள் தொகை 2,719,000) |
| 145.ஜிபுற்றி | Djibouti 1,000 (மொத்த மக்கள் தொகை 864,000) |
| 146.ஜெர்மனி | Germany 40,000 (மொத்த மக்கள் தொகை 82,167,000) |
| 147.ஜோர்டான் | Jordan 4,000 (மொத்த மக்கள் தொகை 6,316,000) |
| 148.ஜோர்ஜியா | Georgia 25 (மொத்த மக்கள் தொகை 4,260,000) |
| 149.ஸ்பெயின் | Spain 500 (மொத்த மக்கள் தொகை 44,940,000) |

நன்றி
தகவல் : பிபிசி தமிழோசை

# Education

## Answer Key : 14-16

### ➢ ADVANCED FUNCTIONS

(i) leading coefficient =1

(ii) $f(x) = a(x-1)(x-2)(x-3)^2$

### ➢ CALCULUS 12

(i) Differentiate, $\cos^2\frac{1}{x}$

ans: $\frac{2}{x^2}\cos\left(\frac{1}{x}\right)\sin\left(\frac{1}{x}\right)$

(ii) Find the limits, $\lim_{x\to 0}\frac{\sin 2x + 3x}{2x + \sin 3x}$ ans :1

### ➢ PHYSICS 11

For the $2^{nd}$ one, $v_1$ =0, $v_2$ = 12.0m/s, a= 9.8m/$s^2$

$t = \frac{12-19.6}{9.8} = 2\,s$

First ball , t = 4s

Therefore distance fall $\Delta d = v_1t + ½ at^2$

$\Delta d_1 = 0 + ½ \times 9.8 \times 4^2 = 78.4m$

Second ball , t = 2s

Therefore distance fall

$\Delta d = v_1t + ½ at^2$

$\Delta d_2 = 0 + ½ \times 9.8 \times 2^2 = 19.6m$

(ans=78.4m -19.6m = 58.8m)

### ➢ Organic CHEMISTRY 12

Boiling points:

2,4-dimethyl pentane< n- heptane <2- hexanone <1- hexanol

Molecular size :

2,4-dimethyl pentane < n- heptane

Greater London dispersion force in n-heptane .

2- hexanone is having dipole –dipole attraction in addition to London dispersion forces.

1- hexanol is having hydrogen bond due to the presence of hydroxyl group.

### ➢ PHYSICS 11

Calculate the displacements

(i) 2000 km( N 20° E)

(ii) (ii) 48000 km (N 40° E)

Find x and y components of each displacements and add.

dx = 2000 cos 70 + 4800 cos 50= 3769.4km

dy = 2000 sin 70 + 400 sin 50== 5556.4km

Use pythagorean theorem, dr = 6714km (N 34°E). $V_{ave}$=789.9 km/h (N 34°E).

### ➢ CHEMISTRY 11

A. $Ca^{2+}$ 0.025, $Al^{3+}$ 0.015; $NO_3^-$ 0.095

B. most likely geometry

(i) $NO_3^-$ (ii) $NO_2^-$ (iii) $SO_4^{2-}$ (iv) $CO_3^{2-}$ (v) $I_3^-$ (vi) $CH_3^+$

(i) trigonal (ii) bent (iii) tetrahedral(iv) trigonal

(v) linear (vi) trigonal

## Review Questions14 -17

### ➢ BIOLOGY 12 & IB

(i) Identify and name the following




(iii) What is protein denaturation? Discuss the conditions that promotes protein denaturation

### ➢ ADVANCED FUNCTIONS 12

(i) Determine an equation of a $4^{th}$ degree polynomial function with zeros 1,2 of order 1 and 3 of order 2 passing through (4, 20).

(ii) Determine the solution set for the inequality $x^4 + 9 \leq 6x^2$

Ans. key 14-17 - next issue
☎ 647 341 3975
K.A.Srikrishnaraj B.Sc, MSc. PhD
ask@keentutoringcentre.com

# திரை விமர்சனம் - ஆதாமின் மகன் அபு

பத்துக்கும் மேற்பட்ட சர்வதேச திரைப்பட விருதுகளுடன் வெகுஜன ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று வெற்றிகரமாக வும் ஓடிய 'ஆதாமிண்டே மகன் அபு' மலையாளத் திரைப்படத்தின் தமிழ்ப் பதிப்பு இது. பள்ளிவாசலின் தொழுகை ஒலியுடன் தொடங்குகிறது படம். வட கேரளத்தில் பசுமையும் குளிர்ச்சியும் நிறைந்த ஒரு கிராமத்தில் வசிக்கிறார்கள் வயதான தம்பதி களான அபுவும் ஆயிஷாவும். இவர்களுக்கு ஒரு மகன் உண்டு. துபாயில் தன் சம்பாத்யம், தன் குடும்பம் என்று இவர்களை மறந்து வாழ்கிறான் அவன். மகனை நினைத்து அடிக்கடி ஆயிஷா அழுகிறாள். மகன் உதவி இல்லாததால் பொருளாதாரத் தேவைகளுக்காக அத்தர் விற்கிறார் அபு. இதற்காக அவர் வெளியே புறப்பட்டுவிட்ட பிறகு வீட்டில் இருக்கும் ஆயிஷாவுக்கு ஒரே பொழுதுபோக்கு அவர்கள் வீட்டில் வளரும் பசுவும் பலா மரமும் என்றால் அத்தர் விற்க வெளியே அலைந்துகொண்டிருக்கும் அபுவின் ஒரே கனவு, லட்சியம் மனைவியோடு ஹஜ் யாத்திரை போகவேண்டும் என்பதுதான். கணவன் கனவுக்காக தன் பிரியங்களான பசுவையும் பலா மரத்தையும் தியாகம் செய்ய முன்வருகிறார் ஆயிஷா. ஆனால், அதற்கு முன்பு அதனைத் தவிர்ப்பதற்காக கணவனும் மனைவியும் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு டிரங்கு பெட்டியில் பணம் சேர்க்கிறார்கள். பெரும்பாலும் கடுஞ்சாயாவும்



ரொட்டியுமே அபுவின் உணவாகிப் போகிறது. பலமுறை தாகத்திற்கு சோடா குடிக்க யோசித்து பின் கிணற்றுத் தண்ணீரை பருகுகிறார். அந்த கிராமத்தின் ஹாஜியார் அடிக்கடி மெக்கா, மதினா போய் வந்தவர். அவரிடம் மக்கா செல்வதற்கான வழிமுறைகளை கேட்கிறார், அபு. ஹாஜியார் மகனும் துபாயில்தான் இருக்கிறான். தன்னை மூன்று முறை மக்காவுக்கு மகன்தான் கூட்டி சென்றான் என்று சொல்லும் ஹாஜியார், மகன் அவருக்கு புதிதாக கார் வாங்கிக் கொடுத்திருக்கிறான் என மகனைப் பற்றி பெருமையாக பேசுகிறார். உதட்டில் புன்னகையோடும் கண்களில் கலக்கத்தோடும் எல்லாவற்றையும் கேட்கிறார் அபு. கடைசி யில் அபுவிடம் கோழிக்கோட்டில் இருக்கும் மக்கா, மதினா டிராவல் ஏஜென்சி அஷ்ர.்.பை தான் அனுப்பியதாக பார்க்கச் சொல்கிறார், ஹாஜியார். அங்கு சென்ற பிறகுதான் ஹஜ் பயணம் செல்ல பாஸ்போர்ட் என்ற ஒன்றை வாங்க வேண்டும் என்பது அபுவுக்குத் தெரிகிறது. பாஸ்போர்ட் எடுப்பதற்கான வழிமுறைகளை சொல்கிறான் அஷ்ர.்.ப். அதன்படி தனக்கும் மனைவிக்கும் பாஸ்போர்டுக்கு விண்ணப்பிக்கிறார் அபு.

ஒரு நாள் அபு வீட்டில் இல்லாத சமயத்தில் அவரைத் தேடி காவல்துறையினர் வருகிறார்கள். என்ன ஏது என்று தெரியாமல் ஆயிசா அழுகிறாள். அபு, தான் எந்த தவறும் செய்யவில்லையே என்று பதறி, அல்லாவை பிரார்த்திக்கிறார். மறுநாள் காலையில் கிராமத்தில் அதிகம் படித்தவரான கோவிந்தன் வாத்தியாரை துணைக்கு அழைத்துக்கொண்டு காவல் நிலையம் செல்கிறார். அங்கு காவலர்கள் அபுவைக் கேள்விகளால் துளைத்து எடுக்கிறார்கள். ஏன் இவ்வளவு கேட்கிறார்கள் என்று தெரியா மல் கோவிந்தன் வாத்தியாரும் பதறுகிறார். கடைசியில் பாஸ்போர்டுக்காகத்தான் இவ்வளவு விசாரணையும் என்று காவலர் சொன்ன பிறகுதான் இருவரும் இயல்புக்கு திரும்புகிறார்கள்.

சிறுக சிறுக சேர்த்த பன்னிரண்டு வருட சேமிப்பு பணத்தைக் கொடுத்தும் ஹஜ் பயணத்துக்கு அதிகமாக ஒரு லட்சம் ரூபாய்

**- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -**

தேவைப்படுகிறது. மீதமுள்ள பணத்திற்கு தன் மூன்று பவுன் நகையையும், தான் வளர்க்கும் பசு, கன்றையும், வீட்டின் முன் நிற்கும் பலா மரத்தையும் விற்கச் சொல்கிறார் ஆயிஷா. மரக்கடை ஜான்சன் பலாமரத்தை விலைபேசி பத்தாயிரம் ரூபாய் முன்பணமாகக் கொடுக்கிறார். மீதி ஐம்பதாயிரம் ரூபாயை பயணத்திற்கு

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

# ஒன்ராயோவில்...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

யமான, பாதுகாப்பான வியாபரத்தளத்தை ஊர்ஜிதம் செய்வதற்கு மாகாண அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இவை பற்றி அறிவதற்கு: 1.888.665.0662 - மின்னஞ்சல்:informcs@ontario.ca www. ontario.ca / consumerprotection

## கனடா வங்கி

இது ஒரு வர்த்தக வங்கி அல்ல. இது வாடிக்கையாளருக்கு வங்கிச் சேவைகள் வழங்குவதில்லை. ஆனால் கள்ள நோட்டடித்தல், அடையாள அட்டை மோசடிகள், வங்கி அட்டை மோசடிகள் ஆகியன பற்றி பல்வேறு கற்பித்தல் சேவைகளையும் வெளியீடுகளையும் நடத்தி அவற்றை முறியடிப்பதற்கான செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. இவை பற்றி அறிய : 1.888.513.8212 மின்னஞ்சல்: education@bankofcanada.ca

## நுகர்வோர் பாதுகாப்பு

இது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள் பற்றி மக்களுக்கு விளக்குவதுடன் தேவையான தகவலைப் பெறுவதற்கும், நுகர்வோருக்கும் வியாபார நிலையங்களுக்கும் இடையேயுள்ள பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கும் உதவிகின்றது. மரணச்சடங்கு, கார் பழுதுபார்க்கும் நிலையங்கள், உடற்பயிற்சி நிலையங்கள், வீடு பழுதுபார்க்கும் நிறுவனங்கள், நிதி அறவிடும் முகவர்கள் ஆகிய இடங்களுக்குப் பரிசோதகர்கள் சென்று நுகர்வோர் சட்ட திட்டங்களுக்கு அமைய இயக்குகின்றனவா எனப்பார்த்துக் கொள்வர். ஏதாவது சேவைகளில் அல்லது வாங்கல் விற்றல் பிணக்குகள் இருந்தால் அது பற்றிய விபரங்களுக்கு: www.sse.gov.on.ca/mcs/en/pages/consumer-protection-toolbox.aspx

## மிக முக்கிய தகவல்

உங்கள் சமூகக் காப்புறுதி எண்ணும் அட்டையும் (SIN) பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கான வழிகள் வருமாறு :

1. சட்டப்படி தேவைப்படால் மட்டுமே உங்கள் சமூகக் காப்புறுதி எண்ணைக் கொடுக்க வேண்டும்.
2. உங்கள் பெயரில் குடியுரிமை நிலையில், காப்புறுதி அட்டையில் தகவல்கள் பிழையாக அல்லது விடுபட்டிருந்தால், குடும்ப உறுப்பினர்கள் மரணித்தால் உடனே சேவிஸ் கனடாவுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
3. உங்கள் அட்டை தொலைந்திருந்தால் அல்லது யாராவது துஸ்பிரயோகஞ் செய்கிறார்கள் எனச் சந்தேகித்தால் உடனே சேவிஸ் கனடாவுக்குத் தெரியப்படுத்துங்கள்.

பின்வரும் முக்கிய குறிப்புகளைக் கவனிக்க

1. சின் (SIN) அட்டையை உங்களோடு கொண்டு செல்லாதீர்கள். வீட்டில் பாதுகாப்பான இடத்தில் அல்லது வங்கிப் பாதுகாப்புப் பெட்டியில் வையுங்கள்.
2. அடையாள தேவைக்கு சின் அட்டையைப் பாவிக்க வேண்டாம். இதனால் உங்கள் தனிப்பட்ட தகவல்கள் வெளிவரக் கூடும்.



3. தொலைபேசியில் சின் எண்ணைக் கொடுக்க வேண்டாம். நீங்கள் யாருடன் பேசுகிறீர்கள் என்பதை நன்கறிந்த பின்னர் கொடுக்கலாம்.
4. மின்னஞ்சலில் சின் எண்ணைக் கோரும் எத்தகவலுக்கும் பதில் அனுப்ப வேண்டாம்.

## மோசடிகளும் ஏமாற்றுகளும்

Phone Busters Senior Busters - என்ற இரு திட்டங்கள் கனடா மோசடிக்கெதிரான நிலையத்தால் நடத்தப்படுகின்றன. இவை பற்றிய விபரங்களுக்கு: 1.888.495.8501 www.phonebusters.com

## ரொறொன்ரோ குற்றத்தடுப்புச் சங்கம்

இது குற்றங்களைத் தடுத்தல் வாழிடப் பாதுகாப்பு, வீட்டுப் பாதுகாப்பு, வாகனக் களவு, மோசடி, ஏமாற்றுதல் போன்ற தீய செயல்களைத் தடுப்பதற்கான வழிவகைகள், ஆலோசனைகள் வழங்கும் ஒரு சமூகச் சங்கமாகும். இதுபற்றி அறிய: 416.225.1102 www.cpatoronto.org

## அவசர சுகாதார சேவைகள்

முதியோரைத் துன்புறுத்தல், நெருக்கடி நிலைகளில் உதவி, குற்றத் தடுப்பு, நகர்காவலர் சேவைகள், தீயணைப்பு, பாதுகாப்புச் சேவைகள், பொது சுகாதார உடல் நல சேவைகள் போன்ற பல சேவைகள் மாகாண அரசாலும், மத்திய அரசாலும் வழங்கப் படுகின்றன. இவை பற்றிய தகவல்களை: ஒன்ராரியோவில் முதியோருக்கான திட்டங்களும் சேவைகளுக்குமான வழிகாட்டி என்ற நூலில் பெறலாம்.

## தமிழ் முதியோர் சங்கங்கள்

ஒன்ராரியோவில் தமிழ் மக்கள் பரந்து வாழ்கின்றனர். எனவே முதியோர் சங்கங்களும் பரந்து காணப்படுகின்றன. இவற்றுள் சில பற்றிய தகவல்களே கிடைக்கப்பட்டுள்ளன.

## 1. ஒன்ராரியோ முது தமிழர் மன்றம்

இது 1986 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதுதான் கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதல் தமிழ் முதியோர் சங்கம். இதில் ஏறக்குறைய 2,770 உறுப்பினர்கள் உள்ளனர். எனினும் 1,300க்கும் அதிகமான-வர்களே அதிக ஈடுபாடு கொண்டுள்ளனர். யோகா, உடற்பயிற்சி, ரய்ச்சி (Taichi) வகுப்புகள் செவ்வாய், வியாழன், வெள்ளி நாட்களில் நடத்தப்படுகின்றன. இதைத்தவிர உடற் சுகாதாரம், முதியோர் தேவைகள், சேவைகள் குற்றத்தடுப்புப் பற்றிய பேச்சுக்கள், கலந்துரையாடல்களும் நடத்தப்படுகின்றன. பெண்களுக்கான கைவ-ினை வேலைகள், தையல் வகுப்புகள் ஆகியன, பண்டிகைகளும் கொண்டாடப்படுகின்றன. உள்ளூர் சுற்றூலாக்களும், வெளிநாட்டுச் சுற்றுலாக்களும் ஒழுங்கு செய்யப்படுகின்றன. இத்துடன் கணினி வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

தலைவர் : மாயா கந்தையா செயலர்: சிவனேசன் சின்னையா
பொருளர் : ம.வி.ஜெகனாதன்.
மின்னஞ்சல் : admin@seniortamilcentre.com
தொலைபேசி 416.496.2897

## யோக் பிரதேச முது தமிழர் மன்றம்

இது 2007 நவம்பரில் 25 உறுப்பினருடன் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 100க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். இங்கு யோகா, உடற்பயிற்சி வகுப்புக்களும் பேச்சுக்கள் கலந்துரையாடல்களும் சுற்றுலாக்களும் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

தலைவர்: சிவானந்தன் செகராஜசிங்கம்
செயலர் : மூர்த்தி செல்லத்துரை
பொருளர் : வி.சுப்பிரமணியம்.
மின்னஞ்சல் yrst@live.ca
வலைத்தளம் :yorkregionseniortamils.com

## பீல் முதியோர் தமிழ்ச் சங்கம்

இங்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

தொலைபேசி : 905.290.3000
விலாசம்: 3085, Hurantario Street ,Unit 215, Missisauga, L54 YE4

## மல்வேண் தமிழ் முதியோர் சங்கம்

இது மல்வேண் குடும்பமூலவள நிலையத்தால் தமிழ் முதியோருக்கென நடத்தப்படுகிறது. திங்கட்கிழமைகளில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இத்துடன் கைவினை வேலைகள், கணினி வகுப்புகள், யோகா வகுப்புகள் ஆகியனவும் நடத்தப்படுகின்றன.

தொலைபேசி: 416.281.1376

## ஹாமனிஹோல் முதியோர் சங்கம்

இது பல்வேறு இனச்சமூக முதியோருக்குச் சேவைகள் வழங்குகிறது. தமிழ் முதியோருக்கான சேவைகள் 2001 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. இங்கு செவ்வாய்கிழமைகளில் 9 முதல் 4 மணி வரையும் புதன்கிழமைகளில் 12:30 முதல் 4 மணி வரையும் பல்வேறு வகுப்புக்களும் சேவைகளும் வழங்கப்படுகின்றன.

தொடர்பு : ஊர்மிளா அல்லது ராஜி - 416.752.0101
விலாசம்: 2 Gower Street ,Toronto, ON, M4B 1E2.

இன்னும் பல முதியோர் சங்கங்கள் உள்ளன அவை பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை.

---

ரொறன்ரோ தமிழ்ச்சங்கம்

## மாதாந்த இலக்கிய கலந்துரையாடல்

தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் பெண்
உரை: முனைவர் பார்வதி கந்தசாமி

**சிறப்பு விருந்தினர்கள் உரை**

சங்ககால ஔவையின் ஆளுமை அம்சங்கள் - விமலா பாலசுந்தரம்
விலைமகளிர் சமூக அசைவியக்கத்தில் மாதவியும் மணிமேகலையும் - மீரா இராசையா
ஆண்டாள் பாடல்களில் மரபும் மாற்றமும் - தேன்மொழியாள் கங்காதரன்
ஆவணி மாத இலக்கிய நிகழ்வுகள்: ஐயந்தெளிதல் அரங்கு

**நாள்:** 27.09.2014 **நேரம்:** மாலை 3:00 முதல் 7:00 வரை
**இடம்:** ரொறன்ரோ தமிழ்ச்சங்கம், A, 5637, Finch Avenue East, Scarborough, M1B 5k9
தொடர்புகளுக்கு: அகில் - 416.822.6316
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்



# திரை விமர்சனம்...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

முன்னால் வாங்கிக்கொள்வதாக சொல்கிறார் அபு. அப்படியும் பணம் போதாமல் பசுவை விற்கிறார்கள். பசு போகும் போது ஆயிஷாவின் கண்கள் கலங்குகிறது. ஆனாலும், ஹஜ் பயணத்துக்குத் தேவையான பணம் சேர்ந்துவிட்டதால் அபுவும் ஆயிஷாவும் நிம்மதியடைகிறார்கள். பயணம் உறுதியாகிவிட்ட திருப்தியில் சுற்றத்தார்கள் ஒவ்வொருவரிடமாக விடைபெறுகிறார்கள். அவர்களுக்கு ஏதாவது கெடுதல் செய்திருந்தால் மன்னித்துவிடுமாறு வேண்டுகிறார்கள். இதனால் நெகிழும் சுற்றத்தார்கள் இவர்களை ஆரத்தழுவி கண்ணீர் மல்குகிறார்கள். முன்பொரு காலத்தில் அபுவிடம் நிலத்தகராறில் சண்டையிட்ட சுலைமான் வாதம் வந்து படுத்துக் கிடக்கிறார். அவரிடம் சென்று தன்னை மன்னிக்குமாறு கேட்கிறார் அபு. சுலைமான் இவரின் கைகளை பிடித்துக்கொண்டு அழுகிறார்.



பயணத்துக்காக பையில் துணிமணிகளை எடுத்துவைத்து தயாராகிக் கொண்டிருக்கும் நிலையில் ஒரு தடங்கல் வருகிறது. மீதிப் பணத்தை வாங்க ஜான்சன் மரக்கடைக்கு செல்கிறார் அபு. சிரித்த முகத்துடன் அவரிடம் ஐம்பதாயிரம் பணத்தைக் கொடுக்கிறார் ஜான்சன். கைகள் நடுங்க ஒரு வெற்றிக் களிப்புடன் வாங்கிக்கொள்கிறார் அபு. பிறகு, மெல்லத் தயங்கியவாறே ஜான்சன் அவரிடம், வெட்டிய பிறகுதான் பலா மரம் உள்ளீடற்று இருப்பது தெரிந்தது என்றும், அது பலகை செய்ய பயன்படாது, விறகாகத்தான் பயன்படுத்த முடியும் என்றும் கூறுகிறான். அதிர்ச்சியில் உறையும் அபு, பின் ஏன் எனக்கு பணம் தந்தாய்' என்று ஜான்சனிடம் கேட்கிறார். அதற்கு ஜான்சன், நீங்கள் நல்லபடியாக மக்கா போகவேண்டும. வியாபாரத்தில் நஷ்டம் சகஜம்தான். சந்தோஷமாக ஹஜ் சென்று வாருங்கள், வந்து பார்த்துக்கொள்ளலாம்' என்று கூறுகிறான். உனக்கு நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டு அந்தப் பணத்தில் ஹஜ் செல்வது பாவம். ஹஜ் செல்பவர்கள் திரும்பி வருவார்கள் என்கிற எந்த நம்பிக்கையும் எனக்கு இல்லை. அங்கே இறந்தால் உடலைக்கூட நாங்கள் திருப்பிக் கொண்டு வருவதில்லை' என்று சொல்லி பணத்தை திருப்பி கொடுத்துவிடுகிறார். விஷயம் கேள்விப்பட்டு கோவிந்தன் வாத்தியார் தயங்கியவாறே அபுவிற்கு ஒரு ஐம்பதாயிரம் கொடுக்க முற்படுகிறார். ஆனால், கடன் வாங்கி தான் ஹஜ் செல்ல விரும்பவில்லை என்று அபு மறுத்துவிடுகிறார். டிராவல் ஏஜெண்ட் அஷ்ர.ஃப், ஐம்பதாயிரம் நான் தருகிறேன். இறந்து போன என் பெற்றோர்களை பணத்தட்டுப்பாடினால் ஹஜ் அனுப்ப முடியாத குறையை உங்களை அனுப்பி தீர்த்துக் கொள்கிறேன்' என்கிறான். 'உங்களைப் போன்ற ஒரு மகனைப் பெற்றதனால் அவர்கள் ஆயிரம் முறை ஹஜ் சென்ற பலனை அடைந்துவிட்டார்கள்' என்று கூறி வெடித்து அழும் அபு, அஷ்ர.ஃபின் உதவியையும் மறுத்துவிடுகிறார். ஆயிசா, அபுவை மட்டும் ஹஜ் போய் வருமாறு கேட்கிறாள். அதற்கும் மறுத்துவிடும் அபு, இரவு உணவின் போது ஆயிசாவிடம், விற்ற கால்நடைகளை திரும்ப வாங்க வேண்டும் என்று சொல்கிறார்.

மறுநாள் காலை பள்ளியில் பாங்கு ஓதும் ஓசை கேட்கிறது. பணம் மட்டும் இருந்திருந்தால் நாம் இந்நேரம் மெக்காவில் அந்தக் கூட்டத்தில் இருந்திருக்கலாம்' என்று சொல்லி ஆயிஷா கண் கலங்குகிறார். 'படைத்தவனை பழிப்பதற்கு நமக்கு உரிமையில்லை' என்று கூறும் அபு, 'பலாமரத்தை வெட்டினது படைச்சவனுக்கு பிடிக்காம இருந்திருக்கலாம், அதுவும் ஒரு உயிர்தான் இல்லையா. மீதிப் பணத்தை சேர்த்து, அல்லாவும் அனுமதி கொடுத்தால் அடுத்த வருடம் நாம் ஹஜ் செல்லலாம். பெருநாளான அன்று அழ வேண்டாம். நான் பள்ளிக்கு செல்கிறேன்' என்று சொல்லி கிளம்புகிறார். போவதற்கு முன், வீட்டின் முன் சிறிய பள்ளம் தோண்டி ஒரு பலாமரக் கன்றை நடுகிறார். படம் முடிகிறது. இஸ்லாம் மதத்தின் கூறுகள் படம் நெடுக விரவியிருக்கின்றன. இஸ்லாமியர்களுக்கும் இந்து, கிறிஸ்தவ மதத்தினருக்கும் இடையேயான நெருக்கமான உறவும், இவர்களிடையே பொங்கும் மனித நேயமும், வேறுபாடுகள் கடந்து சக மனிதர்கள் மீதான பரஸ்பர பேரன்பும் நம்மை கனவுலகில் சஞ்சரிக்க வைக்கிறது. கோவிந்தன் வாத்தியார் அபுவிடம், 'இறைவன் முன்னால் மனிதன் சுயநலவாதியாகத்தான் இருந்துவிடுகிறான். ஆனாலும், மெக்காவில் எங்களுக்காகவும் பிரார்த்தனை செய்யுங்கள்' என்று கேட்கும் இடத்தில் நெகிழ்ந்துதான் போகிறது மனம். அதுபோலவே அபூர்வமான ஜான்சன் போன்ற மனிதர்களும்.

படத்தின் மிகச் சிறப்பான அம்சம் பாத்திரங்களுக்கேற்ற நடிகர்களின் தேர்வுதான். அத்தர் விற்பவர், தேநீர்க் கடை நடத்துபவர், குடை வியாபாரி, டிராவல்ஸ் உரிமையாளர், ஆசிரியர், மரக்கடை வியாபாரி, வீட்டிலேயே பால் வியாபாரம் செய்யும் பெண், ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர், சைக்கிளில் பால் விற்பவர் என்று பலவிதமான தொழில்கள் செய்யும் சாமான்ய மனிதர்கள் படம் முழுவதும் நிறைந்திருக்கிறார்கள். எல்லாப் பாத்திரங்களுக்கும் மிகப் பொருத்தமான நடிகர்கள். அபுவாக வரும் சலீம் குமார், ஆயிஷாவாக வரும் ஜரினா வாகப், மரக்கடை ஜான்சனாக வரும் கலாபவன் மணி, முஷ்ர.ஃபாக வரும் முகேஷ், கோவிந்தன் வாத்தியாராக வரும் நெடுமுடி வேணு உட்பட அனைவரின் நடிப்பும் மனதைக் கரைத்து நெகிழ்த்துகிறது. இசை: ஐசக் தாமஸ் கோட்டுக்காப்பள்ளி. ஷெனாய், மாண்டலின், புல்லாங்குழல், தபேலா, சந்தூர் இசைக் கருவிகளை மிகப் பொருத்தமான இடங்களில் மிகப் பொருத்தமாகப் பயன்படுத்தியிருக்கிறார். சலீம் பணத்தை எண்ணும் காட்சிகளில் சந்தூர், புல்லாங்குழல், தபேலா இணைந்து வரும் சிறிய இசைக்கோர்வை ஒரு மகிழ்வை சலீமோடு சேர்த்து நமக்குள்ளும் உண்டாக்குகிறது. மௌனிக்க வேண்டிய தருணங்களில் இசை மௌனிப்பதும் குறிப்பிடத்தக்கது.

மது அம்பாட், கேரளப் பசுமையை தனது ஒளி ஓவியத்தில் ரசிக்க வைக்கிறார். படத்தின் இன்னொரு பாத்திரமாகவே வருகிறது இவரது ஒளிப்பதிவு. இயக்கம்: சலீம் அஹமது. ஒவ்வொரு பாத்திரத்தையும் பார்வையாளர்கள் மனதில் பதிய வைப்பதற்காக முதல்பாதியில் கதையை மிக மெதுவாகவே நகர்த்தி, இரண்டாம் பாதியில் ஆபு ஆயிஷா ஹஜ் பயணம் தடைபட்டுவிடக் கூடாதே என்கிற பதட்டத்தில் நம்மை கட்டிப்போட்டுவிடுகிறார். அதிகம் அறியப்படாத கேரள இஸ்லாமியர்களின் பண்பாட்டையும் பெருநகரங்களின் எந்த வசதிகளும் தொடாத, தினசரி வாழ்க்கைக்கே போராட வேண்டியிருக்கிற வட கேரள கிராமங்களின் வாழ்க்கையையும் அப்படியே பிரதிபலிக்கிறார். இந்திய வெகுஜன சினிமா அடையாளமான பாடல்கள் இதிலும் உண்டு. இதனைத் தவிர்த்திருக்கலாம். எல்லா பாத்திரங்களும் நல்லவர்களாகவே இருப்பது, வாழ்க்கை பற்றிய நம்பிக்கையை தருகிறது என்றாலும், கொஞ்சம் நெருடுகிறது. தமிழ்ப் பதிப்பில், தொலைவில் பேசுபவர்களும் அருகில் பேசுபவர்களும் ஒரே ஒலியளவில் பேசுகின்றனர். இந்த சவுண்ட் இன்ஜினியரிங் குறைபாடு மலையாளத்தில் இல்லை. சக உயிர்கள் மீதான நேசம் எல்லாவற்றையும்விட முக்கியம் என்பதே படம் சொல்லும் சேதி. அதனை பார்வையாளர்களுக்கு கடத்துவதில் 'ஆதாமின் மகன் அபு' வெற்றி பெறுகிறார்.


## யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361


## நான் வாசித்தது

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே. அனுப்புங்கள்
***Vlambaram@sympatio.ca***
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!


## COMMERCIAL UNITS FOR SALE

Main Floor. Retail commercial. Units for quick sale in a reputable. Indoor mall. Tenented. Vacant position Possible. Price included one parking. Heart of scarborough. Close to all amenities. Only a few units available for your business. Only $148,888. (Don't miss)
***Pl. call: 416.315.9397***



கனடா வாழ் துன்னாலை – கரவை மக்கள் மன்றம் நடத்தும் 12ஆவது ஆண்டு

## "ஞானதீபம்" பல்சுவை கலை விழா

**காலம்:** ***September 13, 2014*** சனிக்கிழமை
**நேரம்:** மாலை 5:30
**இடம்:** ***Bur Oak Secondary School (BurOak & Mccowan)***
***933 bur Oak Ave. Markham***

வேல் விவேகானந்தன் 416.418.0477 வெ. சின்னராசா 416.724.4032
வே. சத்தியராஜா 416.291.5853

# எந்தக்கணத்திலும் மனம் நாடுவது!

# எந்தப்பொழுதிலும் மனங்கள் விரும்புவது!






நிரு பிராண்ட்

தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது

**நிரு பிராண்ட் தயாரிப்புக்களே.**






ரொறொன்ரோவின் அடுத்த மேயர் யார்?




உடல் நலக்குறைவால் ரொறொன்ரோ மேயர் றொப் போட் சிகிச்சை பெற்று வருவதால் வரவிருக்கும் மேயர் பதவிக்கான தேர்தலில் வேட்பாளராக விண்ணப்பித்த விண்ணப்பத்தை வாபஸ் பெற்றுள்ளார்.



திடீர் திடீரென பல மாற்றங்கள் …..
நாடகங்கள் பார்ப்பதை இடைநிறுத்தி உலகர் செய்திக்கு திருப்பியதும் பிறேக்கிங் நியூஸ் மேயரைப் பற்றியதுதான்.



உலகரின் மனம் பழையது புதியது எல்லாவற்றையும்...
அகதியாக வந்தபொழுது இமிகிறேசன் வெல்பெயர் ஈ. எஸ். எல். என்பவைதான் அத்துபடி. அதன்பின் லான்டட், சிற்றிசன் அத்தோடு அங்கிங்கென்று உலகவலம்.



லெக்சன் என்றால் என்ன? கட்சியென்றால் என்ன?
கல்விச்சபை, நகரசபை, மாநகரசபை, மத்திய அரசு என்றாலே அறியவும் தெரியவும் விரும்பாதகாலம்.

ஆனால் இன்று எல்லாவற்றிலும் எம்மவர் போட்டியிடுகின்றனர். அடுத்தமாதம் மாநகரசபைத் தேர்தல். தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது.



அன்னம்மாக்கா நீங்கள் சினிமா நியூஸ் பார்க்கிறேல்லியே.
உதயநிதி ஸ்ராலினிட்டை காஜல் அகர்வால் நாற்பது லட்சம் ஏதோ படம் நடிக்க அட்வான்ஸ் வாங்கிப்போட்டு திருப்பிக்குடுக்காமல் பிரச்சினை நடக்குது எண்டு.



ஐ..பொட் அகிலாண்டேஸ்வரி சிரிச்சுக்கொண்டு சொன்னா அது படத்தின்ரை பேர். நண்பேன் டா. நயன்தாராவைப் போட்டு நடிக்கிறாராம். அது பிழைதானே என செக்கண்ட்புளோர் செல்லம்மா ஐ.நா விசாரணையில் அதிர்ந்துபோன ராஜபக்சா போல உலகர் அதிர்ந்துபோனார். சினிமா விடயத்தில் எவ்வளவு அக்கறையாக இருக்கிறார்கள்.

விநாயகர் சதுர்த்தி முடிந்து 3 நாட்களுக்கு பின் ஆட்டிலறி அன்னம்மா பிள்ளையார் கோவிலுக்கு போய்விட்டு வந்து சதுர்த்திக்கு கோயில்லை அவ்வளவு சனம் இல்லையெண்டு சொல்லி ஆட்டிலறி அன்னம்மாவிடம் பேச்சுவாங்கி அழுதது... பிரச்சினை இன்னும் ஓயவில்லை.



தைப்பொங்கல், சித்திரை புதுவருடம், சித்திரா பௌர்ணமி, ஆடி அமாவாசை, புரட்டாதிச்சனி, நவராத்திரி, தீபாவழி பலருக்கு ஞாபகம் வருவதில்லை.

வெள்ளிக்கிழமை நடைபெறும் பல விழாக்களில் அசைவ உணவுகள் சர்வ சாதாரணமாக பரிமாறப்படுகிறது.
அந்தச்சமயத்தில் சமயம் தடுமாறுகிறது….

இன்னும் சிற்றிசன் எடுக்கவில்லையா?
கதைக்கும்போது இடையிடையே செக்கண்ட்புளோர் செல்லம்மா சில பொதுக் கேள்விகளை கேட்டுக்கொண்டிருந்தா. யார் முதல் பிரதமர் எத்தனை மாகாணம், இன்றைய பிரதமர், இடைமறித்த ஐ பொட் அகிலாண்டேஸ்வரி எனக்கு சிற்றிசன் தரமுதல் எத்தினை கேள்விகள் கேட்டவை என்று சொல்ல, உலகரும் ஆட்டிலறி அன்னம்மாவும் பெலத்து சிரித்தனர். ஐ..பொட் அகிலாண்டேஸ்வரிக்கு ஒன்றும் விளங்கவில்லை. அதாவது செக்கண்ட்புளோர் செல்லம்மா இன்னும் சிற்றிசன் எடுக்கவில்லை, அதுதான் ஒவ்வொருநாளும் கேள்வியள் கேட்கிறா என சொன்னா ஆட்டிலறி அன்னம்மா.



குறிப்பிட்ட வயதினருக்கு பரீட்சையின்றி சிற்றிசன் வழங்கப்பட்டது. ஆனால் இனி வயதெல்லை 65 ஆக கூட்டப்பட்டுள்ளது. அடுத்தவருட நடுப்பகுதியில் அமலாக்கப்பட்ட புதிய சட்டம் நடைமுறைக்கு வரலாம்.

ஞாபகம் வருதே செப்ரெம்பர் 15..30



19. மறைமலை அடிகளார் நினைவு தினம் (1950)

19. இசைப்பேரறிஞர் கே.பி. சுந்தராம்பாள் நினைவு தினம்.
(ஒக்ரோபர் 10-1908 – செப்ரெம்பர் 19-1980)



21. சர்வதேச உலகஅமைதி நாள்.

20. புரட்டாதிச்சனி ஆரம்பம்



22. இலையுதிர் காலம் ஆரம்பம்

24. நவராத்திரி விரதாரம்பம்.

24. நாட்டிய பேரொளி பத்மினி நினைவு தினம்.



26. கவிமணி தேசிகவினாயகம்பிள்ளை நினைவு தினம்.

26. லெப்டினன் கேனல் தியாகி திலீபன் நினைவுதினம் (1987)

28. பிரபல நகைச்சுவை நடிகர் (மன்னாரம் கொம்பனி மனேஜர்) கே.ஏ. தங்கவேலு நினைவுதினம் (1994)





30. சரஸ்வதி பூசை ஆரம்பம்

# அந்நியர்களும்...

## 28ஆம் பக்கத்தொடர்ச்சி

28ஆம் பக்கத்தொடர்ச்சி

அல்லது பொய்யாகவிருக்கலாம். எதுவாக இருப்பினும் சரியானபடி நிரூபணமாக வேண்டும். நிரூபிக்கப்படாத ஒன்றினை எவ்விதம் சரியென்றோ அன்றேல் தவறென்றோ ஏற்றுக் கொள்வது? இந்த மூன்று வகையான குழுக்களும் ஒன்றுடன் ஒன்று முட்டி மோதி, போட்டி போட்டுக் கொண்டு தம் பக்கக் கருத்துக்களைக் கூறிக்கொள்ள, விடயம் பொது மக்களிடையே சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பார்கள். அதுபோலவே, அறிவுத்தாகம் உள்ள சாதாரணமாவர்களுக்கு இவர்களது சச்சரவு பல அறிவியல் உண்மைகளை வெளிக் கொண்டுவந்தது.

இப்படியாக, பல முரணான கருத்துக்களைக் கொண்டுள்ள பதமான யூஎவ்ஓ என்ற இனம்தெரியா பறக்கும் பொருட்கள் பற்றிய ஒரு அலசலின் விளைவாக எழுந்ததுதான் இந்த நூல். சாதாரணமாக மனிதர்களிடையே அவர்களுக்கே தெரியாமல் இருக்கும் அறிவியல் வெளிப்பாடுகள் பலவற்றை இந்த நூலில் காணலாம். அட இதுதானா விடயம்! இப்படியா சங்கதி! என உங்களையெல்லாம் வியப்பில் ஆழ்த்தக் கூடிய பல விசயங்களைத் தன்னகத்தே இந்த நூல் கொண்டுள்ளது. சாதாரண விடயங்கள் முதல் விஞ்ஞானச் சங்கதிகள் எனப் பல தரப்பட்ட பகுதிகளையும் மிகவும் எளிமையாக நீங்கள் இப்புத்தகத்தில் காணலாம். இப்படியான நீண்ட ஒரு அறிமுகத்தை, தேவை கருதியே எழுதியுள்ளேன்.

மீதியை அடுத்த தடவையிற் பார்ப்போம்.

இப்படியாக இனம்தெரியாத பறக்கும் பொருட்களின் விடயங்களும் வேற்றுக்கிரக மனிதர்கள் பற்றிய விடயங்களும் பலவகையிலும் மனிதரிடையே பிரபல்யமடைய, மனிதர்கள் இவற்றைப் பல்வேறு கோணங்களிலும் பார்க்கத் தெடங்கி விட்டனர். அவரவர் தத்தமது இயல்புகளுக்கு ஏற்ப ஆய்வுகள் செய்து தமது முடிவுகளை மற்றவர்களுக்கும் கூறத்தொடங்கினார்கள். இதனால் இனம் தெரியாத பறக்கும் தட்டுகள் பற்றி ஆய்வு செய்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகத் தொடங்கியது. பெரும் பணக்காரர்கள், விஞ்ஞானிகள், விமான ஓட்டுனர்கள், வானவியலாளர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் ஆராய்ச்சியில் இறங்கினார்கள். சிலர் தமது முழுநேரத் தொழிலாகவே இதனைச் செய்யத் தொடங்கினார்கள். சிலருக்கு அரசாங்கங்களின் உதவிகள் கூடக் கிடைத்தன. இனம் தெரியாத பறக்கும் தட்டுகளைப் பற்றிய ஆய்வுகளைச் செய்பவர்களை யூஎவ்ஓலோயிஸ்ர் (UFOlogists) எனக் கூறினார்கள். இவர்களது கருத்துக்களை ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் என்பவர்கள் சாதாரண மக்களுக்கும் பலவழிகளில் தெரிவிக்கத் தொடங்கினார்கள். பல்வேறு கருத்துக்களை இந்த யூஎவ்ஓலொயிஸ்ர்கள் கொடுத்ததினால் இந்த யூஎவ்ஓலொயிஸ்ர்கள் அதாவது இனம்தெரியாத பறக்கும் பொருட்களின் ஆய்வாளர்கள் பலவகையான குழுக்களாகப் பிரிக்கப்பட்டார்கள். இக்குழுக்கள் உத்தியோகபூர்வமானவை அல்ல. சாதாரண மனிதர்களாகிய எங்களின் தெரிவுகள்தான் என்பதை மனதிற் கொள்வோம்.

அக்குழுவினர்கள் ஏலியன் விடயம் பற்றி என்னென்ன கூறுகின்றாரர்கள் என்பதனை அடுத்த தடவையிற் பார்ப்போம்.

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# GAS STATIONS/BUSINESSES FOR SALE




**Colombia Way/ Hwy 50**
Sale Of Business
Without Property
Gas Stations
$199,000
Golden Opportunity To Own Operate Family Gas Bar In Gta




**Peterborough**
Sale Of Business
With Property
Convenience/Variety
$375,000
Excellent Location, Rare Opportunity To Own & Operate A Well Established (35 Yrs) Branded C Store, "Daisy Mart".

**AMCO PETROLEUM** — PRICE REDUCED

**Minden Hills**
with 7 Acre Land &2-1BR Apt
Sale Of Business
With Property
Gas Stations
$459,000
Well Established Enroute Stop Over On Busy Hwy 503




**GTA**
3 Bay
Coin Car Wash
with 2 vacuum
& Vending Machine
Asking only $259,000
Lease 10+10 . Rent $4000+TMI/ Month




**Waterloo**
Beverly/Wellingto
Sale Of Business
With Property
Gas Stations
$1.3M
Plus Stock
Busy Corner Location Next To City Hall Surrounded By Appts&Houses. Lots Of Walk In Loyal Customer




**Kingston**
Division St /Benson St
Sale Of Business
With Property
Gas Stations
$1.8M
Plus Stock
Well Established And Maintained Busy Shell Gas Station In Fast Growing Kingston City



**Brantford**
King George Rd/HWY 403
Sale Of Business
With Property
Gas Stations
$1.9M
Plus Stock
Excellent Opportunity To Own A # 1 Branded Esso Otr Gas Station In Urban Town



**Taviscott ESSO**
Oxford County
Gas Station,
Plaza
& 2 storey house
$2.5M
Plus Stock
Totally Renovated and Just an Hour from GTA



**Toronto**
Dundas / Windermere
Sale Of Business
With Property
Gas Station & More
$6.5M
Plus Stock
CANGO Gas Station. Leased for 30,000/Month



**Peterborough**
Park Rd / Monaghan
Gas Station
and Plaza
with Property
$1.5M
Plus Stock
well maintained and managed



**GTA Square Beauty Salon With Property**
$369,00
Plus Stock
Well Established Beauty, Spa & Salon In A Busy High Traffic Indoor Mall



## Nel Ketha
Sales Representative
**416.677.4707**

## Smart Real Estate Solutions

HomeLife GTA Realty Inc. Brokerage
Tel: 416.321.6969, Fax: 416.321.6963
www. homelifegtarealty.com
203-5215 Finch Ave E. Scarborough, ON, M1S 0C2

CCIM Individual Member

---

உங்கள் பிள்ளைகளின் முன்னேற்றமான எதிர்காலம் இங்கு ஆரம்பமாகிறது

# NETKRAM
**GIVING THE GIFT OF EDUCATION**
ADVANCE AND NEW

கணித வகுப்புகள், ஆங்கில வகுப்புகள், பிரெஞ்சு வகுப்புகள், பாடசாலை வீட்டுவேலை வகுப்புகள்.

## MATH CLASSES
**For Grade 1 - 12**
INDIVIDUAL APPROACH FOR EACH STUDENT
(ADVANCE EXPLANATION)
தனிப்பட்ட முறையிலும் வகுப்புகள் நடத்தப்படும்

## SPECIAL KIDS COMPUTER CLASS
> PROGRAMING LOGIC
> SKILL BUILDING ACTIVITIES

## FRENCH & ENGLISH READING CLASSES

## HOME WORK CLASSES
Math
English
French
Other Subjects
GRADE 1 TO GRADE 6 ENGLISH AND FRENCH MEDIUM

மாதாந்தத் தேர்வுகள் கணினி மூலம் கற்பிக்கப்படும்

உயர்தர வகுப்புகள்
**Math for HIGH SCHOOL**
**French for HIGH SCHOOL**
**English for HIGH SCHOOL**

எமது உயர்வகுப்பு மாணவர்கள் அதி உயர் புள்ளிகள் பெற்று (Honor) சித்தியடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது

சிறந்த முறையில் வடிவமைக்கப்பெற்ற பாடநெறி முறைகளும், வழிநடத்தலும் அதி உயர் புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு தொழிற் பயிற்சியளிக்கப்படும்

## ADVANCE CLASSES
- UML
- PHP
- ASP.NET
- ASP
- JAVA
- C++, C#
- VISUALBASIC.NET
- DATABASES
- PC-TECHNICIAN
- A+ CERTIFICATION

**OFFICE 2010/2007**
WORD
EXCEL
POWERPOINT
ACCESS
OUTLOOK
} Microsoft Office Specialist (MOS) Certification

**INTERNET PROGRAMMING ( I )**
HTML
CSS
XML

**INTERNET PROGRAMMING ( II )**
Javascript
Server Side Web Development
} Internet Webmaster Certification

**JOB TRAINING FOR QUALIFIED STUDENTS**

## COMPUTER
மின்கணனியில் பிரச்சனையா?
சிறந்த முறையில்
திருத்தி அமைத்து கொடுக்கப்படும்
-REPAIR -SALES
-UPGRADE
-SERVICES

**opening hours**
Mon - Thu : 4:00 PM - 9:00 PM
Sat - Sun : 9:00 AM - 5:00 PM

**Contact : 905 - 471 - 1230**
**30 New Delhi Drive, Unit 68**
**Markham and 14th Avenue**

www.netkram.com

"Let me help you make the right choice"

Schuren Sriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393



BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL

Vany Jeganmohan
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca

HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6962
GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2
Higher Standards Agents... Higher Results!™



BMO Bank of Montreal
Thanusha Rajadurai
Mortgage Specialist
BMO Bank of Montreal
Greator Toronto Area
Tel.: 905-301-5160
Cell: 416-312-5047
Fax: 905-587-4799
thanusha.rajadurai@bmo.com
bmo.com/ms/thanusharajadurai
A part of BMO Financial Group

Great options for all your mortgage needs...
Lowest interest rates and best pre - payment options.
Pre - Approvals
Renewals & Refinance
Home Equity Line of Credit



RBC Insurance
Mahindan Mailvaganam, M.Sc.
Insurance Advisor
Life and Living Benefits
RBC Life Insurance Company
111 Grangeway Avenue
Scarborough, ON M1H 3E9
mahindan.mailvaganam@rbc.com
RBC Insurance: Home / Auto / Life / Health / Travel / Business / Retirement
Tel: 416-262-4973
Fax: 905-394-6048
Save an average of $695. Combine car and home plus life insurance.





TD Canada Trust வங்கியில் அனைத்து Mortgage கடன் வசதிகள் பெற்றுக்கொள்ள
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692
1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Low Mortgage Rates



அகத்தின் அழகு முகப்பில் தெரியும்......
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

Free Real Estate Class - Call: 416.321.6969

RealEstate / Mortgage / Commercial Investments



HWY 48 & BLOOMINGTON
LEASE (4500 sq.ft)
Bedroom : 3
Washroom: 5
Price : $1400



BALDWIN & WINCHESTER (WHITBY)
Bedroom : 3
Washroom: 4
Price : $398,000



MARKHAM & FINCH
Profitable knit wear Business + Building
Sales Over 700k
Price : $865,00



FREELAND & LIBERTY ST (COURTICE)
Bedroom : 4
Washroom: 3
Price : $339,900



BRIMLEY & EGLINTON
CONVENIENCE STORE FOR SALE
Price: $650,900
Lease: $2600



KENNEDY & HWY 401
Bedroom : 2
Washroom: 2
Price : $319,900
900 Sq.ft



MORTGAGE ALLIANCE
RE/MAX Dynasty Realty Inc
A. Anton Jeeva B.Eng
Principal Mortgage / RealEstate Broker
Ranked among the top 1% of all Realtors in the GTA
Mortgage Rates Starting From 2.5%
Dir: 416.575.5055
Remax Dynasty Realty Inc., Brokerage 8 Shadlock St, Unit #7 Markham, ON L3S 3K9

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com www.tamilvanakkam.com

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell
RE/MAX
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
All-Stars Realty Inc., Brokerage
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit
கவலை வேண்டாம்
Guaranteed Result



MORTGAGE ALLIANCE
The Guardian
Mortgage In Trouble?
Need a Mortgage?
- Residential & Commercial Mortgage
- 2nd Mortgage
- Purchase & Refinance
- Renewal & Switch
- Home Equity Loan

We're Hiring New Agents

Gini Annarasa
Mortgage Broker Lic: #M08003350
Email: gini.annarasa@gmail.com
Cell: 416.830.3241
Franchise Of The Mortgage Alliance Network
*Independently Owned & Operated



Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)



For All your Real Estate & Investments Needs!
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969
* INDEPENDENTLY OWNED AND OPERATED